பக்கங்கள்: 24

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 20 ஞாயிற்றுக்கிழமை 04.03.2018 கதிர் 119

காலைக்கதிர்
Kalaikkathir

விளம்பர சேகரிப்பாளர் பணிக்கு ஆள்கள் தேவை.

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள
021 222 2600, 077 311 9298, 075 313 2876

# வடக்கு – கிழக்குக்கு தனித்தனி விசேட ஜனாதிபதி செயலணி

## அபிவிருத்தியை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கு மைத்திரி திட்டம்

மட்டக்களப்பு, மார்ச்.04

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலமாக இடம் பெற்ற போரினால் பின்னடைந்துள்ள அபிவிருத்தி நடவடிக் கைகளை வினைத் திறன்மிக்க வகையில் முன்னெடுப்பதற்கு இரண்டு விசேட ஜனாதிபதி எசயலணிகள் அமைக்கப்பட வுள்ளன.

மட்டக்களப்பில் வைத்து நேற்று இதற்கான அறிவிப்பை வெளியிட்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பக்கம் 22



## ஜனாதிபதிக்குக் கிழக்கில் சுமனரத்ன தேரர் எதிர்ப்பு



மட்டக்களப்பு, மார்ச் 04

ஜனாதிபதியின் மட்டக்களப்புப் பயணத் துக்கு எதிராக, மட்டக்களப்பு மங்களராமய விஹாரையின்

பக்கம் 22

## காணாமற்போனோர் பணியக கிளைகள் வடக்கு – கிழக்கில்

கொழும்பு, மார்ச் 04

காணாமற்போனோர் பணியகம் பிராந்தி யச் செயலகங்களை அமைக்க முடியும் என்றும், அதற்குக் காணாமற்போனோர் பணியகச் சட்டத்தில் இடம் உள்ளதாகவும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலர்

பக்கம் 22

## யாழ். கோட்டையை தந்தால் காணிகளை விடுவிப்போம்!

### 'செக்' வைக்கிறது இராணுவம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணக் கோட்டை யைத் தமது பாவனைக் காக ஒப்படைத்தால் இரா ணுவ முகாங்களை அங்கு நகர்த்திவிட்டுத் தாம் வைத்திருக்கும் மக்களின் காணிகளை விடுக்க முடி யும் என்று இராணுவத்தி னர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டச்செயலா ளர் நா.வேதநாயகன் இந்தத் தகவலை நேற் றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட டம் யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இராணுவம் மற்றும் பொலிஸார் வசமுள்ள மக் களின் காணிகளை விடுப்பது தொடர்பான கோரிக்கை கூட்டத்தில்

பக்கம் 03

## வடக்கில் போதையின் பாதிப்பு: நீண்ட நேரம் வாதப்பிரதிவாதம்

### யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டத்தில்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட ஒருங்கி ணைப்பு குழுக் கூட்டத்தில் நேற்று நீண்ட நேரம்

பக்கம் 22

## ஓட்டோ மோதி முதியவர் சாவு!

### வல்லைவெளியில் நேற்றிரவு சம்பவம்

வடமராட்சி, மார்ச் 04

வடமராட்சி வல்லைவெளியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் முதி யவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று இரவு 8 மணியளவில் இந்த விபத்து

பக்கம் 03

## இனிது ரகசியம் அல்ல!

எனது பழைய தொல்லைபேசி நண் பர் நேற்று மாலை மீண்டும் அழைப்பு எடுத்தார்.

இதுவரை இந்தியத் துணைத் தூது வராகப் பணியாற்றிய ஆ.நடராஜனுக்கு தூதரகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பிரியாவிடையை ஒட்டி இந்த நண்பர் என் னைத் துளைத்

பக்கம் 03

## காணாமற்போனோர் விடயத்தில் நம்பிக்கை இழந்துள்ளனர் மக்கள்

### பணியக உருவாக்கம் குறித்து சுமந்திரன்



கொழும்பு, மார்ச் 04

மக்கள் நம்பிக்கையிழந்த பின் னரே, இலங்கை அரசு காணாமற் போனோர் பணியகத்தை உருவாக் கியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பணியகத்துக்கான உறுப் பினர்கள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவினால், நியமிக்கப்பட்டுள் ளமை தொடர்பா

பக்கம் 22

## 25 வீதப் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யாத கட்சிகள் சிக்கலில்

கொழும்பு, மார்ச் 04

25 சதவீதப் பெண் பிரதி நிதித்துவத்தை உறுதிப் படுத்தாத கட்சிகளின் பெயர்ப் பட்டியல் வர்த்த மானியில் சேர்க்கப்பட மாட்டாது என்று மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா தெரிவித்துள் ளார்.

உள்ளூராட்சி மன்றங் களுக்கான 25 சதவீதப் பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டுள்ள

பக்கம் 22

## முல்லைத்தீவில் சிப்பாய் சாவு!

முல்லைத்தீவு, மார்ச் 04

முல்லைத்தீவில் சுக யீனமுற்றிருந்த நிலை யில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று உயிரிழந் துள்ளார்.

அளம்பில் இராணுவ முகாமைச் சேர்ந்த இரா ணுவச் சிப்பாய் ஒருவர் வைரஸ் நோய் தாக்கத் தின் காரணமாக மாஞ் சோலை வைத்திய

பக்கம் 22

## மீண்டும் ஓர் முள்ளிவாய்க்கால் வேண்டாம்!

### சிரியப் படுகொலைகளுக்கு எதிராகப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு, மார்ச் 04

சிரியாவில் இடம் பெற்று வரும் மனிதப் படுகொலையை ஐ.நா. தடுத்து நிறுத்தவேண்டு மென வலியுறுத்தி, வலி சுமந்த மண்ணான முல் லைத்தீவு மாவட்டத்தில் இறுதிப் போரில் மாபெ ரும் அழிவுகளைச் சந் தித்த முள்ளிவாய்க் காலில் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று முன் னெடுக்கப்பட்டது.

வடக்கு இளைஞர்கள் மற்றும் அரசியல்வாதி களின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

சிரியாவில் இடம் பெற்று வரும் மனிதப் படு கொலையைக் கண்டித்

பக்கம் 22




## அம்பாறை சம்பவம்: பிணையில் சென்றோர் மீண்டும் கைதாவர்

கொழும்பு, மார்ச் 04

அம்பாறைச் சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்வதற்கு உதவி செய்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பொலி ஸாருக்கு எதிராகத் தயவு தாட்சண்யமின்றி நடவ

பக்கம் 22

# வவுனியா வைத்தியசாலை ஊழியர் நூதன முறையில் பணம் மோசடி!

## பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடு

வவுனியா பொது வைத்தியசாலை ஊழியர் ஒருவர் நோயாளி ஒருவரின் மனைவியிடம் நூதன முறையில் பண மோசடியில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் வவுனியா பொது வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார உதவியாளரான பா.நாகேந்திரன் என்பவரே ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பண மோசடி செய்துள்ளார் எனப் பாதிக்கப்பட்ட பெண் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாரடைப்பால் பாதிக்கப்பட்ட தனது கணவரை வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்த அந்தப் பெண்ணிடம், உங்கள் கணவருக்கு விசேட சிகிச்சை அளிப்பதன் மூலம் உடனடியாக காப்பாற்ற முடியும். பெரிய வைத்தியரிடம் சொல்லி அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய முடியும்.

மருந்துகள் வெளியிலிருந்து வாங்க வேண்டும் எனத் தெரிவித்து சுகாதார உதவியாளரான நபர் பணம் கேட்டுள்ளார்.

தனது கணவரை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்ற அவசரத்தில் தனது நகைகளை அடைவு வைத்துப் பணத்தை அந்த ஊழியரிடம் கொடுத்தார் என்றும், அதன் பின் அந்த ஊழியர் தலை மறைவாகிவிட்டார் என பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

வங்கியில் தனது நகைகளை அடைவு வைத்துப் பணத்தைச் சுகாதார உதவியாளரான நபரிடம் கொடுக்கும் வீடியோக் காட்சிகள் வங்கியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள் என எனத் தெரிவித்த பாதிக்கப்பட்ட பெண், அந்த வீடியோவைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்த மோசடி தொடர்பாக கடந்த 8ஆம் திகதி வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு முறைப்பாடு எழுத்து மூலம் வழங்கப்பட்டது. இதனடிப்படையில் கடந்த 20 ஆம் திகதி பணிப்பாளரினால் விசாரணை ஒன்று நடத்தப்பட்டபோதும் மோசடியில் ஈடுபட்ட பணியாளர் விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை. முறைப்பாடு செய்த நாளிலிருந்து அந்த நபர் வைத்தியசாலையிலிருந்து நீண்ட விடுமுறையில் சென்றிருந்தார்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடந்த 14ஆம் திகதி பண மோசடி தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று முன்தினம் சுகாதார உதவியாளரான அந்த நபர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த மோசடி தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டபோதிலும் சம்பந்தப்பட்டவர் மீது பொலிஸார் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனப் பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார்.

இதன் காரணமாக கொழும்பிலுள்ள இலஞ்ச ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளேன் என அந்தப் பெண் மேலும் கூறினார். (ஐ - 100)

# காணாமற்போனவரின் மனைவியும் பணியக உறுப்பினர்களில் ஒருவர்!



கொழும்பு, மார்ச் 04

காணாமற்போனோர் பணியகத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஏழு பேரில், காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் மனைவியான ஜெயதீபா புண்ணியமூர்த்தியும் அடங்கியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 28ஆம் திகதி, சாலிய பீரிஸ் தலைமையிலான காணாமற்போனோர் பணியகத்தின் 7 உறுப்பினர்களையும் நியமித்துள்ளார்.

இந்த ஏழு உறுப்பினர்களில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஜெயதீபா புண்ணியமூர்த்தி என்ற பெண்ணும் ஒருவராவார். இவர், காணாமல் ஆக்கப்பட்ட பத்மசிறி என்பவரின் மனைவியாவார்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த நான்காவது நாள், மட்டக்களப்பில் இவரது கணவன் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்.

இதையடுத்து, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியும் போராட்டங்களில் ஜெயதீபா புண்ணியமூர்த்தி தீவிரமாக ஈடுபட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மர்மப் பொருள் வெடித்து மாணவி ஒருவர் படுகாயம்

கெக்கிராவையில் மர்மப் பொருள் ஒன்று வெடித்து மாணவியொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கெக்கிராவை நகருக்கு அருகிலுள்ள மல்தெனிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் அண்மையில் தான் கண்டெடுத்த இரும்பு உருளையொன்றை வீட்டில் கொண்டு வந்து வைத்துள்ளார். அந்த உருளையுடன் நேற்றுமுன்தினம் அவரது புதல்வி விளையாடிய நிலையில் அது பெரும் சத்தத்துடன் வெடித்துள்ளது.

இதன்போது சிறுமியின் தலை மற்றும் பாதங்களில் கடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளமையுடன், வீடும் சேதமடைந்துள்ளது.

காயமடைந்த சிறுமி கெக்கிராவை நகரிலுள்ள பாடசாலையொன்றின் மாணவி என்றும், கெக்கிராவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், பாரதூரமான காயங்கள் காரணமாகத் தற்போது அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் கூறப்பட்டது.

மாணவியின் வீட்டில் வெடித்த மர்மப்பொருள் உள்நாட்டுத் தயாரிப்பு வகையைச் சேர்ந்த வெடிகுண்டாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் ஏராளம் ஈயத்துண்டுகள் காணப்படுகின்றமையை வைத்துப் பொலிஸார் இதனைக் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் நாடாளுமன்றம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 04

திருமறைக் கலாமன்றம் நடைமுறைப்படுத்தும் 'சிறுவர்கள் சமூக இணக்கப்பாட்டின் முகவர்களாகிறார்கள்' என்னும் தலைப்பிலான சிறுவர் செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக சிறுவர் நாடாளுமன்ற நிகழ்வு இரண்டாவது தடவையாக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிதொடக்கம் 12.30மணி வரை இல. 286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் பிராந்திய மன்றங்களைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் சிறுவர்கள் கலந்து கொள்ளவுள்ளமையோடு திருமறைக் கலாமன்றத்தின் சிறுவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 35 பேர் சிறுவர் தொடர்பான பிரச்சினை, சமூக ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றில் தமது பங்களிப்பு மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் அனுபவம், சிறுவர் உரிமை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் சமவாயம் என்பன தொடர்பாகவும் உரையாற்றவுள்ளனர்.

கடந்த ஆண்டிலும் இத்தகைய சிறுவர் நாடாளுமன்றம் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




சிரியாவில் நடைபெற்று வரும் மனித குலத்துக்கு எதிரான இனப்படுகொலையை உடன் நிறுத்தவேண்டும் என வலியுறுத்தி நேற்று மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்றனர். (ஐ - 112)

# உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு கிளிநொச்சியில் செயலமர்வு

நடந்துமுடிந்த உள்ளூராட்சிச் சபைச் தேர்தல் மூலம் கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

முற்பகல் 10 மணிக்குக் கூட்டுறவாளர் மண்டபத்தில் ஆரம்பமான இந்தச் செயலமர்வை உள்ளூராட்சி முறைமையும், நல்லாட்சியை உறுதிப்படுத்தலும் என்னும் தொனிப்பொருளில் மக்கள் கௌரவத்துக்கும் உரிமைக்குமான நிறுவகம் ஏற்பாடு செய்திருந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்கு அனைத்துக் கட்சிகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

# வவுனியாவில் தற்கொலைகளை தடுக்க விழிப்புணர்வுப் பிரசாரம்



வவுனியாவில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் தற்கொலைகளைக் கருத்தில் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

'கை கொடுக்கும் நண்பர்கள்' என்னும் அமைப்பு வவுனியா பஸ் நிலையத்திலும், நகரப் பகுதியிலும் நேற்றுக் காலை 9 மணியளவில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது.

மனதில் கவலை, வெறுப்பு, வாழ்வில் துயரம் போன்றன இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறும், உங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உறுதுணையாக 'கை கொடுக்கும் நண்பர்கள்' அமைப்பு இருக்கும் என்றும் துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

இலவசமாகவே தமது சேவைகளை வழங்குவதாகவும், தயக்கம் இன்றி எம்மைத் தொடர்புகொள்ளுமாறும், இரகசியங்கள் பாதுகாக்கப்படும் என்றும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் கடந்த வாரம் 5 பேர் தற்கொலை செய்துள்ளநிலையில் இவ்வாறு துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ -100)

# காணாமற்போனோரின் உறவுகள் திருமலையில் நேற்று போராட்டம்

திருமலை, மார்ச் 04

திருகோணமலை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர் போராட்டத்தின் ஒரு வருட நிறைவு நாளான நேற்றுச் சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு – கிழக்கில் ஒரு வருடத்துக்கு மேலாக தொடர்ச்சியாக வீதிகளில் இருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடத்தப்பட்டும் கையளிக்கப் பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

திருகோணமலையில் உறவுகளால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டத்தின் 366 ஆவது நாள் நேற்றாகும். இதனை முன்னிட்டு உளவுகளால் கவனவீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.



“பிள்ளைக்கு என்ன நடந்தது? எனக்கு அரசின் நிதி எதுவுமே வேண்டாம். எனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்று தான் தெரியவேண்டும். நான் மரணிக்க முன்னர், எனது பிள்ளைக்கு என்ன நடந்தது என்பதை அறியவேண்டும்” என்று தாயொருவர் கண்ணீருடன் வலியுறுத்தினார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிகள் என பல நூற்றுக் கணக்கானோர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (ஐ)

# சிரியப் படுகொலைகளை எதிர்த்து வவுனியாவில் அமைதிப் பேரணி




சிரியாவில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, வவுனியாவில் அமைதிப்பேரணியொன்று இடம்பெற்றது.

வவுனியா சுயாதீன தமிழ் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற இந்தப் பேரணியில், பெருமளவான இளை ஞர்கள் கலந்துகொண்டனர்.

சிந்தாமணி பிள்ளையார் ஆலயத்தில் ஆரம்பித்த இந்தப் பேரணி, கண்டி வீதி வழியாக வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நிறைவடைந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, சிரியாவில் நடக்கும் போரை ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேசமும் உடனடியாக நிறுத்த வேண்டும், நிறுத்து நிறுத்து போரை நிறுத்து, வேண்டாம் வேண்டாம் படுகொலைகள் வேண்டாம், வலி உணர்ந்ததால் வலி அறிகிறோம், அமெரிக்காவே வெளியேறு போன்ற பாதாதைகளையும் கோசங்களையும் எழுப்பியவாறு இளைஞர்கள் பேரணியில் கலந்துக்கொண்டனர். (ஐ-100)

# யாழில் மூதாட்டியின் காதை அறுத்துத் தோடு கொள்ளை!

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணத்தில் மூதாட்டியின் காதை அறுத்து தோட்டை எடுத்ததுடன் தொலைபேசிகள் மற்றும் பத்தாயிரம் ரூபா அளவிலான பணம் என்பவற்றையும் கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் தனிமையிலிருந்த வயோதிபத் தம்பதிகளைக் கடுமையாகத் தாக்கி அங்கிருந்து நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

கொள்ளையர்கள் வீட்டின் புகைக்கூடு வழியே உட்புகுந்ததுடன் வீட்டில் இருந்த வயோதிபத் தம்பதிகளைக் கட்டி வைத்து தாக்கினர் எனக் கூறப்படுகிறது.

வீடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடிய பின் கொள்ளையர்கள் மூதாட்டியின் காதை அறுத்துத் தோட்டை எடுத்ததுடன் தொலைபேசிகள் மற்றும் பத்தாயிரம் ரூபா பணம் என்பவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கோப்பாய் பகுதிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றுள்ளது.

வேலை முடிந்து வல்லை வீதியால் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் மீது ஓட்டோ மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாகவும், சைக்கிளில் பயணித்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும் கூறப்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய ஓட்டோ வீதியில் புரண்டு விழுந்துள்ளதுடன், அதன் சாரதி தப்பியோடியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்வைக்கப்பட்டது. இதன் போதே மாவட்டச் செயலர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

“யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவம் வசமிருக்கும் பல இடங்கள் விடுவிக்கப்படும் என்று அரசால் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவை இன்னும் விடுவிக்கப்படவில்லை. எனவே அவற்றை விடுவிப்பது பற்றிப் பேசுவதற்கு இராணுவத் தரப்புடனான கூட்டம் ஒன்றை மாவட்ட செயலாளர் ஒழுங்கமைக்கவேண்டும். அது தொடர்பில் அரசுடனும் நாம் பேச்சு நடத்துவோம்” என்று இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

“மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரின் தலைமையில் அண்மையில் கூட்டம் இடம் பெற்றது. விடுவிப்பதாக அறிவித்த பகுதிகளிலிருந்து இராணுவ நிலைகளை நகர்த்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். விரைவில் அந்தப் பகுதிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்றும் இராணுவத்தினர் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன், பருத்தித்துறை – பொன்னாலை வீதியும் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் இராணுவத்தால் கூறப்பட்டது.

மேலும் தொல்பொருள்கள் திணைக்களத்திடமிருக்கும் யாழ்ப்பாணம் கோட்டை இராணுவத்துக்கு வழங்கப்படுமாயின் அங்கு இராணுவமுகாங்களை மாற்றிவிட்டு, பெரும்பாலான பகுதிகளை விடுவிக்க முடியும் என இராணுவ அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்தப்படவேண்டும்'' என்று யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் கோட்டையை இராணுவத்தினருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையைத் தான் முன்னெடுத்துள்ளார் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடந்த ஆண்டு தெரிவித்திருந்தார்.

தொல்பொருள் திணைக்களத்தால் தற்போது பராமரிக்கப்படும் யாழ்ப்பாணம் கோட்டை சுற்றுலாத் தளமாக உள்ளது. கோட்டை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டால் அதற்கு அருகில் உள்ள பண்ணை சுற்றலாக் கடற்கரையும் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தின் 2018ஆம் ஆண்டுக்குரிய முதலாவது ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் துறை ரீதியான முன்னேற்ற மீளாய்வுகளில் மீள்குடியேற்றம், கல்வி, குடிதண்ணீர் விநியோகம், போக்குவரத்து, தபால், வீட மைப்பு சுகாதாரம், விவசாயம், மின் விநியோகம், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சிச் சபைகள், வர்த்தக தொழிற்துறை உள்ளிட்ட துறைசார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன், ஈ.சரவணபவன், வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்கள் அ.பரம்சோதி, பா.கஜதீபன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இணைத்தலைவர்களான இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. (ஐ)

## இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெடுத்தமை குறித்து ஏற்கனவே இரண்டொரு தடவைகள் இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்காலாம்.

ஏதோ, வடக்கு மாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன் இந்தியத் தரப்பின் பின்னால் போய் விழுந்து விட்டார் அல்லது இந்தியத் தரப்பின் வலைக்குள் சிக்கிக் கொண்டு விட்டார் என்பது அவரது ஊகம், வாதம், வலியுறுத்தல் எல்லாம்.

அப்படி ஒரு முடிவுக்கு வருவதற்குக் கனகச்சிதமான ஆதாரங்கள் ஏதுமில்லை, அது சும்மா பேச்சு என்ற மாதிரி நான் அவருக்குக் கூறி வந்தேன்.

மீண்டும் தான் கூறியவை தான் சரி என்று நிரூபிக்க மற்றொரு ஆதாரத்தோடு தாம் வந்து குதித்திருக்கின்றார் என்பது போல அவரின் நேற்றைய அழைப்பு அமைந்தது.

*“முதலமைச்சரின்ரை ஏற்பாட்டில் ஞாயிறன்று (இன்று) ஒரு முக்கிய நிகழ்வு ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றது தெரியுமோ?”* – என்றார்.

எனக்கு விளங்கவில்லை. என்ன நிகழ்ச்சி என்றேன்.

*“வடக்கு மாகாண சபையும் இந்தியத் துணைத் தூதுவருக்குத் தனியான பிரிவுபசார விழா நடத்தப் போகின்றது”* – என்றார்.

*“அப்பிடியா?”* – என்றேன்.

பழையபடி நீரும் உம்முடைய செய்தித் தேடல் தகைமையும் என்று திரும்பவும் ஒருக்கால் என்னை ஒரு வாட்டு வாட்டி எடுத்தார். பிறகு விடயத்துக்கு வந்தார்.

*“வடக்கு மாகாண சபையினரோ, அவைத் தலைவரோ, முதல்வரோ தனிப்பட்ட முறையில், விடைபெற்றுச் செல்லும் துணைத்தூதுவருக்கு சேவை நயப்பு நிகழ்வு ஒன்றைச் செய்வது வேறு. ஆனால் இது, வடக்கு மாகாண பேரவை மண்டபத்தில் சபையினால் உத்தியோகபூர்வமாக முன்னெடுக்கப்படும் பிரிவுபசார விழா. துணைத் தூதுவர் ஒருவருக்கு உத்தியோக பூர்வமாக பிரிவுபசாரம் நடத்தும் அளவுக்கு இந்தியச் செல்வாக்குக்குள்ளே மாகாண சபையே போய்விட்டது காணும். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி இந்திய லைன் பிடிக்கும் முதலமைச்சர்தான் இந்த நிகழ்வுக்கு முதலில் பிள்ளையார் சுழி போட்டவராம்.*

*“எங்கே அதை நாங்கள் பகிரங்கமாக எதிர்க்கப்போனால் இந்திய விரோதிகளாக அடையாளம் காணப்பட்டு, அடுத்த முறை மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்பாளர் நியமனம் கிடைக்காமல் வெட்டப்பட்டு விடுவோமோ எண்ட பயத்திலை எல்லோரும் பம்மிக் கொண்டு, வாயை மூடிக் கொண்டு இருக்கினம். இன்னும் சொல்லப் போனால் தாங்களும் சேர்ந்து உந்த நிகழ்வை நடத்திறம் எண்டு இந்தியத் தரப்புக்குக் காட்டுறதிலை சிலர் முண்டியடிக்கினம் எண்டும் கேள்வி”* – என்றபடி மாகாண சபையின் முக்கிய புள்ளிகள் சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டார். ஏன் வீண் சிக்கல் என்று அந்தப் பெயர்களை உங்களுடன் பகிராமல் தவிர்த்துக் கொள்கிறேன்.

*“இந்தியாவோடை சேர்ந்து போனாத்தான் எதுவும் கிடைக்கும் எண்டு முதல்வரே பகிரங்கமாக அறிவிச்சுப் போட்டார். சம்பந்தன் – சுமந்திரன் – மாவை கூட்டை விட இந்திய ஆதரவுப் போக்கிலை தான் ஒண்டும் குறைஞ்சவர் இல்லை எண்டு முதல்வர் பகிரங்கப்படுத்திக் காட்டி நிக்கிறதாலை தலைவலி என்னவோ மாவையருக்குத்தான். எம்.பியாகின்ர குமார் பொன்னம்பலத்தின் கனவு நனவாகாமல் போனமாதிரி, மாவையரின்ரை முதலமைச்சர் கனவும் ‘கானல் நீராகிப்’ போய்விடும் போலை...!”* – என்று ஒரு நீண்ட லெக்ஸர் வைத்தார்.

அவரோடு வாதம் செய்து, பதிலடி கொடுக்க என்னிடம் ஏதும் இருக்கவில்லை.

கொஞ்சம் நெருங்கிப் பழகிய ஒரு துணைத் தூதுவரை கௌரவப்படுத்துவதற்காக ஒரு பிரியாவிடை நிகழ்வை மாகாண சபை ஏற்பாடு செய்தால் அதற்குள் இவ்வளவு அரசியல் வியாக்கியானங்கள் இருக்குமா என்று நான் மனதுக்குள் அங்கலாய்த்துக் கொண்டேன்.

-மின்னல் -

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
அனைத்து வகையான வாகனங்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் 1, 2, 3 வருட கால உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் ஒட்டித்தரப்படும்
108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில் அல்லாடும் ரணில்

'மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்பார்கள். அது பிரிக்கவே முடியாத பிரச்சினைதான். உயிர்போகும் வரை அந்தப் பிரச்சினையும் இருக்கத்தான் செய்யும்.

அதுபோலத்தான் ரணில் விக்கிரமசிங்கவும் பதவியும் போல. அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக வந்த காலத்தில் இருந்தே அவரை அப்பதவியிலிருந்தும், இடையிடையே பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளில் இருக்கும்போது அப்பதவிகளிலிருந்தும், அகற்றுவதற்கு முயற்சிகள் விடாப்பிடியாகத் தொடர்ந்து வந்து கொண்டேதான் இருக்கின்றன. அவரும் விடாக்கண்டன், கொடாக்கண்டன் மாதிரி தம் பதவியை விட்டுக் கொடுக்காது தக்க வைத்துக் கொண்டே இருக்கின்றார்.

அவ்வப்போது கட்சிக்கு வெளியேயிருந்தும் கட்சிக்கு உள்ளேயிருந்தும் அவருக்கு எதிர்ப்புக் கிளம்பும். இதோ ரணில் வீட்டுக்கு அனுப்பப்படப் போகின்றார் என்ற மாதிரி நிலைமைகள், நெருக்கடிகள் சூழ்ந்து வரும். ஆனால் அவர் நிமிர்ந்து, தெளிந்து உட்கார்ந்து விடுவார்.

இப்போது சபாநாயகராகவும் முன்னர் கட்சியின் பிரதித் தலைவராகவும் இருந்த கரு ஜெயசூரிய தலைமையில் ஒரு குழு இவருக்கு எதிராக உட்கட்சிப் புரட்சி செய்து பார்த்து விட்டு, சரிவராத நிலையில் கட்சியை விட்டு வெளியேறி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் போய் அமைச்சர் பதவிகளுடன் இணைந்து கொண்டது. ஆனால், பின்னாள்களில் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினால் அகௌரவமாக நடத்தப்பட்ட சூழலில் அக்குழு வேறு வழியின்றி மீண்டும் ரணில் தரப்பிடம் சரணாகதி அடைந்து கொண்டது.

அப்போது ஏற்பட்ட கசப்பான அனுபவம்தான், இப்போது ரணிலுக்கு எதிராக ஜனாதிபதி உட்படப் பலதரப்பினரும் கொம்பு சீவி விட்டுத் தூண்டிய போதிலும், அதற்கு எடுபடாமல் கரு ஜயசூரிய பின்வாங்கி, அமுக்கி வாசிப்பதுடன் ரணிலுக்குப் பின்னால் - பக்கபலமாக - நிற்பதற்குக் காரணம்.

ஐ.தே.கட்சியின் முன்னாள் தலைவர் பிரேமதாஸாவின் மகனும், ரணிலுக்கு அடுத்து ஐ.தே.கட்சித் தலைவராவார் என எதிர்பார்க்கப்படுபவருமான சஜித் பிரேமதாஸாவும், பல தடவைகள் ரணிலை வீழ்த்திக் கட்சித் தலைமைப் பதவியைக் கைப்பற்ற முயற்சி எடுத்த போதிலும், அவற்றை எல்லாம் முறியடித்து, விழ, விழ எழும் பீனிக்ஸ் பறவையாய் எழுந்து நிற்கின்றார் ரணில்.

சுமார் இருபத்தியைந்துக்கு மேற்பட்ட முக்கிய தேர்தல்களில் ஐ.தே.கட்சி தோல்வி கண்ட பின்னரும் கூட அக்கட்சியின் தலைமைப் பதவியைக் கோட்டை விடாமல் தக்க வைத்துக் கொண்டிருப்பவர் அவர்.

1977 முதல் ஆட்சிக் கட்டில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி 1996 இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை சந்திரிகா குமார துங்கவிடம் பறிகொடுத்தது. அதுவரை ஜனாதிபதியாக இருந்த ஐ.தே.கவின் ரிங்கிரி பண்டா விஜயதுங்க பதவி விலக, அப்போது நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வேட்பாளராகக் குதித்த காமினி திஸநாயக்க கொல்லப்பட்டு, அவரின் துணைவியார் அவரது இடத்துக்கு வேட்பாளராகி அத்தேர்தலில் சந்திரிக்காவிடம் தோற்றுப் போக, அல்லாடி நின்ற கட்சிக்குத் தலைவரானார். அதற்கு முன்னர் வரை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க. எதிர்க் கட்சித் தலைவர் பதவியோடு 1996 களில் தாம் ஏற்ற கட்சித் தலைமைப் பதவியை இற்றை வரை அவர் தொடர்கின்றார்.

எனினும், 1996 இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவி, நாட்டின் தலைவர் என்ற பொறுப்புக்களை எல்லாம் ஏற்றுக் கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இன்னும் அதனை கைவிடவில்லை. சந்திரிகா , மஹிந்த , மைத்திரி என்று சு.கவினர் கைகளிலேயே அந்தப்பதவி கடந்த 22 ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

இடையே 2001 டிசெம்பர் முதல் 2004 ஏப்ரல் வரையும் சுமார் இரண்டே கால் ஆண்டுகளும், பின்னர் 2015 ஜனவரி முதல் இப்போது வரை சுமார் மூன்று ஆண்டுகளும் ஐ.தே.கட்சித் தலைவர் என்ற முறையில் ரணிலுக்குப் பிரதமர் பதவி கிடைத்தது. இந்த 22 ஆண்டுகளில் எஞ்சிய காலம் எல்லாம் பிரதமர் பதவியும் கூட சு.கவிடம் தான் இருந்தது. அந்தக் காலம் எல்லாம் ரணில் எதிர்க்கட்சித் தலைவராகவே விளங்கினார்.

ரணில் தலைமையின் கீழ் ஐ.தே.க. தனது பழைய நிலைமைக்கு - 1977 முதல் 1995 வரை இருந்த உயர்ச்சிக்கு - உயரக் கூடியதான பேரெழுச்சி கிட்டவேயில்லை. ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்குப் பிறகு பிரேமதாஸ , காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத் முதலி என அக்கட்சியின் பெரும் தூண்கள் எல்லாம் விடுதலைப் புலிகளின் இலக்கில் பலியாக, அக் கட்சியை இதுவரை தப்பிப் பிழைக்க வைத்து இந்தக் கட்டத்திலாவது பேணியது ரணிலின் தலைமைதான் என்பதும் மறக்கக் கூடியதல்ல.

ஆனால், இப்போது அவர் எதிர்கொள்ளும் எதிர்ப்பு வித்தியாசமானது. சுதந்திரக் கட்சியில் இருந்து பிரித்தெடுத்து , தமது ஆதரவுடன் தான் ஜனாதிபதியாக்கிய மைத்திரி பால சிறிசேனாவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்குப் போட்டியாக ஐ.தே.க. வேட்பாளராகப் பலம் மிக்க ரணில் விக்கிரமசிங்க வந்து விடக் கூடாது என்பதற்காக அவருக்கு எதிராகக் காய் நகர்த்துகின்றார். இந்த எதிர்ப்பை ரணில் எப்படிச் சமாளிக்கப் போகிறார்? பொறுத்திருந்து பார்ப்போமே...!

# நீண்ட தாமதம் ஏற்பட்டாலும் வரவேற்கத்தக்க நடவடிக்கை

## காணாமற்போனோர் பணியகம் தொடர்பில் சர்வதேசம் வரவேற்பு

கொழும்பு, மார்ச் 04

காணாமற்போனோர் பணியகத்துக்கான தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை, அனைத்துலக நாடுகள் வரவேற்றுள்ளன.

நீண்டகால இழுபறிகளுக்குப் பின்னர், காணாமற்போனோர் பணியகத்தின் தலைவராக சாலிய பீரிஸும், ஏனைய ஆறு உறுப்பினர்களும் கடந்த 28ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காணாமற்போனோர் பணியகத்தின் உறுப்பினர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையை அமெரிக்கா, பிரிட்டன், நெதர்லாந்து, கனடா, உள்ளிட்ட நாடுகள் வரவேற்றுள்ளன.

காணாமற்போனோர் பணியகத்துக்கான தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டமை, நிலையான அமைதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்களுக்கு முக்கியமானதொரு நகர்வு என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் கூறியிருந்தார்.

அதேவேளை, காணாமற்போனோர் பணியகத்துக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ், இது விரைவில் முழுமையாகச் செயற்படவேண்டும் என்றும், எல்லா சமூகங்களுக்கும் காத்திரமான உதவிகளைவழங்கும் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பணியகத்துக்கான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை ஒரு நல்ல செய்தி என்று கூறியுள்ள நெதர்லாந்துத் தூதுவர் ஜோன் டூர்னேவாட், அவர்கள் உடனடியாகத் தமது பணிகளை ஆரம்பிப்பார்கள் என்று நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினொன் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தாலும், இது வரவேற்கத்தக்கது. அமைதியான, நல்லிணக்கத்துடன் கூடிய செழிப்பான இலங்கையைக் கட்டியெழுப்ப இன்னும் அதிகம் செய்வதற்கான கடப்பாட்டை இலங்கை கொண்டுள்ளது. இந்தப் பயணத்தில் ஒரு பங்காளராக கனடாவும் இணைந்திருக்கிறது. ஆனால் உண்மையான முன்னேற்றம் இலங்கையர்களால்தான் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூறியுள்ளார். (ஐ)

# சீனாவைக் குறி வைத்து இந்தியா கூட்டுப்பயிற்சி

## இலங்கைப் போர்க்கப்பல்களும் பங்கேற்பு

கொழும்பு, மார்ச் 04

இந்தியக் கடற்படையின் ஏற்பாட்டில் நடக்கவுள்ள மிலன் - 2018 கடற்படைக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க, இலங்கைக் கடற்படை இரண்டு போர்க்கப்பல்களை அனுப்பி வைத்துள்ளது.



இலங்கைக் கடற்படையின் எஸ்.எல்.என்.எஸ் சமுத்ர, எஸ்.எல்.என்.எஸ் சுரனிமல ஆகிய ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள், இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக நேற்று முன் தினம் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச்சென்றன.

27 அதிகாரிகள் மற்றும் 6 பயிற்சி அதிகாரிகள் உள்ளிட்ட 284 கடற்படையினருடன் இலங்கைக் கடற்படையின் இரு போர்க் கப்பல்களும் எதிர்வரும் 6ஆம் திகதி விசாகப்பட்டினம் துறைமுகத்தைச் சென்றடையும்.

மிலன் - 2018 கூட்டுக் கடற்படைப் பயிற்சி மார்ச் 6ஆம் திகதி தொடக்கி 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் இலங்கை, ஆஸ்ரேலியா, மலேசியா, மொறிசியஸ், மியான்மார், நியூசிலாந்து, ஓமான், வியட்னாம், தாய்லாந்து, தன்சானியா, சிங்கப்பூர், பங்களாதேஸ், இந்தோனேசியா, கென்யா, கம்போடியா ஆகிய 15 நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கவுள்ளன.

மாலைதீவுக் கடற்படைக்கும் இந்திய அழைப்பு விடுத்திருந்தது, எனினும், இந்தியாவின் அழைப்பை மாலைதீவு நிராகரித்து விட்டது.

இந்தக் கூட்டுப் பயிற்சி இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான இந்தியாவின் ஒரு நகர்வாகக் கருதப்படுகிறது. சீனாவும் இந்தப் பயிற்சி தமக்கு எதிராகவே ஒழுங்கமைக்கப்படுவதாகக் குற்றம்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# லசந்த படுகொலை வழக்கு; இருவரின் பிணை நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 04

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி திஸ்ஸ சுகதபால மற்றும் கொழும்பு நகரத்துக்குப் பொறுப்பான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாணயக்கார ஆகியோரின் பிணைக் கோரிக்கைகள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிலையில் இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்காலமான கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி 'சண்டே லீடர்' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்க ஆயுததாரிகளால் வீதியில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இந்த வழக்கு விசாரணை கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகிறது.

இந்தப் படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கடந்த மாதம் குற்றப்புலனாய்வுப் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி திஸ்ஸ சுகதபாலவும், கொழும்பு நகரத்துக்குப் பொறுப்பான முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாணயக்காரவும் அதிரடியாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில்வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரண்டு சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் சார்பாக மன்றில் முன்வைக்கப்பட்ட பிணைக்கான கோரிக்கையை நிராகரித்த நீதிமன்றம், சந்தேகநபர்களை எதிர்வரும் 15ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## நாளை

05.03.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : சித்திரை மு.இ 11.15 வரை
திதி: சதுர்த்தி பி.இ 3.54 வரை
சுபநேரம் : 12.26 – 1.56 வரை
இராகுகாலம் : 7.56 –9.26 வரை

# நைஜீரியாவில் போகோஹரம் தீவிரவாதிகளின் தாக்குதல்

## பதினொரு பேர் உயிரிழப்பு




டிமைதுகுரி,மார்ச் 04

நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் போகோஹரம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று மீட்புப்படை வீரர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் ஒரு மதத்தின் அடிப்படையிலான அரசாங்கத்தை நிறுவவேண்டும் என்ற நோக்கத்துடன் போகோஹரம் தீவிரவாத அமைப்பினர் 2002 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றனர். 2009ஆம் ஆண்டு முதல் அவர்கள் ஆயுதப்போராட்டத்தை கையில் எடுத்துள்ளனர்.

ஆள்களைக் கடத்துவதும், படுகொலைகள் செய்வதும் அவர்களின் அன்றாட வழக்கமாகி விட்டது. சில நகரங்களைத் தாக்குதல் மூலம் கைப்பற்றி அவற்றைத் தங்கள் கட்டுப்பாட்டிலும் வைத்துள்ளனர். அவர்களுடன் இராணுவத்தினர் சண்டையிட்டு தீவிரவாதிகள் பிடியில் இருக்கும் நகரங்களை மீட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வடகிழக்கு நைஜீரியாவில் உள்ள போர்னோ மாகாணத்திற்கு உட்பட்ட ரான் நகரில் உள்ள இராணுவ முகாம் மீது போகோஹரம் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் மூன்று மீட்புப்படை வீரர்கள் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர் என நைஜீரிய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் நான்கு இராணுவ வீரர்களும், நான்கு பொலிஸ் அதிகாரிகளும் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் இருந்து 110 மாணவிகளை போகோஹரம் தீவிரவாதிகள் கடத்திச்சென்றமை குறிப்பிடத்தக்கது.



தவக்கால சிந்தனை

## மனச்சாட்சியே மதிப்பிடட்டும்

இன்றைய வழிபாடு வாழ்வாகிறதா? இதை மதிப்பிட எம் மனச்சாட்சிதான் பதில் சொல்லும் அந்த மனச்சாட்சியை மதிப்பிடும் காலமே தவக்காலம்.

ஆலயங்கள் எல்லாம் அதிக சனக் கூட்டம். வழிபாடுகளில் பங்கேற்போர் வேண்டுதல்கள், தமது குடும்ப அமைதிக்காக வருவோரும், கோரிக்கை, பொழுது போக்குக்கு வருவோரும் வாடிக்கையாளராக வருவோரும் பேருக்கு சமயவாதிகள் எனக் காட்டுவோரும் மலிந்த காலத்தில் எம்மைப் புதுப்பிக்க எமது குடும்பத்தில் ஆன்மிகம் வளர முன்மாதிரியாக வாழ்வோரும் வழிகாட்டிகளும் தமது ஞானத்தை வலுவாக்கி வழிபாட்டை வாழ்வாக்குவோருக்கும் இறை அருளும் ஆசியும் நிறைவாய் கிடைக்கும் என்ற நம்பிக்கைதான் புதுவாழ்வாகிறது.

விலைவாசிகள் அதிகரித்து விட்டன தலைமைகள் முட்டி மோதிக் கொள்கிறார்கள். வீதி விபத்துக்கள் பலரது தலைவிதிகளையே மாற்றி விடுகின்றன. திடீர் இழப்புக்கள், அழிவுகள், பஞ்சம், பட்டினிகள் மௌன கொடூரச் செயல்கள் யாவும் எம்முன்னே வாழ்வுக்குச் சவலாக ஏற்படும் வேளையில் இறைவன் இருக்கிறானா? என முணுப்புக்களும் பக்தர்களுக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தி சந்தேகிக்கும் வேளையில் உங்கள் வேண்டுதல் இறைவனிடம் கேட்கப்படுமா? மனதில் அமைதி உள்ளோருக்கு இயேசு கூறும் வார்த்தைகள் இதோ:-

இனிமேல் "எப்ராயுமுக்குச் சிலைகள் எதற்கு? நானே அவனுக்கு செவி சாய்த்து, அவன் மேல் அக்கறை கொண்டுள்ளேன். நான் பசுமையான தேவதாரு மரம் போன்றவன். உன் கனியெல்லாம் என்னிடம் இருந்தே வரும். ஞானம் நிறைந்தவன் எவனோ அவன் இவற்றை உணர்ந்து கொள்ளட்டும். பகுத்தறிவு உள்ளவன் எவனோ அவன் இவற்றை அறிந்து கொள்ளட்டும் ஆண்டவனின் நெறிகள் நேர்மையானவை. நேர்மையானவர்கள் அவற்றை பின்பற்றி நடக்கிறார்கள். மீறுகிறவர்கள் அவற்றில் இடறி விழுகிறார்கள்"

நாம் ஞானமுள்ளவர்களா, தவறி வீழ்பவரா எமது மனச்சாட்சி எம்மைப் புடமிட்டு தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்க சிலுவைப் பாதை வழி வாழ்வாக்குவோம்.

- செ.யோசப்பாலா

# அமெரிக்காவில் புயல் தாக்குதலில் 5 பேர் பலி



போஷ்டான்,மார்ச் 04

அமெரிக்காவின் போஷ்டான் பகுதியில் ஏற்பட்டுள்ள புயல் காரணமாக 5 பேர் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் வட கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள சக்தி வாய்ந்த புயல் காரணமாக 5 பேர் பலியாகியுள்ளனர். மணிக்கு 129 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்த புயலால் போஷ்டான் நகரெங்கும் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கிறது.

மேலும் ரயில் சேவை நிறுத்தப்பட்டதுடன், விமானங்கள் தரையிறங்குவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

புயலின் தாக்கத்தினால் கிழக்கு கடற்கரை பகுதியின் விர்ஜினியா முதல் மைனே வரையுள்ள 17 லட்சத்துக்கும் அதிகமாக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் மின்சார சேவை முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் அமெரிக்க தலைநகரான வொஷிங்டனில் மணிக்கு 96 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதனால் அங்குள்ள அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. போஷ்டான் பகுதியைத்தாக்கிய இந்த புயலினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# மக்களுக்கு மருத்துவ உதவி; கிடைப்பதை தடுக்கும் சிரியா



சிரியாவில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப்பொருள்கள் செல்லவிடாமல் சிரியா அரசே தடுத்து வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சண்டை நடைபெற்று வருகிறது. அதிபர் பர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியாளர் படை போராடி வருகிறது. இந்த போர் தற்போது உச்ச நிலையை அடைந்து இருக்கிறது. அங்கு நடந்து வரும் இராணுவத் தாக்குதல் காரணமாக கடந்த 12 நாள்களில் மட்டும் சுமார் ஆயிரம் பேர் மரணமடைந்து இருக்கிறார்கள்.

அங்கு 30 நாள்கள் போர் நிறுத்தம் செய்ய ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் தினமும் 5 மணி நேரம் போர் நிறுத்தம் செய்ய சிரியா அரசு ஒப்புதல் அளித்தது. பல்வேறு கோரிக்கைகளுக்கு பின்பு இருதரப்புகளும் தினமும் போர் நிறுத்தம் செய்ய ஒப்புக் கொண்டு இருக்கின்றன. அதே போல் வான் வெளி தாக்குதல் நடத்தப்படமாட்டாது எனவும் ரஷ்யா கூறியுள்ளது.

ஆனால் தரைவழி தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முக்கியமாக கிழக்கு கவுட்டா பகுதியில் தொடர் தாக்குதல் நடந்து வருகிறது. அங்கு பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஐ.நா. உதவிப்பொருள்களை அனுப்பியுள்ளது. 5 மணி நேர போர் நிறுத்தம் போதவில்லை எனவும், உள்ளே சென்று பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணவே நேரம் சரியாக இருக்கிறது என்றும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

அதேசமயம் மருத்துவ உதவிகளை சிரிய அரசு தடுத்து நிறுத்தி வைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. பல இடங்களில் தடுப்புகள் வைக்கப்பட்டு அனைவரும் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்றும், மக்களுக்கு பொருள்கள் கிடைக்கக் கூடாது என்று வேண்டுமென்றே இப்படி செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


# Course for Human Rights



★ மனிதஉரிமைகள் பற்றிய அறிவு உடையவரே உன்னதமான சமூகப்பணியாளராக முடியும்' யாழ் மவாட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மற்றும் சமூக செயற்பாட்டுமையம் இணைந்து நடத்தும் மனித உரிமைகள் தொடர்பான குறுங்கால கற்கைநெறி

Short term course for Human rights

யாழ் மாவட்டத்தில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வலுப்படுத்துதல் மற்றும் ஆளணியை அதிகரிப்பதற்கான பயிற்சிநெறி.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமும், யாழ் சமூக மேம்பாட்டு மையமும் இணைந்து நடத்துகின்றன.

**யார் விண்ணப்பிக்கமுடியும்:**

**1.மனிதவுரிமைச் செயற்பாட்டில் அக்கறையுள்ள அரச உத்தியோகஸ்தர்கள்**
**2.தொழிலாளர் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் சங்கத்தினர்**
**3.சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள்**
**4.அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்கள்**
**5.சமூக சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள், யுவதிகள்**

**பயிற்சி நடைபெறும் இடம்:** யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், 76,கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**காலம்: சித்திரை-ஆடி 2018 வரை.**
(04 மாதங்கள் - 90 மணித்தியாலங்கள்)

**நேரம்:** சனிக்கிழமைகள் மற்றும் போயாதினங்கள்காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை

**பயிற்சிக் கட்டணம் : ரூபா 5000/=**

முன்னணி மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்துறை சார்ந்தோர் மற்றும் மனிதவுரிமை அமைப்புக்களின் பணியாளர்களால் பயிற்சிகள் நடத்தப்படும். இரண்டு தவணைகளாக (Semesters) பயிற்சி நடைபெறும். ஒவ்வொரு தவணை முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படும்.

ஒரு பிரிவில் முப்பது பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். நேர்முகத் தேர்வின் அடிப்படையில் மாணவர் தெரிவு நடைபெறும். பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 15.03.2018**

விவரங்களுக்கு 0212223668 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தேவநாயகம் தேவானந்த்**
*கௌரவ தலைவர்*
*யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்*
*76, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.*

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வு, மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் (கொழும்பு) முகவரி யிட்டு, சுயாதீன இளம் ஊடகவியலாளரும் சுவிஸ் சமூக மனித உரிமைகள் செயற்பாட் டாளருமான அ.ஈழம் சேகுவேரா என்பவர் அமைச்சர் டி.எம். சுவாமி நாதனுக்கு மடல் ஒன்றை வரைந்துள் ளார். அந்த மடலிலுள்ள விடயங்களை இங்கு தருகின்றோம்.**

## அமைச்சர் டி.எம். சுவாமிநாதனுக்கு வரைந்துள்ள ஒரு மடல்...



# முன்னாள் போராளிகளை ‘கடனாளிகள் ஆக்கும்’ திட்டம் ஐயா இது!


*அமைச்சர் அவர்களே!*

முன்னாள் போராளிகளை ‘கடனா ளிகள் ஆக்கும்’ தங்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டம் தொடர் பாக –

தங்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட்டம் ஊடாக ‘முன்னாள் போராளிகள்’ கால்நடைகளை வளர்த்து தமது வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத் திக்கொள்ள விண்ணப்பிக்கும் போது, அந்த உதவித்திட்டத்தில் உள்ள நிர் வாக ஒழுங்குபடுத்தல் குறைபாடுகள் காரணமாக ‘குறித்த வாழ்வாதார உதவித்திட்டமே போராளிகளை நிரந் தர கடனாளிகளாக ஆக்கிய’ துன் பியல் நிலைமைகள் தொடர்பாகவும், மிகவும் மோசமான இந்த இடர் நிலை மைகளை களைந்து அவர்களது ‘வாழ்வாதாரத்தை மேம்படுத்துவ தற்கான மாற்றுத்தீர்வுகள்’ தொடர் பாகவும், தங்களுக்கு இந்த மடலை எழுதுகிறேன்.

★★★ ஒரு லட்சம் ரூபாய் (100,000) நிதி ஒதுக்கீட்டுக்குள் வாழ்வாதாரத் துக்கான கால்நடைகளை (மாடு கள்,ஆடுகள்,கோழிகள்) தெரிவுசெய் யுமாறு பயனாளிகளுக்கு பணிக்கப் படுகின்றது.

பயனாளிகளும் தமது விருப்பத் துக்கு ஏற்றவாறு கால்நடைகள் அமை யும் வரை அலைந்து திரிந்து, பண் ணையாளர்களைத் தேடிக்கண்டறிந்து, தமக்குப் பொருத்தமான கால்நடை களை இனங்கண்டபின்னர், அரசாங்க கால்நடை வைத்தியரை தமது சொந்தச் செலவில் அழைத்துச்சென்று, கால் நடைகளுக்கு காது இலக்கத்தகடு இட்டு, தங்கள் அமைச்சினால் வாழ்வாதார உதவித்திட்டத்துக்கென்றே பிரத்தியே கமாக தயாரிக்கப்பட்டுள்ள படிவத்தை பூரணப்படுத்தி, பண்ணையாளர்களிடம் உள்ள கால்நடை உரிம அட்டையை பயனாளிகள் தமக்கு உரிமம் மாற்றம் செய்து, அவற்றை கச்சேரியில் கொண்டு வந்து ஒப்படைத்த பின்னர், குறித்த கால்நடைகளை பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு, ‘மூன்று மாத காலம் வரை’ காத்திருக்குமாறு கச் சேரி உத்தியோகத்தர் களால் கூறப்படுகின்றது.



யாராவது ஒரு நபர் கூடிய சீக்கிரம் தனது செலவுக்குபணம்தேவைப் படும் (நோய், விபத்து, சத்திரசிகிச்சை, வெளி நாட்டு பயணம், உயர் கல்வி, புதிய தொழில் முனைப்பு, கடன் பிரச்சினை) சந்தர்ப் பங்களில் மாத்திரமே, கைக்குத் தேவை யான பணத்தை புரட்டுவதற்கு பல வழி களிலும் முயன்று எதுவும் கைகூடி வரவில்லை என்றானபோது, ‘தன்னி டம் உள்ள அசையும் அசையா சொத் துகள் – துரவுகளை விற்பது’ எனும் இறுதித் தீர்மானத்துக்கு வருவார்.

ஆனால் இந்த அடிப்படை புரிதல் கூட இல்லாமல் தங்கள் அமைச்சின் உதவித்திட்டத்தின் போது ‘மூன்று மாத காலம் வரை காத்திருக்குமாறு’ பண் ணையாளர்களிடம் கூறுமாறு பயனாளி களிடம் சொல்லப்படுகின்றது.

‘அவசர பணத்தேவை காரணமாக, அவ்வளவு காலத்துக்கு தம்மால் பொறுத் துக்கொள்ள முடியாது’ என்று கூறும் பண்ணையாளர்கள், கூடிய சீக்கிரம் தமக்கு பணம் தந்து உதவக்கூடிய வேறு நபர்களுக்கு கால்நடைகளை விற்று, துரிதகதியில் தமது பண நெருக்கடிப் பிரச் சினையை சமாளித்துக்கொள்கிறார்கள்.

**தீது - 01:**

இவ்வாறான ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்போது, மிகவும் மோச மாக பாதிக்கப்பட்டு மனஉளைச்சலுக்கு உள்ளாகும் பயனாளிகள், தமிழ் சினிமா நகைச்சுவை நடிகர் வைகைப்புயல் வடி வேலுவின் பட்டித்தொட்டி – சந்துபொந்து எங்கும் அலப்பறை செய்த மிகவும் பிர சித்தமான நகைச்சுவை வசனம் ஒன்று உள்ளது. ‘மறுபடியும் – முதலில இருந்தா?’ அதுபோல, சுற்றிச்சுற்றி ஒரு வட்டத்துக் குள்ளேயே ஓடி, மறுபடியும் மறுபடியும் தொடங்கிய இடத்துக்கே வந்து சேருகிறார் கள்.

அதாவது, மறுபடியும் வேறு ஒரு பண்ணையாளரை தேடி ஓடுகிறார்கள். அங்கும் அரசாங்க கால்நடை வைத் தியரை தமது சொந்தச்செல வில் அழைத்துச்சென்று, பண்ணையாளர்களிடம் உள்ள கால்நடை உரிம அட் டையை பயனாளிகள் தமக்கு உரிமம் மாற்றம் செய்து, அவற்றை கச்சேரியில் கொண்டு வந்து ஒப்படைத் தால்....

அந்தப் பண்ணையாள ருக்கும் ‘மூன்று மாத காலம் வரை’ காத்திருக்குமாறு கூறப்படுகின்றது. ‘அவ்வளவு காலத் துக்கு பொறுத்துக்கொள்ள முடியாது’ என்று அந்தப் பண்ணையாளரும் மறுப்பு தெரிவித்து வேறு நபர்களுக்கு (ரெடிக் காசு என்று சொல்லப்படுகின்ற கைக் காசுக்கு) கால்நடைகளை விற்றுவிட் டால், மறுபடியும் வேறு ஒரு பண்ணை யாளரைத் தேடி ஓடவேண்டியிருக்கிறது.

அந்தப் பண்ணையாளருக்கும் ‘மூன்று மாத கால அவகாசம்...!’ இப்ப டியே கூறிக் கொண்டிருந்தால், பயனா ளிகளின் நிலைமை என்னாவது? இதில் உள்ள மிகவும் கொடுமையானதும், நகைப்புக்கும் உரிய விடயம் என்ன வென்றால், இப்படி மூன்று மாதத் தவணை கூறிக்கூறி ஒரு வருடம் கடந்த பின்னும் கூட குறித்த பயனாளிகளுக்கு கால்நடைகளை தங்கள் அமைச்சு இன்னும் பெற்றுக்கொடுக்காதது தான்!

இதன் தாக்கத்தை நீங்கள் இன்னும் ஆழமாக உய்த்துணர வேண்டுமாயின், இந்த மடலில் கீழே உள்ள விடயங் களை தொடர்ச்சியாக வாசிப்பதை நிறுத்தி விட்டு, மேலே சென்று அங்கு நான் ★★★ அடையாளம் இட்டுள்ள பந்தியிலிருந்து மறுபடியும் இந்த மடலை வாசிக்கத் தொடங்குங்கள். வாசித்து இவ்விடம் வந்ததும் மறுபடியும் மேலே சென்று ★★★ அடையாளம் இட்டுள்ள பந்தி யிலிருந்து மீளவும் வாசிக்கத்தொடங் குங்கள். இவ்வாறு பல தடவைகள் மீளவும் மீளவும் வாசித்துக் கொண்டி ருங்கள். இப்போது தங்களுக்கு நிலைமை புரியும் என்று நம்புகின்றேன்.

**தீது - 02:**

‘மூன்று மாத கால அவகாசம்’ என்று கூறும் போது சில பண்ணையாளர்கள், பயனாளிகளிடம் முற்பணம் (அட்வான்ஸ்) கேட்கிறார்கள். இது நியாயமானது தான். பண்ணையாளருக்கு ‘அவசர பணத் தேவை’ என்று பெரிய பிரச்சினை ஒன்று உள்ளது. அந்தப் பிரச்சினையிலிருந்து மீளுவதற்கு அவருக்கு ரெடிக்காசு வேண்டும். இல்லை பிரச்சினையை ஓரளவு சமாளிக்கக்கூடியளவுக்கு முற் பணமாவது கிடைக்க வேண்டும்.

மறுபுறம் பயனாளிகளோ... ‘கால்நடை களை வேறு நபர்களுக்கு விற்றுவிடா மல் தடுப்பதற்காகவும், நிச்சயம் கால் நடைகளை கொள்வனவு செய்வோம் என்று பண்ணையாளருக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காகவும்’ முற்பணம் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் உந்தப்படு கின்றார்கள்.

இதன் காரணமாக பயனாளிகள் தம்மிடம் உள்ள நகைகளை கைக்கு அதிக பணம் தரக்கூடிய தனியார் வங்கி கள் – லீசிங் கம்பனிகளில் அடைவு வைத்தோ, அன்றி தெரிந்தவர்களிடம் வட்டிக்குப்பணம் கடனாகப்பெற்றோ முற்பணத்தை செலுத்துகின்றார்கள். (முற்பணம் கொடுக்காவிட்டால் ‘மறுபடி யும்... முதலில இருந்து... தொடங்க வேண் டுமே! வேறு ஒரு பண்ணையாளரைத் தேடி அலைய வேண்டுமே! அந்தப் பண்ணையாளரும், ‘தனக்கு காசுப் பிரச்சினை. ‘ரெடிக்காசு’ வேண்டும். இல்லை முற்பணம் வேண்டும்’ என்பார். இதுதான் நிலைமை.)

ஆதலால், இந்த ஆபத்தான நடவடிக்கையில் இறங்கும்போது பயனாளிகளின் மனதில் எழும் ஒரே எண்ணம், ‘ஓரிரு மாதங்கள் தானே... அதுவரை சமாளித்துக்கொள்ளலாம். கால்நடைகளை தங்கள் அமைச்சு பெற்றுக்கொடுத்த பின்னர் அதன் வருவாயை வைத்து இதை ஈடுசெய்து கொள்ளலாம்’ என்பது மட்டுமே.

ஆனால்மூன்றுமாததவணைஎன்று கூறிக்கூறி, ஒரு வருடம் கடந்த பின் னும் கூட குறித்த பயனாளிகளுக்கு கால்நடைகளை தங்கள் அமைச்சு பெற்றுக்கொடுக்கவில்லை என்கிற போது, இந்த குடும்பங்கள் வருடம் முழுவதும் வட்டி கட்டிக்கட்டியே கந்த றுந்து நிரந்தர கடனாளிகளாகி விடு கின்றன.

இன்னும் விளங்கக்கூறின், ‘தங்கள் அமைச்சின் வாழ்வாதார உதவித்திட் டமே போராளிகளை நிரந்தரக் கடனாளி களாக ஆக்கும்’ துன்பியல் நிகழ்ச்சி இது!

**தீது - 03:**

பண்ணையாளர்களிடம் ‘மூன்று மாத காலத்தவணை’ என்று கூறிவிட்டு, இக்காலத்தவணைக்குள் பயனாளிகள் கால்நடைகளை கொள்வனவு செய்யாத பட்சத்தில், சில பண்ணையாளர்கள் தாம் வாங்கிய முற்பணத்தை திருப்பிக் கொடுக்க மறுக்கிறார்கள். இல்லையேல் வாங்கிய முற்பணத்தில் அரை வாசியை மட்டுமே திருப்பித்தர முடியும் என்கிறார்கள்.

அன்றி, தமக்குத்தர வேண்டிய மீதிக் காசையும் கொடுத்துவிட்டு கால்நடை களை பெற்றுச்செல்லுமாறு நிர்ப்பந் திக்கிறார்கள். கூடவே, இதில் அதீத கவ னிப்புக்குரிய விடயங்கள் இரண்டு உள் ளன. ஒன்று,

இக்காலப்பகுதிக்குள் மாடுகள் மற் றும் ஆடுகள் கன்றுகள்–குட்டிகளை ஈன் றிருந்தால், தமக்கு ஏற்பட்ட பராமரிப்புச் செலவுகள் காரணமாக கன்றுகள்–குட்டி களை தரமுடியாது என்கிறார்கள். மனசு ஒப்பாமல் பயனாளிகள் இரந்துகேட் டால், அவற்றுக்கும் சேர்த்து மேலதிக மாக ஒரு தொகைப்பணத்தை தந்து விட்டு எடுத்துச்செல்லுமாறு கேட்கிறார் கள்.

இவ்வாறு ஏமாற்றப்படும் பயனா ளிகள், கொடுக்கப்படும் நெருக்குதல் கள் காரணமாக, கொடுக்க வேண்டிய மீதிக்காசையும் எங்காவது வட்டிக்கு கடனாகப்பெற்று, மொத்தக்காசையும் கொடுத்து கால்நடைகளை கொள்வனவு செய்து, மேலும் மேலும் அழுத்தும் வட்டி யுடன் கூடிய கடன்தொல்லைக்குள் வீழ்ந்து சீரழிந்து விடுகின்றனர். தங்கள் அமைச்சின் உதவித்திட்ட நிதி தாமதம் ஆகஆக, பயனாளிகளின் கழுத்தில் மாட் டப்பட்டிருக்கும் இந்த சுருக்குக் கயிறு, அவர்களின் கழுத்தை இன்னும் இன்னும் பலமாக இறுக்குகிறது என்பதே நிலைவரம்! மற்றையது,

மூன்று மாதங்கள் கழித்தோ, அன்றி வருடம் கழித்தோ, ஒதுக்கப்பட்ட காசுடன் பயனாளியையும் அழைத்துக்கொண்டு தங்கள் அமைச்சின் உத்தியோகத்தர் கால்நடைகளை கொள்வனவு செய்யக் கிளம்பும்போது, ‘மூன்று மாதத்துக்கு முன்னர் எனக்கு சரியான பணப்பிரச் சினை இருந்தது உண்மைதான். அத னால் வேறுவழியில்லாமல் கால்நடை களை விற்பது எனும் முடிவில் இருந் தேன்.

அப்போது நீங்கள் பணம் தந்து உதவவில்லை. பரவாயில்லை, நண்பர் ஒருவர் பணம் தந்து உதவியமையால் பிரச்சினையை சமாளித்துவிட்டேன். ரொம்ப சந்தோசம். இப்போது நான் கால் நடைகளை விற்பதாக இல்லை.’ இவ் வாறு சம்பந்தப்பட்ட பண்ணையாளர் கூறினால், இவ்வாறானதொரு சந்தர்ப் பத்தில் தங்கள் அமைச்சின் உத்தியோ கத்தர் எத்தகையதொரு முடிவை எடுப் பார்? சர்வசாதாரணமாக, வேறு கால் நடைகளைதேடிப்பார்க்குமாறு கூறிவிட்டு பணத்தை மீளஎடுத்துச்சென்று விடு வார்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)

# என் இந்தக் கொலைவெறி?

## வாக்கிய பஞ்சாங்கத்தில் பல யமதூதுவன் விவாக முகூர்த்தங்கள்!

16 வகையான செல்வங்களையும் பெற்றுப் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ்வதற்காக விவாக சுப முகூர்த்தத்தில் கலியாணம் செய்கிறீர்கள். இவ்வாறு நடந்த திருமணங்களில் பல இன்று விவாகரத்து,...விதவைக் கோல நிலையில் உள்ளன. இதற்குக் காரணம் என்ன? சாஸ்த்திரங்களிலும் இரகுநாதையர் பரம்பரையினரின் வெளியீடு விதானமாலையிலும் முகூர்த்த விதிகளும் அவற்றை மீறினால் விளையும் தீமைகளும் உள்ளன. அவர்களது பஞ்சாங்கத்தில் கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் பதியும் அளவுமுகூர்த்தப் பிழைகள் உள்ளன. அதனைப் பின்பற்றுவோர் அனுபவிக்கும் தீமைகளை கண்கூடாகக்காண்கிறீர்கள். நம்ப முடியவில்லையா?

ஆதாரம் 1 - விதானமாலை முலமும் - உரையும்
பிரம்மஸ்ரீ இ.சி. இரகுநாதையர் எழுதிய உரை
பிரம்மஸ்ரீ இ.சி.இ. வெங்கடேச ஐயர் வெளியிட்டது.
98ம் பக்கத்தின் மிக முக்கிய பகுதி - விவாக முகூர்த்த விதி

சுபக்கோளாயினும் பாபக்கோளாயினும் ஏழாமிடத்தில் நிற்கில் ஆகார் கிரகங்களால்வருந் தீமைகளாவன: சுக்கிரன் நிற்கில் பரத்தை, வியாழன் நிற்கில் துறவி, ஆதித்தன் நிற்கில் விதவை, செவ்வாய் நிற்கில் துஷ்டை, சனிநிற்கில் மலடி, சந்திரன் நிற்கில் தரித்திரி, புதன்நிற்கில திருவிளி, இராகுநிற்கில் மரித்தல், கேதுநிற்கில் வியாதியாம்

காலப்பிரகாசிகையிலும் விவாகத்திக்கு 7ம் இடம் சுத்தம் என்ற மேலேயுள்ள விதியும் மீறினால் விளையும் தீமைகளும் உள்ளன.
**Google** → Kalaprakasika English Translation 1982 Edition By N.P. Subramania Iyer
Part of Book page 81, Pdf page 118
சோதிட ஜாம்பவான் B.V. ராமன் எழுதிய நூலிலும் மிகச் சிறந்த முகூர்த்த விதிகள் உள்ளன.
http://www.veda.mn/Book/JCC/MUHURTHA.pdf
வாக்கியத்தில் வருடம் முழுவதும் அமாவாசை, பூரணை பிழை என்று நிரூபிக்கும் நாஸா ஆகாயக் கலண்டர்
https://eclipse.gsfc.nasa.gov/SKYCAL/SKYCAL.html

**இவ்வருட வாக்கிய பஞ்சாங்கத்திலுள்ள பல விவாஹ முகூர்த்தப் பிழைகளில் 2 ஆதாரத்துடன் நிருபிப்பு.**
18-03-2018 ஞாயிற்றுக்கிழமை கன்னி லக்கின முகூர்த்தம் 07:06 p.m. → 07:54 p.m.
19-03-2018 திங்கட்கிழமை கன்னி லக்கின முகூர்த்தம் 06:34 p.m. → 07:44 p.m.
**நவக் கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| மீனம் 7 சூரி, சந், புதன், சுக் | மேடம் 8 | இடபம் 9 | மிதுனம் 10 |
| கும்பம் 6 | விவாஹ முகூர்த்தத்தில் 7இல் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன் இருந்தால் என்ன பலன் என்று ஆதாரம் 1ல் பாருங்கள் | | கடகம் 11 ராகு |
| மகரம் 5 கேது | | | சிங்கம் 12 |
| தனுசு 4 செவ், சனி | விருச்சிகம் 3 குரு | துலாம் 2 | கன்னி 1 ல |

முகூர்த்த நிர்ணயத்தில் திதி 4ம், வாரம் 3ம், நட்சத்திரம் 2ம், லக்கினம் 1ம் இடங்களில் உள்ளன. லக்கினமே சுப முகூர்த்தத்தின் உயிர். நவக்கிரக நிலையில் 1ம் இடமே லக்கினம். மேடம்,,,மீனம் என்ற ராசியின் பெயர்களிலேயே லக்கினங்களும் உள்ளன. குழந்தை பிறந்த நேரத்திற்கு நவக்கிரக நிலையைக் குறித்து ஜனன ஜாதக பலன் பார்ப்பது போல, திருமண நாளின் நவக்கிரக நிலையைக் குறித்து, சிறந்த பலன்கள் நிழக்கூடிய லக்கினத்தை விவாகத்திற்குத் தெரிவு செய்ய வேண்டும். இதற்கு விவாக முகூர்த்த நிர்ணய விதிகள் உள்ளன. குருப் பெயர்ச்சிக்கு வெளிவரும் கோசார பலன், ஜாதக பலன், திருமணப் பொருத்தம், விவாக சுப முகூர்த்தம் இவற்றுக்கு வெவ்வேறு விதிகள் உள்ளன.

எவ்வித தோஷமும் இல்லாத முகூர்த்தம் எடுப்பதற்குப் பல வருடங்கள் ஆகும். இதனால் சுபங்கள் நிறைந்த, தோஷங்கள் குறைந்த முகூர்த்தம் நிர்ணயிக்கலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தவிர்க்க வேண்டிய மிகப் பெரிய தோஷம், பிரீதி செய்து நிவர்த்தி செய்யக்கூடிய தோஷம், சிறிய தோஷம் என்ற பிரிவுகள் நடை முறையில் உள்ளன. நவக்கிரக நிலையின் 12 இடங்களுக்கும் (ஸ்தானம், வீடு) சிறப்புப் பெயர்கள் உள்ளன. 7ம் இடம் களஸ்த்திர (வாழ்க்கைத் துணை) ஸ்தானம், 8ம் வீடு மாங்கல்ய (தாலி) ஸ்தானம், 6ம்இடம்ரோக, சத்துருஸ்தானம் எனப்படும். வாழ்க்கைத் துணைக்குரிய கிரகம் சுக்கிரன் களஸ்திர காரகன், தாலிக்குரிய கிரகம் செவ்வாய் மாங்கல்யகாரகன் எனப்படும்.

விவாக முகூர்த்தத்தில் 7ம் இடம் சுத்தமாக, எந்தவொரு கிரகமும் இல்லாது வெற்றிடமாக இருக்கவேண்டும். இது விவாகத்திற்குத் தவிர்க்க வேண்டிய மிகப் பெரியதோஷம். இதனை மீறினால் விளையும் கொடிய தீமைகளை ஆதாரம் 1இல் பாருங்கள். இந்த வருட வாக்கிய பஞ்சாங்கத்தில் இவ்விதியை மீறிய42 விவாக முகூர்த்தங்கள் உள்ளன. கடந்த பல தசாப்த வாக்கிய பஞ்சாங்கங்களில் இப்பிழை உள்ள ஏராளமான முகூர்த்தங்கள் இருந்தன. அதேசமயம் பல சிறந்த விவாக சுப முகூர்த்தங்களைக் கோட்டைவிட்டு உள்ளனர். அன்னப்பிராசனத்திற்கு (பால் பெருக்கு) 10ம் இடம் சுத்தம், வீடு குடி புகுதலுக்கு 12ம் இடம் சுத்தம் என்று ஒவ்வொரு சுப கருமத்திற்கும் வெவ்வேறுவிதிகள் உள்ளன. இவற்றை மீறிய பிழைகளும் கடந்த தசாப்த வாக்கிய பஞ்சாங்கங்களில் ஏராளம். முகூர்த்த நிர்ணய விதிகளில் இலங்கை, இந்தியா வேறுபாடும் இல்லை, வாக்கிய, திருக்கணித வித்தியாசமும் இல்லை. தமிழ் நாட்டின் மிகப் பிரபல்யமான பாம்பு (வாக்கிய) பஞ்சாங்கத்தில் மேற்கூறிய விதிகள் இருப்பதை ஆதாரம் 3ல் பாருங்கள்.

களஸ்த்திரகாரகன் சுக்கிரன் ரோக ஸ்தானம் 6 இல் இருப்பது விவாகத்திற்குத் தவிர்க்க வேண்டிய மிகப் பெரிய தோஷம். 6ல் சுக்கிரனில் விவாகம் செய்தால் தம்பதிகளில் ஒருவர் இள வயதில் மரணித்து தபுதாரன் - விதவைக் கோலம் ஏற்படும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதாரம் 2ஐப் பாருங்கள். இவ்வருட வாக்கிய பஞ்சாங்கத்தில் 6ல் சுக் கிரன் விவாக முகூர்த்தங்கள் 8 உள்ளன. கடந்த பல தசாப்த வாக்கிய பஞ்சாங்கங்களில் 6ல் சுக்கிரன் விவாக முகூர்த்தங் கள் பல இருந்தன. விவாக முகூர்த்தத்தில் 6ல் குரு, சந்திரன் இருப்பது பிரீதி செய்து நிவர்த்தி செய்யக்கூடிய தோஷம்.

மாங்கல்யகாரகன் செவ்வாய் மாங்கல்ய ஸ்தானம் 8ல் இருப்பதும் விவாகத் திற்குத் தவிர்க்கவேண்டிய மிகப்பெரியதோஷம். 8ல்செவ்வாயில் விவாகம் செய் தால் தாலியை விரைவில் இழக்க நேரிடும்என்று சாஸ்திரங்களில் உள்ளது. ஆதாரம் 2ஐப் பாருங்கள். கடந்த பல தசாப்த வாக்கிய பஞ்சாங்கங்களில் 8ல் செவ்வாய் விவாக முகூர்த்தங்கள் பலவும் இருந்தன.

வாக்கிய பஞ்சாங்கத்தினர் ஆரம்பத்திலிருந்து விவாகத்திற்கு 8ம் இடம் சுத்தம், 6ல் சுக்கிரனுக்கும் 7ல் உள்ள

ஆதாரம் 2 - காலவிதானம் - C.G. ராஜன் எழுதிது
22ம் பக்கம் - முகூர்த்த விதிகளின் முக்கிய பகுதி

(135) லக்னத்திற்கு 8-ல் செவ்வாய் அல்லது 6-ல் சுக்கிரன் அல்லது 6-8-12-லக்கினத்தில் சந்திரன் இருக்க விவாகத்திற்கு முகூர்த்தம் வைத்தவன் யமதூதனுவான்.

6ல் சுக்கிரன், 8ல் செவ்வாய் இவற்றைவிட 1, 6, 8, 12இல் சந்திரன் சற்றுத் தோஷம் குறைந்தது. இதன் தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்து விவாகம் செய்யலாம்.

கிரகத்திற்கும் பிரீதி என்ற விதியைப் பின்பற்றினர். இது சரி என்று முன்பு நான் எண்ணியதையிட்டு மனம் வருந்துகிறேன். இவ்விதியையே திருக்கணித பஞ்சாங்கத்தினரும் கடந்த காலங்களில் பின்பற்றினர். இந்த வருடத்திலிருந்து திருக்க ணித பஞ்சாங்க கணிதர் சிவஸ்ரீசி. ஜெகதீஸ்வர சர்மா அவர்கள் விவாகத்திற்கு 7ம் இடம் சுத்தம், 6ல் சுக்கிரன் தவிர்ப்பு என்ற விதியை பின்பற்றுகிறார். மனிதாபிமானமாகப் பிழையைத் திருத்தியவரை மேலும் விமர்சிப்பது அழகல்ல. 1970 இற்கு முன்னர் வந்த வாக்கிய பஞ்சாங்கங்களில் பிழையான விவாக முகூர்த்தங்கள் மிகக் குறைவாகவே இருந்தன. 1970ன் பின்னர் பிழைகள்அதிகரித்தன. இவ் வருடப் பஞ்சாங்கத்தில் முக்கிய விவாக முகூர்த்த விதிகள் அனைத்தும்மீறப்பட்டுள்ளன.

கிரக நிலையில் விவாகத்திற்கு மிகவும் முக்கியமான ஸ்தானமே சுத்தமாக இருக்க வேண்டும். வாழ்க்கைத் துணைக் குரிய 7 ஆம் இடம் உலக மானிடர்கள் சகல ருடனும் சம்பந்தப்பட்டது. தாலிக்குரிய 8ம் இடம் இலங்கை, இந்தியப் பெண்களுக்கு மட்டும் சிறப்பானது. ஜாதகத்தில் விவாக பலனுக்கு ஆராய்வது 7ம் இடம், 8ம் இடமல்ல. 8ல் செவ்வாய் உள்ளதா என்று மட்டும் பார்ப்பார்கள். 7ம் இடம் சுத்தம் என்ற விதி சகல முகூர்த்த சாஸ்த்திரங்களிலும் உள்ளது. 8ம் இடம் சுத்தம் என்ற விதி ஒருசில நூல்களில் மட்டுமே உள்ளது. விவாக முகூர்த்தத்தில் 8ல் சூரி யன், சனி இருப்பது நல்லது என்று பழம் பெரும்

ஆதாரம் 3 - பாம்பு பஞ்சாங்க (வாக்கியம் - இந்தியா)
முகூர்த்த விதிகளின் முக்கிய பகுதி

**ஸ்தான சுத்தம் முக்கியம் பார்க்கவேண்டியவை.**
நிஷேகத்தில் முகூர்த்த லக்னமும், கிருஷியாரம்பத்திற்கு 3-மிடமும், வித்யாரம்பத்திற்கு 4-மிடமும் யாத்திரைக்கு, 5-மிடமும், கோடியுடுப்பதற்கு 6-மிடமும், விவாகத்திற்கு 7, -மிடமும், உபநயனத்திற்கு 8-மிடமும், சௌளத்திற்கு 9-மிடமும், அன்னப்பிராசனத்திற்கு 10-மிடமும், சிரார்த்தத்திற்கு 11-மிடமும், நாமகரணம், கிரகப் பிரவேசித்திற்கும், 12-ம் இடம் சுத்தம் அவசியம் பார்க்கவும்.

சாஸ்திர நூல் காலப்பிரகாசிகையில் உள்ளது. விவாக முகூர்த்தத்தில் 8ல் சந்திரன், புதன், குரு இருப்பின் தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்ய வேண்டும். தரமான சாஸ்திரங்கள் எதிலும் குரு பார்த்தால் தோஷம் நீங்கும் என்ற விதி விவாக முகூர்த்தத்திற்கு இல்லை.

விவாக முகூர்த்தத்தில் சந்திரன் 2, 3, 4, 5, 9, 10, 11ல் இருப்பது நல்லது. 1, 6, 8, 12ல் இருப்பது சாந்தி செய்து நிவர்த்தி செய்யக்கூடிய தோஷம். வாக்கிய பஞ்சாங்கத்தில் இந்தத் தோஷமுள்ளவிவாக முகூர்த்தங்கள்பலஉள்ளன. இவை எவற்றிக்கும் தோஷ நிவர்த்திக்குப் பிரீதி குறிப்பிடவில்லை. இரகுநா தையரே! முகூர்த்தத்தில்சந்திரன் எங்கே இருக் கிறார் என்று தெரியாதா? வாக்கிய பஞ்சாங்கத்தின் 24ம் பக்கத்தில்விவாகப்பொருத்த நிச்சயத்தில் பிராமணருக்கு அதிபதியும்,..... சூத்திரருக்கு யோனி யும் பிரதானமாகப் பொருந்த வேண்டும் என்று உள்ளது. இவர்களுக்கு செக்ஸ் மட்டுமே பிரதானம் என்றா? அல்லது கடைகளில் விற்கப்படும் பிரீதிக்கு விளம்பரமாகவா? 12ல் இருக்கும் (சந்திரன் தவிர) கிரகங்களுக்கு மட்டும் விவாக முகூர்த்தத்தில் பிரீதி குறித்துள்ளீர்கள். 12ம் இடம் சயன சுகத்துடன் சம்பந்தப்பட்டது. 12ல் குரு, சுக்கிரன், புதன் இருப்பது நல்லது. ஏனைய கிரகங்கள் இருப்பின் தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்ய வேண்டும்.

கிரகங்கள் 6 பாகைக்குள் இருந்தால் அது கிரக சேர்க்கை எனப்படும். விவாக முகூர்த்தத்தில் சந்திரன் வேறு கிரகத்துடன் சேர்க்கையில் இருப்பது தோஷம். பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், பூரம், விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி இந்த 9 நட்சத்திரங்களும் விவாக முகூர்த்தத்திற்கு மிகவும் தோஷம் கூடியவை. இவற்றில் கலியணம் செய்தால் நோய் வரும், ஆயுள் குறையும், புத்திரர்களைக் கடுமையாகப் பாதிக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

குரு, சுக்கிரன் அஸ்தமனத்தில் விவாகம் செய்தால் மணமக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும். வியாழன் அஸ்தமனத்திற்கு முன் 15 நாள்கள் விருத்த குரு, உதயத்தின் பின் 8 நாள்கள் பால குரு, வெள்ளி அஸ்தமனத்திற்கு முன் சில நாள்கள் விருத்த சுக்கிரன், உதயத்தின் பின் 7 நாள்கள் பால சுக்கிரன் என்றும் சொல்லப்படும். பால குரு, விருத்த சுக்கிரனில் விவாகம் செய்தால் புருஷனுக்குக் கூடாது. பால சுக்கிரன், விருத்த குருவில் கலியாணம் செய்தால் மனைவிக்கு ஆகாது. இவ்வாறு காலப்பிரகாசிகையில் உள்ளது. இக்காலங்களில் விவாகம் செய்வதாயின் தோஷ நிவர்த்திக்குப் பிரீதி செய்ய வேண்டும். பிரீதி செய்தாலும் முகூர்த்தம் மிகவும் தரம் குறைந்ததாகவே இருக்கும். வாக்கிய பஞ்சாங்கத்தில் குரு, சுக்கிரன் அஸ்தமன கால விவாக முகூர்த்தங்களுக்குத் தோஷ நிவர்த்திக்குப் பிரீதி குறிப்பிடவுமில்லை, மிகவும் தரம் குறைந்த முகூர்த்தம் என்ற அடையாளம் இடவுமில்லை.

விவாக முகூர்த்தத்தில் 1, 2, 4, 5, 9, 10ம் இடங்களில் சுபக் கிரகங்கள் குரு, சுக்கிரன், புதன் (10ம் இடம் தவிர) இருப்பது நல்லது. 1ல் செவ்வாய், சனி, ராகு, கேது விவாகத்திற்குத் தவிர்க்க வேண்டிய தோஷம். விவாக முகூர்த்தத்தில் 1, 7இல் ராகு, கேது தோமில்லை என்று ஒருசில நூல்களில் இருந்தாலும் தரமான சாஸ்திரங்கள் இதனை மறுக்கின்றன. 5ல் சனி, 9ல் செவ்வாய், 10இல் புதன் தோஷ நிவர்த்திக்குப்பிரீதிசெய்துவிவாகம் செய்யும் நடைமுறை உள்ளது. 3, 11ம் இடங்களில் எந்தக் கிரகமும் இருக்கலாம்.

சூரிய உச்சத்தற்கு முன், பின் 12 நிமி டம் அபிஜித் முகூர்த்தம், 11ல் சூரியன், இரவில் 11ல் சந்திரன், 1ல் குரு, 1ல் சுக்கிரன், 1ல் புதன் என்பன தோஷங்களை போக்கும். 1, 4, 7, 10 கேந்திரம், 1, 5, 9திரிகோணம்எனப்படும். இவைகளில் (7 தவிர) பல மான குரு, சுக்கிரன் தோஷங்களைப் போக்கும். இவற்றில் 1இல் குரு மிகச் சிறந்தது, 1இல் சுக்கிரனும் சிறந்தது. இந்த விதிவிலக்குகளில் இரவில்

கனடாவிலிருந்து **கௌசிகர்**

11ல் சந்திரன் தவிர்ந்த ஏனைய நேரங்கள் தினசரி நிகழும். இவற்றைத் தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இரகுநாதையரே! 07-08-2017 சந்திர கிரகணம் என்று கணிக்கத் தெரியாமல், அன்று பூணூல் மாற்றும் தினம் என்று பிழையாகக் கலண்டர்களில் குறித்தீர்கள். பின்னர் திருக்கணிதத்தைக் கொப்பியடித்து இப்பிழையைத் திருத்தினீர்கள்.

ஏனையோர் கலியாணம் செய்து 16 வகையான செல்வங்களையும் பெற்று வாழ விபசாரி, விதவைக் கோல,...யம தூதுவன் விவாக முகூர்த்தப் பிழைகளைத் திருத்திப் பஞ்சாங்கத்தை மறுபிரசுரம் செய்வீர்களா?

(15ஆம்பக்கம்பார்க்க...)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**சந்திராஷ்டம நாள்** - அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்களில் பிறந் தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

**04.03.2018**
**10.03.2018**

2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித் திங்கள் 20ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திரிதீயைத்திதி பி.இ 1.08 மணி வரை பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம் அத்தம் இரவு 8.16 மணி வரை பின்னர் சித்திரை. அமிர்தசித்தயோகம் முழுவதும்

**ராகுகாலம்** - மாலை 4.50 மணி முதல் 6.20 மணி வரை
**சுபநேரம்** - காலை 9.24 மணி முதல் 10.54 மணி வரை
**திவசம் செய்ய வேண்டிய திதி**- மாசி மாத தேய்பிறை திரிதீயை.
**பிறந்த நட்சத்திர வழிபாடு**- அத்தம்.

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)



## மேஷம்:

யோகமான வாரம். தனலாபம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை வலுவடையும். சிலருக்கு சொந்த வீட்டிற்கு குடிபுகும் யோகம் உண்டாகும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். வெளிநாட்டு உறவினர் வழி உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் கௌரவப் பதவி கிடைக்கும். திருமணமாகாத பெண்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் வீடு தேடி வரும். தொழிலாளர்களுக்கு தொடர் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். புத்தாடை, அணிகலன்கள் வாங்குவார்கள். சிலர் குடும்பத்துடன் புனிதத் தலங்களுக்குச் சென்று வருவார்கள்.



## ரிஷபம்:

இனிமையான வாரம். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். விருந்து, விழா என்று சென்று வருவார்கள். சகோதரிகள் மிகவும் ஆதரவுடன் இருப்பார்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள் பதவி உயர்வைப் பெறுவார்கள். பெரியவர்களின் ஆதரவும் ஆலோசனையும் கிடைக்கும். அயலவர்கள் அனுகூலமாக இருப்பார்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபநிகழ்வுகள் நடைபெறும். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு லாபம் கூடும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டாகும்.



## மிதுனம்:

சஞ்சலமான வாரம். பொருளாதாரம் நலிவுறும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்களுக்கு அவப் பெயர் வரலாம். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு அலைச்சல் ஏற்படும். கலைத்துறையினருக்கு போட்டிகளால் வாய்ப்புக்கள் குறைவடையும். வியாபாரத் தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சி குன்றும். தாயார் உடல் நலனில் கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனமுடன் செயற்பட வேண்டும். கொடுக்கல், வாங்கலில் ஏமாற்றம் உண்டாகும்.



## கடகம்:

மேன்மையான வாரம். எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உறவினர்களிடம் சுமுக நிலை ஏற்படும். புத்தாடை, அணிகலன்கள் வாங்குவார்கள். வியாபாரம் செய்யும் பெண்களுக்கு இருந்த இடர்பாடுகள் மறையும். கலைத்துறையினருக்கு அரசிடமிருந்து விருது போன்றவை கிடைக்கும். இதுவரை கோபமாய் இருந்த உறவினர்கள் வலிய வந்து சேர்வார்கள். சகோதரர்கள் உறுதுணையாக இருப்பார்கள். அரசுத் துறையில் பணிபுரிவோரின் கோரிக்கைகள் நிறைவேறும்.



## சிம்மம்:

இன்பமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். பெண்களுக்கு அபார ஆற்றல் பிறக்கும். சகோதரர்களின் சகாயம் கிடைக்கும். புத்தாடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வார்கள். சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். பகைவர்கள் நண்பர்களாக மாறுவார்கள். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். உறவினர்களால் நன்மை உண்டாகும். திருமண காரியங்கள் கனிந்து வரும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.



## கன்னி:

உயர்வான வாரம். பொருளாதாரம் மேம்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சுயதொழில் செய்யும் பெண்களுக்கு பொருள் வரவு அதிகரிக்கும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பால் கல்வித் தரம் உயரும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தடைப்பட்டு வந்த எல்லா சுப நிகழ்ச்சிகளும் கைகூடும். சகோதர உறவு பலப்படும். தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## துலாம்:

துயரமான வாரம். பண வரவு குறையும். குடும்பத்தில் உட்பூசல்கள் உண்டாகும். தொழிலில் சில நேரம் கஷ்டப்பட வேண்டி வரும். புதிய தொழில் முயற்சிகளை தற்சமயம் கைவிடுவது நல்லது. பெண்கள் விட்டுக் கொடுத்துப் போவது நன்று. தாயார் உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்களுடன் மன வேற்றுமை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் நீடிக்கும். வியாபாரிகளுக்கு தொழிலில் போட்டி உண்டாகும். சுயதொழிலில் ஆதாயம் குறையும். புத்திரர்களால் சிரமம் உண்டாகும்.



## விருச்சிகம்:

ஆக்கபூர்வமான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பொன் பொருள் சேரும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். இவர்கள் முன்னேற்றத்திற்காக சகோதரர்கள் மிகவும் உறுதுணையாக இருப்பார்கள். குடும்பத்தில் அன்பு மேலோங்கும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் கிடைக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு ஆக்கபூர்வ முன்னேற்றம் உண்டாகும்.



## தனுசு:

இவ்வாரம் மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் பணியில் மிகவும் கவனமுடன் செயற்படுவது நன்மையைத் தரும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும். கலைத்துறையினர் எதிர்பார்த்த அளவு நன்மை பெற வாய்ப்பு குறையும். மருத்துவச் செலவுகளில் அதிகரிப்பு ஏற்படலாம். தந்தைக்கு உடல் நல குறைவு உண்டாகும். சிலருக்கு புதிய யாத்திரை சென்று வரும் வாய்ப்பு அமையும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.



## மகரம்:

கீர்த்தியான வாரம். பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்யமான சூழ்நிலை இருக்கும். மாணவர்களின் திறமையால் ஆசிரியர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும். கலைத்துறையினர் புகழோடு வருமானத்தையும் பெறுவார்கள். பெண்கள் குடும்பப் பொறுப்புக்களைச் சரிவரச் செய்து குடும்பத்தில் அனைவரின் பாராட்டையும் பெறுவார்கள். பெற்றோர் வீட்டிலிருந்து வீட்டிற்குத் தேவையான பொருள்கள் வந்து சேரும். சகோதர உறவு வலுவடையும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் இணைவார்கள்.



## கும்பம்:

துன்பமான வாரம். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். வியாபாரம் பெரும் நட்டமடையும். செய்தொழிலில் விருத்தி குன்றும். நண்பர்கள், உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். வேலை செய்யும் பெண்களுக்கு பல இடையூறுகள் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைப்பது கடினம்.



## மீனம்:

விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு மேம்படும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். வியாபார ரீதியான பயணம் நல்ல வளர்ச்சியைத் தரும். தொழிற்பிரிவினர் வெளியூர் ஒப்பந்தங்களால் முன்னேற்றமடைவார்கள். தொழிலாளர்களின் ஒற்றுமை பலமடையும். செய்யும் தொழிலில் லாபம் பெற பல யுத்திகளைக் கையாளுவார்கள். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கூடிய வருமானத்துடன் கௌரவப் பதவிகள் கிடைக்கும்.

# சொல்லத் தவறிய கதைகள் 02

# மறைந்தவர்களின் தொலைபேசி இலக்கங்கள்!

லெ.முருகபூபதி

இந்தப் பதிவுக்கு கொல்லப்பட்டவர்களின் தொலைபேசி இலக்கங்கள் என்றுதான் முதலில் தலைப்பிடுவதற்கு யோசித்தேன். எனினும் எம்மத்தியில் கொல்லப்பட்டவர்களதும், காணாமலாக்கப்பட்டவர்களதும் இயற்கை மரணத்தை தழுவியவர்களினதும் தொலை பேசி இலக்கங்கள் இன்றளவும் என்னிடம் இருக்கின்றமையால், பொதுத்தலைப்பை வைப்பதற்குத் தீர்மானித்தேன்.

அந்த இலக்கங்கள் பயன்பாட்டுக்கு இல்லாமல் அமைதி காக்கின்றன!

டயறி எழுதுவது நல்ல பழக்கம்தான். ஆனால், அதில் எழுதப்படும் விடயங்களைப் பொறுத்து சமூகத்திலும் உலக அரங்கிலும் முக்கியத்துவம் பெற்றுவிடும். நடிகர், நடிகைகள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்களின், பாதுகாப்புத்துறை சார்ந்தவர்களின் டயறிக் குறிப்புகள் அவர்கள் வாழும் காலத்திலும் – மறைவுக்குப் பின்னரும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

நான் இலங்கையில் நன்கறிந்த ஒரு மூத்த எழுத்தாளரின் டயறியொன்று அவரது மறைவின் பின்னர் வெள்ளவத்தையில் ஒரு பழையபேப்பர் கடையிலிருந்து, அப்பகுதியிலிருந்த சைவ ஹோட்டலுக்கு கைதுடைப்பதற்கும் சென்றிருக்கிறது!

நானும் நீண்டகாலம் டயறி எழுதிக்கொண்டிருந்தேன். ஆஸ்திரேலியாவுக்கு வந்ததும் அந்தப்பழக்கத்தை விட்டுவிட்டேன். தற்பொழுது எனது நாளாந்த டயறி, வீட்டுச்சுவரில் மாட்டியிருக்கும் நாட்காட்டிதான். அதில் நான் அங்கம் வகிக்கும் அமைப்புகளின் கூட்டங்கள், நிகழ்ச்சிகள், மற்றும் மருத்துவரிடமும், மருத்துவ பரிசோதனைகளுக்கும் செல்லும் தினங்கள் தான் பதிவாகி வருகின்றன.

வீரகேசரியில் பணியாற்றிய வேளையில் எமது பிரதம ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன் என்னிடம் தந்த கறுப்பு நிற அட்டையிலமைந்த தொலைபேசி எண்களை பதிவுசெய்யும் சிறிய டயறிக்குள் இருக்கும் எண்கள் பல சொல்லத்தவறிய திகில் கதைகளையும் உள்ளடக்கியிருக்கின்றன.

அதில் அமைச்சர்கள், தொழிற்சங்கவாதிகள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், ஆயர்கள், அரச அதிபர்கள், ரயில் நிலைய அதிபர்கள், தபாலதிபர்கள், கல்வி அதிகாரிகள், மரண விசாரணை அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உட்பட பலரதும் தொலை பேசி இலக்கங்கள் காலத்துக்கு காலம் பதிவாகியிருக்கின்றன. அந்த இலக்கங்கள் கறுப்பு, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களிலும் காணப்படுகின்றமையால் வேறு வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.


நீலன் திருச்செல்வம்

### அதற்கு 35 வயதாகிறது!

ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட்ட தருணத்தில் அதுவும் எனது பொதிகளுடன் எப்படியோ சேர்ந்து வந்துவிட்டது. இன்றும் எனது மேசையிலிருந்து என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறது.

எமது பத்திரிகை ஆசிரியர் எனக்கு கறுப்பு நிறத்தில் அட்டை அமைந்த அந்தச் சிறிய டயறியை தந்தது தற்செயல் தான். துக்கத்தின் அடையாளம்தான் கறுப்பு என்பதனால், மரணத்தின் மூலம் துயரத்தையும் நினைவுகளையும் தந்து விட்டுச்சென்றுவிட்டவர்களின் தொலைபேசி இலக்கங்கள் எனது பயன்பாட்டுக்கே அவசியமற்றவகையில் நனவிடை தோய வைத்துக் கொண்டிருக்கிறது.

A முதல் Z வரையில் அந்த எழுத்துக்களுக்குரிய பல முக்கியஸ்தர்களின் தொலைபேசி இலக்கங்கள் இலங்கையில் பத்திரிகைப்பணியில் எனக்கு மிகவும் அவசியமாகியிருந்தது.

காலையில் 8.30 மணிக்கே வீரகேசரி அலுவலகம் வரவேண்டிய தேவை இருந்தமைக்கு அங்கு முதலில் மித்திரனும் பின்னர் வீரகேசரியும் அச்சிடப்படுவதும் ஒரு முக்கிய காரணம்.


அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

முன்னாள் பிரதம ஆசிரியர் (அமரர்) க. சிவப்பிரகாசம் அவர்களால் சூட்டப்பட்ட பெயர் மித்திரன். 1960 களில் அதனை மாலைத்தினசரியாகத்தான் வெளியிட்டார்கள். அதன் உள்ளடக்கம் பரபரப்புத்தான். ரஜனி – கே.வி. எஸ். வாஸின் மர்மத் தொடர்கதைகளுக்கும் ஜி.நேசனின் ஜமேலா, பட்லி, பூலான்தேவி பற்றிய கலகலப்பூட்டும் தொடர்களுக்காகவும் முன்னர் பிரசித்திபெற்று பரபரப்பாகப் பேசப்பட்ட கொலை வழக்குகள் பற்றிய செய்திக்கதைகளுக்காகவும் மித்திரன் வெளிவந்தாலும், காலப்போக்கில் அவை போன்ற தொடர்களும் உள்ளடக்கிய செய்தி ஏடாகவும் சாதாரண வாசகர்களை கவரும் எளிய தமிழிலும் மித்திரன் காலைத்தினசரியாகியது.

அச்சு இயந்திரத்தின் தேவை கருதி நிருவாகம் முதலில் மதியம் மித்திரனையும் மாலை 5 மணிக்குப் பின்னர் வீரகேசரியையும் அச்சிட்டது.

முதலில் வடபகுதிக்கான பதிப்பும் அதன்பின்னர் மலையகம், கிழக்கு மாகாணப் பதிப்புகள் அச்சாகும். மலையகச் செய்திகளுக்கு ஒரு பக்கமும், கிழக்கிற்கு ஒரு பக்கமும் துரிதமாக மாற்றப்பட்டு அச்சாகி கோட்டை ரயில் நிலையத்திலிருந்து தினமும் இரவு புறப்படும் காங்கேசன்துறை தபால் ரயில் மற்றும் கிழக்கிற்கும் மலையகத்திற்கும் புறப்படும் தபால் ரயில்களை நாடி அந்தப் பதிப்புகள் வீரகேசரி வாகனங்களில் வேகமாகப் பறக்கும். மறுநாள் காலையில் வெளியூர்களில் இருக்க வேண்டிய இந்தப் பதிப்புகளும், இரவில் நகரப் பதிப்புக்காக மாறி விடும். நாடாளுமன்ற விவாதங்கள் மற்றும் முக்கிய பிந்திய செய்களுக்காக நகரப்பதிப்பு நள்ளிரவும் கடந்து அச்சாகும்.

பத்திரிகைப் பணி என்பது இன்று போன்றும் ownload Journalism அல்ல! ஒருவகையில் Team Work. அங்கிருந்த அனைவருக்கும் வேகமும் விவேகமும் தேவைப்பட்டன.

வடக்கு–கிழக்குபிரதேசங்களில் இடம்பெறும் போர்க் காலச் செய்திகளை எழுதும், அவை தொடர்பாக பிரதேச நிருபர்கள் தொலைபேசியில் தரும், தபாலில் அனுப்பும் செய்திகளை செம்மைப்படுத்தி உரிய பொருத்தமான தலைப்பிட்டு அச்சுக்கோப்பாளர் பிரிவுக்கு அனுப்பவேண்டியவேலை. மித்திரனில் அப்போது செய்தி ஆசிரியர் மயில் தவராஜா. முதலில் அந்தப் பதவியிலிருந்த கே. நித்தியானந்தன்வீரகேசரியில் இரவுக்கடமைக்கு மாற்றப்பட்டார்.

சூரியகுமாரன் என்பவர் வெளிநாட்டுச் செய்திகளை ரோய்டர், பி.ரி.ஐ. செய்திச் சேவையிலிருந்து பெற்று மொழி பெயர்த்துக்கொடுப்பார். ஜி. நேசன் தொடர் பத்திகளை கவனித்தார். பின்னாளில் மித்திரனின் செய்தி ஆசிரியர்களாக எம்.பி.எம். அஸ்ஹர், சொலமன் ராஜ் ஆகியோரும் பணியாற்றினார்கள். இந்த இருவரும், சூரியகுமாரனும், மறைந்துவிட்டனர். நித்தியானந்தன் ஓய்வுபெற்றுவிட்டாலும் அவரது மகளும் மருமகனும் தற்போது அங்கு பணியாற்றுகிறார்கள். மயில்தவராஜா வெளிநாடொன்றில் வசிக்கிறார்.

வடக்கு – கிழக்கு போர் சம்பந்தப்பட்ட தாக்குதல் செய்திகளை முதலில் மித்திரனுக்கு எழுதிக்கொடுத்துவிட வேண்டும். அதன்பின்னர் மேலும் தகவல்களை பெற்று விரிவாக எழுதி வீரகேசரிக்குத் தரவேண்டும். எமக்குப் பின்னர் கடமைக்கு வரும் செய்தி ஆசிரியர் நடராஜா, பிரதம ஆசிரியர் சிவநேசச்செல்வன், வாரவெளியீட்டுக்குப்பொறுப்பான ஆசிரியர்பொன். ராஜகோபால் ஆகியோருக்கு முதலில் மித்திரனுக்கு எழுதிய செய்திகளின் சுருக்கமான குறிப்புகளை சொல்ல வேண்டும்.

தொலைத்தொடர்பாடலுக்கு எனக்கு பெரிதும் உதவும் என்பதனால் என்னிடம்



சிவநேசச்செல்வன் அன்று தந்த அந்த டயறி இன்று என்னை துயரத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறது.

அதில் இடம்பெற்ற பலர் இன்று உயிரோடு இல்லை. சிலர் என்னவானார்கள் என்பதும் தெரியாமல் காணாமற்போய்விட்டனர். சிலரை இயற்கை அழைத்துக்கொண்டது.

**துன்பியல் புன்னகையுடன் எனது மேசையில் வீற்றிருக்கும் அந்த கறுப்பு டயறி!**

இன்று அவர்களின் தொலைபேசி இலக்கங்களும் அவர்களின் நினைவுகளைப்போன்று அழியாமல் இருக்கின்றன. மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் வேல்முருகு, விஜயகுமாரணதுங்க, சாம் தம்பிமுத்து, குமார் பொன்னம்பலம், மட்டக்களப்பு அரசாங்க அதிபர் அந்தோனி முத்து, நீலன் திருச்செல்வம், யாழ். அரசாங்க அதிபர் பஞ்சலிங்கம், மாவட்ட நீதிபதி அமிர்தலிங்கம், சர்வோதயம் கதிர மலை, கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிராந்திய செயலாளர் விஜயானந்தன் உட்படப் பலர் கொல்லப்பட்டுவிட்டனர்.

தனது திருகோணமலை இலக்கம் தந்திருந்த கவிஞர் புதுவை ரத்தினதுரையும் போர் முடிவுற்றவேளையில் சரணடைந்து காணாமலாக்கப்பட்டுள்ளார். வவுணதீவு , மட்டக்களப்பு நிருபர்கள் ரத்தினசிங்கம், நித்தியானந்தன் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

இந்த டயறியில் நான் தொலைபேசி இலக்கங்கள் பதிவுசெய்துவைத்திருக்காத வேறும் சிலருடனும் உரையாடல்கள் தொடர்ந்தன. அவர்களில் சிலர் வெளி நாடுகளிலும் தமிழகத்திலும் இருந்தனர். அவர்களுக்கு அன்றாடம் இலங்கையில் என்ன நடக்கிறது என்ற செய்திகள் தேவைப்பட்டதனால் தொடர்பு கொண்டனர். சென்னையில் அக்காலப் பகுதியில் இயங்கிய தமிழர் தகவல் நிலையத்திலிருந்து ரேவதி என்ற பெண்ணும், தமிழக சட்டசபை உறுப்பினர்கள் தங்கும் விடுதி ஒன்றில் தங்கியிருந்த அமிர்தலிங்கமும், ஆசிரியராக பணியாற்றிய நெல்லை நடேஸ், மட்டக்களப்பிலிருந்த தாரகி சிவராம் முதலானோரும் தொடர்புகொள்வார்கள். அவர்களிடமிருந்தே தொலைபேசி அழைப்புகள் வந்தமையால் நான் எனது டயறியில் அவர்களின் இலக்கங்களை பதிவுசெய்திருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் Saturday Review பத்திரிகையில் பணியாற்றிய கவிஞர் சேரன், காமினி நவரட்ண ஆகியோரின் இலக்கங்களும் உள்ளன. சேரன் தற்போது கனடாவில் வசிக்கிறார்.

சென்னையிலிருந்து தினமும் மதியம் உரையாடும் ரேவதி என்பவர் புனைபெயரில்தான் தொடர்புகொள்கிறார் என்று தொடக்கத்தில் தெரிந்துகொண்டாலும், அவர்தான் பின்னாளில் புலிகளினால் கொல்லப்பட்ட மகேஸ்வரி வேலாயுதம் என்ற ஊர்ஜிதமற்ற தகவல்களும் என்னை வந்தடைந்தன.

(19 ஆம் பக்கம் பார்க்க..)



தம்மை தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றுவது எனத் தீர்மானிக்கட்டிருப்பதாக அண்மையில் வெளி யான செய்திகள் குறித்து கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசாவுக்கு காட்டமாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார். அக் கட்சியின் முன்னாள் இளைஞர் அணிச் செயலாளர் வி.எஸ். சிவகரன். அது இங்கே முழுமையாகப் பிரசுரமாகின்றது.

# காற்றோடு கத்திச்சண்டை போடுகிறார் சேனாதிராசா

## யாப்பை மீறியவர்கள் நாங்களா? மாவையா? மன்னார் சிவகரன் காட்டமாகக் கேள்விக்கணை

உட்கட்சிசனநாயகத்திற்கு சாவு மணி அடித்துவிட்டு, அரசியல் அறத்திற்கு மரண தண்டனை கெடுத்துவிட்டு, கண்ணாடிக் கூண்டில் இருந்து கல்லெறிய வேண்டாம். நான் ஒன்றும் கருவாட்டுக்கடையில் கற்பூரம் விற்பவன் அல்லன். தமிழ்த் தேசியம் எனும் ஆணி வேரில் இருந்து அரும்பியவன். எனக்கு இலவச விளம்பரம் பெற்றுத் தந்தமைக்கு மிக்க நன்றிகள்.

கட்சியின் சனநாயக விரோதங்கள் பற்றி பொதுமக்களும் அறிய வாய்ப்பு ஏற்படுத்தியமைக்கு உங்கள் ஆதாயச் சூதாடிகளுக்கு மீண்டும் அகமகிழ்ந்த நன்றிகள். கட்சியின் அடிப்படை உறுப்பினரில் இருந்து விலகிவிட்ட என்னை எப்படி நீக்கலாம். இது உட்சபட்ச கோமாளித்தனம்.

22.07.2017 அன்றிலிருந்து கட்சியின் அடிப்படை உறுப்பினரில் இருந்து – சனநாயகம் இல்லாத கட்சியில் இருந்து – விலகுகிறேன்எனக்கடிதம் அனுப்பிவிட்டு தங்களுக்கும் தங்கள் நிர்வாக செயலாளருக்கும் அது குறித்துத் தொலைபேசியில் கூறியிருந்தேன்.

நான் ஒன்றும் பதவி சுகபோகத்திற்காக பின் கதவால் வந்த வழிப்போக்கன் இல்லை. 2009 ஆம் ஆண்டு நடுநிசியில் எல்லோரும் அச்சப்பட்டு அடைபட்டுக் கிடந்த காலத்தில் துணிந்து கட்சியில் சேர்ந்த இரண்டாவது தமிழரசுக் கட்சியின் முதலாவது இளைஞன். பலரது வெறுப்புக்கு மத்தியில் இரண்டாவது தமிழரசுக் கட்சியை மன்னாருக்கு கொண்டு வந்தவனும் அடியேனே. வடகிழக்கு முழுக்க இளைஞர் அணிகளை உருவாக்கி எனது சொந்தச் செலவில் மாதாந்தம் சென்று அவர்களை இயக்கியவன். கட்சி மாநாட்டை விட பெரிய அளவில் இளைஞர்அணி மாநாட்டை நடத்திக்காட்டியவன்.

2010 ஆம் ஆண்டில் இருந்து மத்திய குழுவிலும் ஏனைய கூட்டங்களிலும் உட்கட்சி சனநாயகம் சீர்திருத்தம் பற்றி பேசி வந்துள்ளேன் இப்போது உள்ளவர்களில் விடுதலை அரசியலுக்கு விளக்கம் தெரியாமல் பதவி சுகபோகத்திற்காக வழிப்போக்கர்களாக வந்துள்ளவர்களே அதிகம்.

அரசியல்பிழைத்தோற்கு அறம் கூற்றாகும் என்கிறது சிலப்பதிகாரம் – ஆனால் அறத்தையே அடியோடு அழித்தவர்கள் நீங்கள். வலிசுமந்த மக்களை மந்தைகள் என நினைக்காதீர்கள். கட்சிக் கட்டுப்பாடு, ஒழுக்கம், கட்சி யாப்பு, உப விதிகள் பற்றி பேசுவதற்கு தமிழரசுக் கட்சிக்கு அருகதை இல்லை, தங்களுக்கும் எந்த தார்மீகமும் இல்லை, ஒரு கட்சிக்கூட்டத்தையாவது ஒழுங்கு முறையாக நடத்தினீர்களா? கட்சிப்பதவி தெரிவுகள் யாப்பின்படி நடைபெற்றனவா? எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடை முறைப் படுத்தப்பட்டனவா? இது பற்றி எத்தனை மத்திய குழுவில் நான் கேள்வி எழுப்பியுள்ளேன்! 10.10.2014 தங்களுக்கு நீண்ட கடிதம் எழுதியிருந்தேன்; ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா? கட்சியின் மத்திய குழுவின் மொத்த அங்கத்தவர் 50 என விதி 08 இன் 4ஆவது பிரிவு சொல்கிறது. யாப்பை மீறி சட்டவிரோதமாக நீங்கள் மத்திய குழுக் கூட்டத்திற்கு பலரையும் அழைப்பது உங்கள் அறமா?

மத்திய குழு உறுப்பினரைத் தெரிவு செய்யும் மூன்று முறைமைக்குள்ளாலும் தெரிவு செய்யப்படாதசம்பந்தன் எப்படி மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும்? எப்படி அரசியல் குழுவிற்கு தலைமை தாங்க முடியும்? யார் யாப்பை மீறியவர்? எவரை ஏமாற்றுகிறீர்கள் ?

கட்சியின் சிரேஸ்ட உப தலைவர் ஒருவர் என விதி 7 இன் முதலாவது பிரிவு சொல்கிறது. நீங்கள் இருவரை நியமித்து வைத்திருக்கின்றீர்கள் இது உங்கள் அறமா? ஒரு துணைப் பொதுச் செயலாளரே இருக்கவேண்டுமென விதி 07இன் 4ஆவது பிரிவு சொல்கின்றது ஆனால் இருவரை நியமித்துள்ளீர்கள். இதுவும் உங்கள் அறமா? 6 துணைச் செயலாளர்கள்தான் இருக்கலாம் என விதி 5 கூறுகின்றது.

ஆனால் நீங்கள் 16 பேரை நியமித்துள்ளீர்கள். இதுவும் நீங்கள் செய்த அறமா? கட்சியின் யாப்பை மீறித் தெரிவுகள் இடம் பெறக்கூடாது என நான் மத்திய குழுவில் தீர்மானம் கொண்டு வந்தேன். செயற்படுத்தினீர்களா?

மன்னார், முல்லைத்தீவு, வட்டுக்கோட்டை தொகுதி ஆகிய வற்றில் இருந்து 2014ஆம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் மாநாட்டிற்கு தீர்மானம் கொண்டு வந்தோம். யாப்பின்படி தெரிவு, கட்சி மறுசீரமைப்பு, காமராஜர் திட்டம் அமைப்பு மாற்றம் எனப் பிரேரித்தோம்.

நீங்கள் பொதுக்குழுவில் அதை வாசிக்கவே இல்லை. பேராசிரியர் சிற்றம்பலம் இரண்டு முறை அந்தக்கூட்டத்திலே கேள்வி எழுப்பியும் நீங்கள் பதில் சொல்லவே இல்லை.

2012 மட்டக்களப்பு மாநாட்டில் பொதுக்குழு தெரிவு முடிந்த பின் நீங்கள் தான்தோன்றித்தனமாக கட்சியின் யாப்பை மீறி சி.வீ.கே சிவஞானத்திற்கு துணைப் பொதுச் செயலாளர் பதவி வழங்கினீர்கள், இதனால் முரண்பட்டு கட்சியின் மூத்த உறுப்பினரும் கட்சியின் பொருளாளருமாகிய s.t.தியாகராஜா தனது பதவியை இப்படியான கட்சியில் தாம் வகிக்க விரும்பவில்லை எனக்கூறி கட்சியை விட்டு விலகினார். இதுவும் அறமா?

எம்முடன் ஊடக சந்திப்பு நடத்திய கட்சியின் மூத்த உறுப்பினர் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களுக்கு நடவடிக்கை எடுத்தீர்களா? முல்லைத்தீவு ஈசனை வேண்டுமென்றே நீக்கினீர்கள். அப்படியென்றால் தற்போது ஆயிரக்கணக்கானவர்களை நிறுத்தவேண்டும் அல்லவா? யானையிலும் கையிலும் சூரியனிலும் சைக்கிளிலும் அங்கத்தவர்கள் ஆகிவிட்டார்களே. அருந்தவபாலனை அசைத்துப் பார்த்தீர்கள். முடியவில்லையே.

இரண்டு வருடங்கள் இயங்கும் அங்கத்தவராக இல்லாத ஒருவர் மத்திய குழு உறுப்பினர் ஆக முடியாது. ஆனால் 2014 ஆம் ஆண்டு மாநாட்டில் மாகாண சபை உறுப்பினர் சயந்தன் அப்போது கட்சியின் உறுப்பினர் கூட இல்லை என அங்கத்துவத்திற்குப் பொறுப்பாக உள்ள நிர்வாகச் செயலாளரால் கூறப்பட்டது அதையும் மீறி மத்திய குழு உறுப்பினர் ஆக்கினீர்களே இதுவும் கட்சி ஒழுக்கமா?

யாப்பில் இல்லாத பதவி எனக்கு வேண்டாம். மஹிந்தவின் அமைச்சரவையா? – என உங்களின் தற்போதைய சிரேஸ்ட உப தலைவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா கட்சியின் 2014 ஆம் ஆண்டு மாநாட்டில் பகிரங்கமாக கூறியமையை மறந்து விட்டீர்களா? கட்சியின் மூத்த உறுப்பினர்களையே அரசியல் உயர் பீடத்தில் நியமிக்க வேண்டும் என யாப்பு சொல்கின்றது. ஆனால் தேர்தல் அரசியலுக்கு வந்த மாகாணசபை உறுப்பினர்களான சத்தியலிங்கம், குருகுலராசா இருவரையும் நியமித்தீர்களே இதுவும் அறமா?

கட்சியின் மூத்த உறுப்பினரும் மூத்த பேராசிரியருமாகிய சி.க.சிற்றம்பலத்திற்கு இரண்டு முறை தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தருவோம் எனக் கூறி ஏமாற்றினீர்களே இதுவும் அறமா? கட்சிக்காக 50 ஆண்டுகளுக்கு மேலாக தன் வாழ் நாளை அர்ப்பணித்து தனது வீட்டையே பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கட்சி அலுவலகமாக பயன்படுத்தும் குலநாயகத்திற்கு குறைந்த பட்சம் தவிசாளர் பதவி கூட வழங்க முன்வர வில்லையே ஏமாற்றினீர்களே இது எந்தவித அறம்.

உங்கள் சகோதரியின் முறையற்ற காணி விடயத்தை ஒப்பேற்றுவதற்கு பிரதேச சபையில் ஒத்துழைக்கவில்லையென்று உங்களுடன் பல இக்கட்டான சூழ்நிலையில் கூட இருந்த திரு. கௌரிகாந்தனை வேண்டுமென்று நிறுத்தினீர்களே ஆனால் நீதிமன்றால் தோற்றுப் போனீர்களே. இதுவும் உங்கள் அரசியல் அறமா?

14.07.2013 நடைபெற்ற மத்திய குழுவில் சர்வாதிகாரமாக திரு. சம்பந்தன் அவர்கள் விக்னேஸ்வரனைத் தான் முதல்வர் ஆக்குவார் என கொண்டு வந்தீர்கள். தற்போது முறையற்று ஜன நாயக படுகொலை செய்து அவரை வெளியேற்ற முனைகிறீர்களே இது எந்த வகையில் நியாயம்? ஆகவே நாம் உண்மை பேசியதுதான் குற்றமா? நியாயம் கேட்டமைதான் தவறா?

இன்னும் அதிகம் கூறலாம். பக்கங்கள் அதிகரித்துவிடும். வரலாறு எல்லாப்பக்கங்களையும் பதிவு செய்யும் என்பதை நீங்கள் மறந்து போனமை தான் வேதனையே. உங்கள் கடந்த கால அறமும் அறிவோம். நத்தைக்குப் பயந்து மெத்தைக்குள் ஒளிபவர்கள் நாம் அல்லர் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியம் எனும் உயரிய கொள்கைக்காக விடுதலை அரசியல் பேசவந்தவன் வெறுமனே அரசியலில் பதவி அனுபவிப்பதுதான் எனது இலக்கு என்றால் ஆறும் மூன்றும் ஒன்பது, ஐயா சொன்னால் பன்னிரண்டு என நேர்த்தியாக வேசமிட்டு நடித்து பதவி அனுபவித்து இருக்க முடியும்.

அடிப்படையில் நான் ஒரு இலக்கியவாதி, எழுத்தாளன் என்பதால் நடிக்கவும் தெரியும். நகைக்கவும் தெரியும். கொள்கை அரசியல் வேறு, இலக்கியம் வேறு என்பதில் நான் எப்போதும் மிகத் தெளிவானவன். ஏனெனில் நீண்ட தமிழ்த் தேசிய பின்னணி உள்ள குடும்ப பத்தைச் சோந்தவன். அதனால்தான் தனித்து நின்று உங்களோடு போராடுகின்றேன். உங்கள் பிற்போக்குத் தனங்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்துவேன்.



(19ஆம் பக்கம் பார்க்க...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# உன்னைச் சரணடைந்தேன்

கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 113

## ஆறுமுகம் ஆன பொருள்

என் குருநாதர் பேராசிரியர் இராதா கிருஷ்ணன் இங்கு வரும்போதெல்லாம் 'எடே தம்பீ! அவரை ஒருக்கா பண்டிதமணியிடம் அழைத்துப் போகவேணும்,' கழகக் கணக்கில் கார் கொண்டுவரச் சொல்லி, அரிகண்டம் செய்வார். கேளாதது போல பல தரம் சமாளித்தேன். இவர்கள் பண்டிதமணியைப் பற்றிப் பேசியதை, பல தரம் கேட்டதால், என்னையறியாமல் எனக்குள் பண்டிதமணியில் ஒரு பகை விளைந்திருந்தது. அதனால் வித்துவானின் கோரிக்கையில் எனக்கு ஆர்வமில்லை. ஒரு நாள் சிக்கெனப் பிடித்தார். 'இண்டைக்கு எப்படியும் போகத் தான் வேணும்' வேறு வழியில்லாமற் காரில் புறப்பட்டோம். முன் சீற்றில் குருநாதர். பின் சீற்றில் வித்துவான், வித்துவான் வேலன், நான், குமாரதாசன் ஆகியோர். கார் போய்க் கொண்டிருக்கும் போதும் பண்டிதர் பற்றிய பழைய கதைகளைப் பேசி வந்தார்கள். எனக்கோ எரிச்சல். இவ்வளவு 'ராங்கி' பிடித்த பண்டிதமணியிடம் பேராசிரியரை அழைத்துப் போகத் தான் வேணுமா?

கார் பண்டிதமணி வீட்டு வாசலில் நின்றது. முதலில் வித்துவான் தான் இறங்கினார். அவருக்குப் பின்னால் குருநாதர். தொடர்ந்து வேலன், கடைசியில் நானும் குமாரதாசனும். பத்தடி எங்களுக்கு முன்னாற் சென்ற வித்துவான் திடீரென நின்றார். பண்டிதமணி கடும் சுகவீன முற்றிருந்த வேளையது. தாடியும், குடுமியும் பண்டிதமணியின் அடையாளங்கள். தலையில் வந்த புண்களால் அன்று தான் தாடி, குடுமி முழுவதும் மழிக்கப்பட்டிருந்தன. மொட்டையாய் கூனியபடி குந்தியிருந்தார் பண்டிதமணி. அந்தக் காட்சி தான் வித்துவானை நிற்கச் செய்தது. ஒரு நிமிடம் பண்டிதமணியை உன்னிப்பாய்ப் பார்த்தார். மழித்த முகம் அடையாளம் தெரிந்ததும் அதிர்ந்தார். வழக்கம் போல் தலையிற் கைகுவித்தார். 'என்ர தமிழே! இது என்ன கோலம்' என்று, அவர் கதறிய கதறலில் அந்த முற்றம் அதிர்ந்தது. ஓடிப் போய் பண்டிதமணியின் கால் பிடித்து வித்துவான் அழ, வேலன் விம்ம, என் குருநாதர் பிரம்மித்துப் போனார். நான் அதிர்ந்தேன். வழக்கமாய்ப் பண்டிதமணியைப் பகைத்துப் பேசும் அந்த இரண்டு உள்ளங்களும், அவர் தளர்ச்சி கண்டு வாடி உருகி நின்றன. பண்டிதமணியின் சீடராய், தம்மைப் பிரகடனப்படுத்தித் திரிந்தோர்களிடம் கூட, இந்த உருக்கத்தை நான் என்றும் கண்டதில்லை. தமிழால் விளையும் உறவு, பகையில்லாத கோபம். பகைவனுக்கு அருளும் நெஞ்சு. என்றெல்லாம் நான் இலக்கியங்களில் மட்டும் படித்த விஷயங்கள், அன்று எனக்குத் தரிசனமாயின.

* * *

கட்டுரை விரிவது தெரிகிறது. ஓர் இலக்கியமாய் என்னுள் பதிந்த வித்துவானைப் பற்றி இன்னும் எத்தனையோ சொல்லலாம். எதை விடுவதென்று தெரியவில்லை. என்னைப் பிள்ளையாய் நேசித்தார். என்னை ஓர் உயர்ந்த மனிதனாக்க வேண்டும் என்பதில், என்னைவிட அக்கறையாய் இருந்தார். திருகோணமலைக் கம்பன் விழா. எல்லோரும் ஒன்றாய்ச் சென்றிருந்தோம். ஒரு மதிய உணவின் பின் எல்லோரும் ஒன்றாயிருந்த நேரம், நான் அசைவம் சாப்பிட்ட காலம் அது. ஜீவகாருண்யரான வித்துவான் நான் புலால் மறுக்க வேண்டும் எனப் போராடுவார். அன்றும் அப்படித்தான். 'தம்பீ நீ எதுவும் செய். ஆனால் மச்சத்தை மட்டும் விட்டுவிடு' என்னிடம் கெஞ்சினார். அருகிலிருந்த வித்துவான் வேலன் புரட்சிக்காரர். அவர் போக்கே வேறு. வித்துவானோடு உறவாய் மோதுவார். அவரும் என்னைப் பிள்ளையாய் நேசித்தவர்.



வித்துவான் சொன்னதும் எனக்காகப் பரிந்து பேசத் தொடங்கினார் வேலன். 'அண்ணை! சும்மா இருங்கோ, அவனைக் கரைச்சல் பண்ணாதைங்கோ. அவனுக்கு மீனுக்குள்ள கடவுள் தெரியிறார். அவன் சாப்பிடட்டும் உங்களுக்கென்ன' அவர் சொன்னது வித்துவானுக்குப் பிடிக்கவில்லை. வேலன் என்னைப் பழுதாக்கி விடுவாரோ என்று பயம் அவருக்கு. வித்துவான் வேலன் தசரதன் போல் தோய்ந்தே கடந்தவர். அண்ணாமலையில் படிக்கும் போது ஒரு பிராமணப் பெண்ணை அவர் 'சைற்' அடித்த தாய், வித்துவான் அடிக்கடி பகிடி பண்ணுவதைக் கேட்டிருக்கிறோம். எனக்குப் பரிந்து வித்துவான் வேலன் பேசியதும் படுத்திருந்த வித்துவான் துள்ளி எழும்பினார். வித்துவான் வேலனை வளைந்து கும்பிட்டார். முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டு 'தம்பீ! நீ பிராமணத்தியிட்டையும் கடவுளைக் காணுவாய், பாவம் அவளை விட்டிடு' என்று கெஞ்சினாற் போல் சொல்ல, அத்தனை பேரும் சாப்பிட்டது செமிக்கச் சிரித்தோம். இன்று அவர் விருப்பப் படி வாழ்கிறேன். பார்க்க அவர் தான் இல்லை.

* * *

மற்றொரு நாள் நான் தங்கியிருந்த வாடகை அறைக்கு அழுதபடி ஓடி வருகிறார் வித்துவான். 'பாவீ! பாவீ! இப்படி அநியாயம் செய்யிறானே' விம்மி அழுதபடி வந்த அவரைக் கண்டு நான் பதறிவிட்டேன். யாரோ அவருக்கு ஏதேனும் செய்துவிட்டார்களோ என, எனக்குள் ஆத்திரம். 'என்ன சேர்? என்ன நடந்தது? ஆர் என்ன செய்தவங்கள்?' நான் பதறி ஓடி வர, 'இங்கை வா அப்பு, இந்த அநியாயத்தைப் பார், இப்படி ஓர் உயிரை வதைக்கலாமே?' என்று கூறியபடி அவர் கைகாட்டிய திசையைப் பார்க்கிறேன். ஒருவன் ஓர் ஆட்டை வாங்கி அதை ஓர் சின்னப் பெட்டிக்குள் திணித்துக் கட்ட முயற்சித்துக் கொண்டிருந்தான். பெட்டிக்குள் அடங்க முடியாமல் ஆடு திமிறி 'மே ஏ..ஏ..' என்று கதறிக் கொண்டிருந்தது. வித்துவானால் அந்தக் காட்சியை ஜீரணிக்க முடியவில்லை. அன்றைக்கு அவர் அழுத அழுகைக்கு ஓர் அளவில்லை. கைகட்டிப் பார்த்ததை விட, என்னாலும் ஏதும் செய்ய முடியாத நிலை. வித்துவான் என் இதயச் சிகரத்தில் உட்கார்ந்த தினம் அது.

* * *

வித்துவான் ஆறுமுகம் என்ற அந்த அறிஞன் எனக்குத் தமிழைக் கற்றுத் தந்தான். எனக்குத் தர்மத்தைக் கற்றுத் தந்தான். எனக்கு வாழ்வைக் கற்றுத் தந்தான். எனக்கு அன்பைக் கற்றுத்தந்தான். உலகியல் வயப்பட்டிருந்த நான் அவரை முழுமையாக விளங்க முடியாது திகைத்திருக்கிறேன். விளங்கத் தகுதி பெற்றபோது இயற்கை அவரை அழைத்துக் கொண்டது. ஒன்று மட்டும் உண்மை. நல்லாரைக் காண்பதுவும் நன்றே என்று, ஔவை ஒன்றும் சும்மா சொல்லவில்லை.

* * *

## நுண்மாண் நுழைபுலத் தரிசனம்

''நுண்மாண்நுழைபுலம்'' மேடைகளிலும் கட்டுரைகளிலும் அறிஞர்களை உயர்த்தப் பயன்படுத்தப்படும் வெறும் அலங்காரத் தொடராகவே ஆரம்பத்தில் இத் தொடர் எனக்கு அறிமுகமாகியிருந்தது. பொருள் விளங்காமலேயே இத் தொடரைப் பாவித்து பலரை நான் பாராட்டியிருக்கிறேன். 'நுண்மையான மாட்சிமைப்பட்ட நுழைந்து தேடும் அறிவு'' என இத்தொடருக்கான பொருளை பிற்காலத்தில் அறிந்த போது அதன் முழுப் பெறுமதியையும் உணர்ந்திலேன். அத்தகு அறிவை நான் சந்திக்காமலே இருந்தது அதன் காரணமாக இருக்கலாம். பேராசான் இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர் அவர்களை என்று சந்தித்தேனோ அன்று தான் இத் தொடரின் முழுப்பெறுமதியையும் உணர்ந்தேன். இத் தொடரின் பெறுமதியை என்பதை விட தமிழின் பெறுமதியை, அறிவின் பெறுமதியை, தேடலின் பெறுமதியை, உணர்ந்தேன் எனல் சாலப்பொருத்தமாம்.

* * *

எளிமைப்படுத்துவதாய்ச் சொல்லி தமிழை மலினப்படுத்தி வரும் இக்காலத்தில் சிறுகதைகளும், நாவல்களும் மேலோட்டமான கட்டுரைகளுமே, கல்வியால் முடி சூட்டப்பட்டன. ''கனகா கதறிக்கதறி அழுதாள்'' என்று எழுதப்படும் இன்றைய தமிழைப் படிக்க எவருக்கும் ''நுண்மாண் நுழைபுலம்'' ஒன்றும் அவசியமில்லை. பத்திரிகைத் தமிழளவில், படிக்குந் தமிழும் வந்து விட்ட இக்காலத்தில் அறிவுலகில், ''நுண்மாண் நுழைபுலம்'' எனும் தொடர், பெரும்பாலும் வழக்கொழிந்த தொடராயிற்று. மேற்சொன்ன கல்விச் சூழலிலேயே வளர்ந்த எனக்கு, இத் தொடர் பற்றி விளக்கம் இல்லாமற் போனதில், ஆச்சரியம் என்ன?

* * *

நலிந்து கிடந்த இத்தகு அறிவுச் சூழலில், தமிழ் மேல் உள்ள ஆர்வம் மட்டுமே தகுதியாக, ஒரு சில பெரியார்களின் தமிழினால் ஈர்க்கப்பட்டு மேடைகளில் ஓர் அறிஞன் போல நானும் உலா வந்த காலம் அது. பல மேடைகளிலும் என்னைப் பேச



அழைத்ததால், புதிது புதிதாய் பேச வேண்டிய தேவை. அது படிக்கும் தேவையை உணர்த்திற்று. பதவிகளால் இனங்காணப்பட்டு பேரறிஞர்களாக உலாவந்த பலரையும் அடிக்கடி மேடைகளில் சந்தித்ததால் அவர்களிடம் நான் பெற ஒன்றும் இல்லையென்பது தெளிவாகியிருந்தது. படிக்கும் பசியோடு தக்க குருவைத் தேடித் திரிந்தேன். ''பண்டிதர்கள் ஆழக்கற்றவர்கள்'' எனும் செய்தி சொல்லப்பட்ட, பண்டிதர்கள் சிலரைத் தேடிப் படிக்க முயன்றேன் அவர்களிடம் கல்வி இருந்தது ஆனால் எனக்குத் திருப்தி உண்டாகவில்லை. காரணம் பெரும்பாலும் அவர்களிடம் இருந்தது, வெறும் ''மனனக்'' கல்வியே. அவர்களும் ஓதி இருந்தார்களே தவிர உணர்ந்திருக்கவில்லை. சரியானதைத் தேடுவதை விட பிழையைக் கண்டுபிடிப்பதிலேயே அவர்களுக்கு அதிக அக்கறை. என் மனப் பசிக்கு அவர்களாலும் சோறிட முடியவில்லை. என் தேடல் தொடர்ந்தது.

* * *

இந்நிலையில் கோண்டாவிலில் ஒரு கூட்டம் பல்கலைக்கழகம் பட்டமளித்த ஒரு பண்டிதருக்குப் பாராட்டு, அழைப்பிதழ் சொல்லிற்று. பல்கலைக்கழகம் பண்டிதரைக் கௌரவிக்கிறதா? ''ஏதோ இருக்க வேண்டும்'' என்று என் உணர்வு உந்த, கூட்டம் சென்றேன். பாராட்டப் பெற்றவர் ''வித்தகர்''.

* * *

(தொடரும்...)






# கனடாவில் மதிஅழகனுக்கு ஊடகத்துறைக்கான விருது











ஒலி – ஒளிபரப்பாளர் வி.என். மதிஅழகனுக்குத் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

ஊடக அனுபவ ஞானி எஸ். திருச்செல்வத்தை முதன்மைஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'தமிழர் தகவல்' 27ஆவது ஆண்டு விருது வழங்கலும், 'இளந்தளிர்' சுவடு வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபா மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றன. தமிழ்மொழி மூல அமர்வுக்கு திருமதி. ரஞ்சிதிரு தலைமை தாங்கினார்.

பல்வேறு துறைகளில் சாதனை படைத்த எண்மருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கைஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், இலங்கை சுயாதீன தொலைக்காட்சி, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், கனேடிய 24 மணிநேரத் தொலைக்காட்சி சேவையான ரி.வி.ஐ. என்பனவற்றில் கடந்த 47 வருட காலமாகப் பணியாற்றிவரும் மதிஅழகனுக்கு ஊடகத் துறைக்கான சிறப்பு விருது வழங்கப்பட்டது.

விருது வழங்கும் உரைகளை மூத்த சட்டத்தரணியும், எழுத்தாளருமான மனுவேல் யேசுதாசன் நிகழ்த்தும் போது மதிஅழகன் தொழில்சார் திறன் பெற்ற ஓர் ஊடகவியலாளர் என விவரித்துக் கூறினார்.

மதிஅழகனுக்குத் தங்கப் பதக்கம் சூட்டி,மலர்ச்செண்டு வழங்கி, 'தமிழர் தகவல்' பாராட்டுப் பத்திரம் என்பன கொடுக்கப்பட்டமையை அடுத்து கனடாவின் முதலாவது கறுப்பின அமைச்சரும்,கனடாவில் கறுப்பின மரபுரிமை மாதத்தை தோற்றுவித்தவருமான ஷோன் ஒகஸ்ரின் அம்மையார் நினைவுக் கேடயத்தை ஒப்படைத்தார்.

இலங்கையில் 'தினபதி','சிந்தாமணி' ஆசிரிய பீடம்,ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம்,சுயாதீன தொலைக்காட்சி,ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்,கனடாவில் ரி. வி.ஐ. நிறுவனம் என்பவற்றில் மதிஅழகனுக்கு நாற்பத்தியேழு ஆண்டு கால அனுபவம் உண்டு.

வி.என்.மதிஅழகன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பணிப்பாளர் நாயகமாகப் பதவி வகித்தவர்.

1971 இல் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராக ஒலிபரப்பில் கால் பதித்து இளைஞர்நிகழ்ச்சித் தொகுப்பாளராக, தேசிய – வர்த்தக சேவை அறிவிப்பாளராக,நிகழ்ச்சித் தொடர்புகலையக உத்தியோகத்தரும் எழுத்தாளராக, செய்தி, நடப்பு விவகார நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, கிராமிய நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, இயல் – நாடகக்கட்டுப்பாட்டாளராக, தமிழ்ச் சேவைப் பணிப்பாளராக அர்ப்பண சிந்தையுடன் சேவையாற்றிய மதி அழகனுக்கு ஊடகத்துறை அமைச்சு அளித்த அதி உயர் கணிப்பே அந்தப் பதவி.

இலங்கையில் 1979 ஆம் ஆண்டு சுயாதீன தொலைக்காட்சி சேவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது, வானொலி யில் செய்திவாசித்து வந்த மதிஅழகன் ஒளித்திரை பரிசோதனையை அடுத்து தொலைக்காட்சிசெய்தி வாசிப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



உத்தியோகபூர்வமாக அமர்த் தப்பட்ட முதலாவது தமிழ் செய்தி வாசிப்பாளரான இவர், தாயகத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி செய்தி வாசிப்பாளர்களில் அதி நீண்ட காலமாக (37 வருடங்கள்) செய்தி வாசிப்பில் ஈடுபட்டவர். சர்வதேச மட்டத்தில் தமிழ்மொழி மூல செய்தி வாசிப்பில் அதி மூத்தவரும் கூட. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் நேர்முக வர்ணனையாளராக விளங்கியவர்.

இலங்கை ஒலிபரப்பு முன் னோடிகளில் ஒருவரான 'நாவற்குழியூர் 'கே.எஸ்.நடராஜா நினைவாக கவிதைப்போட்டியையும், வானொலி நாடக பிதா மகர் எனப் பெருமைப்படுத்தப்படும் 'சானா' சண்முகநாதன் நினைவாகநாடகப் போட்டியையும் அகில இலங்கை ரீதியில் நடத்தி வரலாற்றில் முதற்தடவையாக அதிகூடிய பரிசுப் பணத்தை வெற்றியாளர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தவர்.

வடக்கு, கிழக்கு மாகாண பாரம் பரிய நாட்டுக்கூத்து, கொட் டகைக்கூத்து போன்ற கிராமியக் கலை வடிவங்களை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பியமையோடு அவற்றைஆவணப்படுத்தியவர்.


'ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ்' நிறுவனத்தின் விமானப் பணியாளர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சிகளை வழங்கவென விசேடமாக அமர்த்தப்பட்ட முதலாவது தமிழ் ஆசிரியர்.

ஐக்கியநாடுகள் நிறுவனத்துடன் தொடர்புபட்ட சர்வதேச கத்தோலிக்க ஒலிபரப்பு நிறுவனம் மதி அழகனை சிறந்த ஒலிபரப்பாளர் எனத் தெரிவு செய்து ஒலி பரப்புத் துறையில் கிடைக்கக் கூடிய 'U.N.D.A ' அதிஉயர் விருதை வழங்கியது.

இலங்கைஅரசாங்கத்தின் 'கலாபூஷணம்', 'தமிழ்மணி', சாஹித் திய விருது,'சமாதானத் தென்றல்' ஆகிய பட்டங்களையும், தனி யார் அமைப்புக்களின் பல விருதுகளையும் அடைந்தவர்.அகில இலங்கை சமாதான நீதிவானும் ஆவார்.

'வி.என்.மதிஅழகன் பேசுகிறேன்' – என் மனப் பதிவுகள், நந்தாப் புகழ்பெற்றநாயகன் 'நடிகமணி' வி.வி. வைரமுத்து ஆகிய இரண்டு நூல்களை ஏற்கெனவே எழுதிவெளியிட்ட மதிஅழகன் ' சொல்லும் செய்திகள்' என்ற கருவி நூலை இந்த வருட நடுப் பகுதியில் அறிமுகம் செய்யவிருக்கிறார்.

✧ வகுப்பறை, ஒன்றில் உள்ள மாணவர்களுக்கு விருப்பமான காலை உணவு பற்றிய தகவல்கள் பின்வருமாறு.




16. பிட்டை மட்டும் விரும்புவோர்

*1. 19* *2. 9* *3. 12*

17. தோசையையும் இடியப்பத்தையும் விரும்புவோர்

*1. 3* *2. 7* *3. 1*

18. மழை பெய்தால் நிலம் நனையும்

மழை பெய்துள்ளது. ஆகவே,


1. நிலம் நனைய வில்லை 2. நிலம் காய்ந்துள்ளது 3. நிலம் நனைந்துள்ளது.

19. எல்லாப் பிள்ளைகளும் மழலை பேசுவார்கள். பாலா மழலை பேசுவான். ஆகவே பாலா ஒரு மழலை, என்னும் கூற்று..........

1. சரியானது 2. தவறானது 3. கூற முடியாது

20. வடக்கிற்கும் மேற்கிற்கும் இடைப்பட்ட திசையின் எதிர்த்திசை யாது?

1. தென்கிழக்கு 2. தென்மேற்கு 3. வடமேற்கு

21. 


குமரன் பாடசாலைக்குச் சென்ற திசை ஒழுங்கு முறையினைத் தெரிவு செய்க.

1. மேற்கு → தெற்கு → வடகிழக்கு → கிழக்கு

2. தெற்கு → வடகிழக்கு → மேற்கு → கிழக்கு

3. மேற்கு → வடகிழக்கு → தெற்கு → வடக்கு

22. 20 ஆம் நூற்றாண்டின் ஐந்தாம் தசாப்தத்தில் வரும் ஆண்டு.

*1. 1955* *2. 1946* *3. 2046*

23. 2001 ஆம் ஆண்டு வரும் நூற்றாண்டு

*1. 19 ஆம் நூற்றாண்டு* *2. 20 ஆம் நூற்றாண்டு* *3. 21 ஆம் நூற்றாண்டு*

24. மைதானம் ஒன்றைச் சுற்றி சம இடைவெளியில் கம்பங்கள் நடப்பட்டுள்ளன. இரண்டு கம்பங்களுக்கிடையிலான தூரம் 10 மீற்றர், 150 மீற்றர் சுற்றளவுள்ள மைதானத்திற்கு நடப்பட்டுள்ள கம்பங்கள் எத்தனை?

*1. 14* *2. 16* *3. 15*





# புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 15 விடைகள் (பகுதி - 02)

(1) (1) எண்ணிய முடிதல், நல்லவே எண்ணல் (பொருத்தமானது)
(2) தெளிந்த (3) உடன் மறைதல் (4) அறிவு (5) பனி (6) அன்னாய் / அன்னை (6 புள்ளிகள்)

(2) (1) கறி (2) கைம்மாறு (3) பயிற்சி (3 புள்ளிகள்)

(3) (1) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (2) இலங்கைப் போக்குவரத்துச்சபை
(3) தேசிய கல்வி நிறுவகம் (3 புள்ளிகள்)

(4) (1) பதற்றக்காரன் (2) அனுபவமில்லாத கல்வியறிவு / பயனற்ற கல்வியறிவு
(3) தந்திரமாய்ப் பேசுதல் (3 புள்ளிகள்)

(5) (1) தேசாபிமானி / நாட்டுப்பற்றாளன் (2) சுயநலவாதி
(3) அகிம்சை / வருத்தாமை / துன்புறுத்தாமை (3 புள்ளிகள்)

(6) (1) ✓ (2) x (3) x (3 புள்ளிகள்)

(7) (1) குண்டு (2) அளகு (2 புள்ளிகள்)

(8) (1) Horse (2) Ruler (2 புள்ளிகள்)

(9) (1) நான் உங்களுக்கு உதவலாமா?, நான் உங்களுக்கு உதவ முடியுமா?
(2) உமது / உங்களுடைய பெயர் என்ன? (2 புள்ளிகள்)

(10) (1) Close your eyes (2) Let's go home (2 புள்ளிகள்)

(11) (1) கலு லேல்ல (2) லேனா (2 புள்ளிகள்)

(12) (1) அம்மா சமைத்து முடித்து விட்டாரா? (2) அதோ ஆசிரியர் வருகிறார். (2 புள்ளிகள்)

(13) (1) மம நான்ன (Dh) த? (1 புள்ளிகள்)

(14) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

(15) ஐயாயிரத்து எழுபத்தொன்பது / ஐந்தாயிரத்து எழுபத்தொன்பது

(16) x

(17) 15cm

(18) 5 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

(19) 8*l* 960*ml*

(20) $\frac{8}{32}, \frac{1}{4}, \frac{4}{16}$

(21) 16cm

(22) 14:25 மணித்தியாலயங்கள்

(23) 2

(24) 42cm

(25) 126 இனிப்புக்கள்

(26) 18*l*

(27) 45km

(28) 350g

(29) 24 பேர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (30) | 4 | (41) | 3 | (52) | 3 |
| (31) | 3 | (42) | 3 | (53) | 4 |
| (32) | 3 | (43) | 2 | (54) | 3 |
| (33) | 1 | (44) | 1 | (55) | 4 |
| (34) | 2 | (45) | 1 | (56) | 4 |
| (35) | 3 | (46) | 2 | (57) | 3 |
| (36) | 2 | (47) | 3 | (58) | 2 |
| (37) | 3 | (48) | 3 | (59) | 4 |
| (38) | 2 | (49) | 2 | (60) | 2 |
| (39) | 4 | (50) | 1 | | |
| (40) | 2 | (51) | 2 | | |

(30 புள்ளிகள்)



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **18**

தரம்-5

பகுதி - I நேரம்- 45 நிமிடம்

✦ **1- 38 வரையான வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01.  வினா 1 தொடக்கம் 2 வரையுள்ள வினாக்களில் படத்துடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. இயற்கை  2. இரவு  3. குளிர்மை

02. 

1. காடு  2. மாமிச உண்ணி  3. நன்றியுணர்வு

03. பின்வரும் கட்டங்களில் வேறுபட்ட சொல் இடம்பெறும் கட்டங்களைத் தெரிவு செய்க.

| 1. | 2. | 3. |
|---|---|---|
| மாம்பழம்<br>வாழைப்பழம்<br>பலாப்பழம் | தக்காளி<br>வெண்டி<br>மரக்கறி | வட்டம்<br>சதுரம்<br>முக்கோணம் |

04.

| 1. | 2. | 3. |
|---|---|---|
| வைத்தியர்<br>நோயாளி<br>தாதி | அதிபர்<br>ஆசிரியர்<br>மாணவர் | சந்தை<br>வியாபாரி<br>நூலகம் |

✦ **தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடையைத் தெரிவுசெய்க.**

வண்ண வண்ணப் பூக்களாய்
வானில் சிதறும் தீப்பொறி
விண்ணில் ......................... வேடிக்கை
விழா வென்றாலே வாடிக்கை.

05. மேலே உள்ள பாடலில் குறிப்பிடப்படும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்.

1. தரை  2. விண்  3. கடல்

06. வேடிக்கை நடைபெறும் நாள்.

1. பண்டிகை  2. பௌர்ணமி  3. நோன்பு

✦ **7ஆம், 8 ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

07. 3, 43, 543 ..................................................



1. 4563  2. 6543  3. 7543

14






08.  .......................................

1.   2.   3. 

09. நான்கு சமச்சீர் கோடுகளை மாத்திரம் கொண்ட உருவைத் தெரிவுசெய்க.

1.   2.   3. 

✦ **வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

10. கீரிக்கு - பிள்ளை அதுபோல நெல்லுக்கு...........

1. கன்று  2. குட்டி  3. நாற்று

11. தொப்பிக்கு தலை எனின் கைக்கடிகாரத்திற்கு



1. கால்  2. கை  3. கழுத்து


12. சாதாரண வருடம் ஒன்றின் இறுதிக் காலாண்டில் வரும் நாட்களின் எண்ணிக்கை.


1. 180  2. 100  3. 92

13. பங்குனி மாதம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை எனின் அம்மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகை.

1. 75  2. 80  3. 85

14.  எனின் 

1.   2.   3. 

15. 

1.   2.   3. 



# சிரியாவின் இந்தப் படங்கள் உண்மையானவையா...?

தற்போது சிரியாவில் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் இவை, 'ஊடகங்கள் சிரியாவில் பாதிக்கப்படுபவர்களை புறக்கணிக்கின் றன', 'சிரியாவில் மிகப்பெருமளவிலான கொலைகள் நடந்திருக்கின்றன' போன்ற தலைப்பு களுடன் சமூக ஊடகங்களில் சில புகைப்படங்கள் பரவிவருகின்றன. இவை உண்மைதானா என்பது குறித்த பி.பி.ஸியின் ஆய்வு இது.

சிரியாவில் நிலைமை மோசமாக இருப்பது உண் மையான கூற்று. குறிப்பாக கிழக்கு கூட்டாவில். எனி னும் இந்த செய்திகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் பல புகைப்படங்கள் சமீபமாக சிரியாவில் உள்ள சச் சரவுகளோடு தொடர்பில்லாதனவாக உள்ளன.

பலர் உயிரிழந்த குழந்தைகளின் புகைப்படங்களை பகிர்ந்து இவை சிரியாவில் தற்போது எடுக்கப்பட்டவை என சமூக ஊடகங்களில் எழுதி வருகிறார்கள். ஆனால்



அவற்றுக்கும் கடந்த வாரம் சிரியாவில் நடந்த சிரிய அரசுப் படைகளின் தாக்கு தலுக்கும் சம்பந்த மில்லாதமை தெரிய வந்துள்ளது.

நிறைய பேர் இறந்த குழந்தை களின் புகைப்படங் களைப் பகிர்ந்து இவை சிரியாவில் தற்போது எடுக்கப்பட்டவை என சமூக ஊடகங்களில் எழுதி வருகிறார்கள்.

இவை மே 27, 2003ஆம் ஆண்டில், ஈராக்கில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும். மார்கோ டி லாரோ என்ற புகைப்படக் கலைஞர்தான் இந்த புகைப்படங் களை எடுத்தவர். ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள ஒரு பள்ளியில், வெகுஜன கல்லறைகளில் காணப்பட்ட உடல்களை அடையாளம் காட்டுவதற்காக வைத்திருந்தனர். அல் முசய்யப் நகரில் ஒரு பாலைவனத்தில் இவை காணப் பட்டன என்று புகைப்படக்காரர் குறிப்பிட்டார்.

தெற்கு பக்தாத்தில் சுமார் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ஈராக்கியர்கள் காணாமற் போயினர் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1991 வளைகுடா போரைத் தொடர்ந்து ஷியா முஸ்லிம்களை சதாம் அரசு நசுக் கித்தள்ளியபோது தங்களது குடும்பத்தில் காணா மற் போன அண்ணன், தங்கை, அப்பா, அம்மா, குழந்தைகள் ஆகியோரை தேடிக் கொண்டிருந்த வர்கள் இந்த எலும்புக் கூடு உடல்களில் தங்களின் சொந்தங்களை அடையாளம் காண முடியுமா எனவும் தேடிப் பார்த்தனர்.

இந்த புகைப்படம் சமீபத்தில் சிரியாவின் கூட்டா வில் நடந்த தாக்குதலில் இறந்த குழந்தைகளின் படங்கள் என சமூகவலைத் தளங்களில் பகிரப்பட்டு



வருகின்றன. ஆனால் இந்த புகைப்படம் ஓகஸ்ட் 21, 2013ஆம் ஆண்டு சிரியாவில் எடுக்கப்பட்டதா கும்.


VD நியூஸ் நெட்வொர்க்கைச் சேர்ந்த ஒரு புகைப்பட கலைஞர் இதனை எடுத்துள்ளார். எதிராளியின் கட்டுப்பாட்டில் இருந்த கூட்டா பகுதி யில் சிரிய அரசு இரண்டு ரசாயன ஆயுத தாக்குதலை நடத்தியதில் பலர் இறந்தனர். எனினும் சிரியா அரசு இந்த ரசாயன தாக்குதலுக்கு பொறுப்பேற்க முடியாது என தெரிவித்திருந்தது. மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த இறந்த உடல்களை பார்வையிட்டது. மேலும் இது குறித்து விரிவான அலசலையும்வெளி யிட்டுள்ளது.



துப்பாக்கிமுனை யில் இருக்கும் ஒரு குழந்தையின் இந்த புகைப்படம் தற் போது வேகமாக பரவிவருகிறது. இது தான் சிரியாவில் உள்ள தற்போ தைய நிலைமைக்கு சான்றுஎன்றதலைப் புடன் இந்த புகைப் படம் வலம்வருகிறது. இந்த புகைப்படத்துக்கும் தற்போதைய சிரிய தாக்குதலுக்கும் சம்பந்தமில்லை.

ஏப்ரல் 2014 இல் இப்புகைப்படம் வெளியிடப் பட்டது. சிரியாவில் பர் அல் அசாத்தின் அரசுக்கு எதிரான ஒரு கிளர்ச்சிக் குழுவான சுதந்திர சிரியா ராணுவத்துக்கு ஆதரவான ஒரு நபர் இந்தப் புகைப்படத்தை பகிர்ந்தார் என டெய்லி மெயில் ஏப் ரல் 21,2014 அன்று செய்தி வெளியிட்டிருந்தது. மேலும் இந்தப் புகைப்படம் உண்மையானதாகவோ அல்லது பிரசார யுக்திக்காக பயன்படுத்தப்பட்டதா கவோ இருக்கலாம் என அந்த தளம் தனது செய்தி யில் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் புகைப்படம் தற்போதைய சிரியா தாக்குதலில் கடுமையாக பாதிக்கப்பட்ட சிறுவனை மீட்புப் பணியினர் மீட்டுக்கொண்டிருப்பதற்கான ஆதாரம் என சமூக ஊடகங்களில் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.



ஆனால் இது 2016 நவம்பரில் எடுக் கப்பட்ட புகைப்படமா கும். சிரியாவில் அலெப்போ நகரில் இந்த புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அமீர் அல்ஹால்பே என்ற புகைப்படவியலாளர் இதனை எடுத்திருந் தார் என 'நியூயோர்க் டைம்ஸ்' செய்தி வெளி யிட்டுள்ளது 2016 இல் கட்டட இடிபாட்டில் சிக்கியுள்ள ஒரு குழந்தையை மீட்கும் புகைப்படம் இது.

சமீபத்திய சிரியா தாக்குதலில் கடுமையாக காயமடைந்த ஒரு சிறுவனின் புகைப்படம் இது எனும் தலைப்புடன் வட்ஸ் அப் முதலான சமூக ஊடகங்களில் வலம் வருகிறது. ஆனால் இது ஒக்ரோபர் 4,2012 இல் எடுக்கப்பட்டது.

'தி டெலிகிராப்' இணையத்தளம் இந்த புகைப் படத்தை வெளியிட்டுள்ளது. ஒக்ரோபர் மூன்றாம் திகதி அலெப்போ மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட ஒரு குழந்தையின் புகைப்படம் இது. சிரியா தொடர்பாக மட்டுமல்ல வேறு பல விட- யங்களில் பல போலியான புகைப் படங்கள் வலம் வருகின்றன. அவற்றை மற்றவர்களுக்கு பகிர்வதற்கு முன் அது குறித்து இணையத்தில் உள்ள தொழில் நுட்ப வசதிகளை பயன்படுத்தி அதன் உண்மை தன்மையை அறிந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை மறவாதீர்கள்.

## முன்னாள் போராளிகளை...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் பயனாளியின் நிலைமையோ, அந்தோ பரிதாபம் தானே? பயனாளி, 'மறுபடியும்... முதலில இருந்து...' தொடங்க வேண்டுமே!

**தீது - 04:**

பயனாளிகள் கால்நடைகளை தேடியலையும் போது, பஸ் வசதிகள் இல்லாத சில குக்கிரா மங்களுக்கு முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தியே பயணிக்க வேண்டியிருக்கிறது. தமக்கு பொருத்தமான கால்நடைகளை இனங்கண்ட பின்னர், அரசாங்க கால்நடை வைத்தியரையும் தமது சொந்தச்செலவிலேயே அங்கு கூட்டிச்செல்ல வேண்டியிருக்கிறது. 'ஒரு பண்ணையாளரைத் தேடி' குறைந்தபட்சம் நான்கு தடவைகளுக்கு மேல் இவ்வாறு பயணிக்கும் சூழல் ஏற்படும்போது, பயனாளிகளுக்கு போக்குவரத்து மற்றும் உணவுச் செலவு அடங்கலாக 'ஆயிரம் ரூபாய் தொடக்கம் ஐயாயிரம் ரூபாய் வரை' செலவு ஏற்படுகின்றது. (மூன்று மாத காலத்தவணைக்குள் தங்கள் அமைச்சு கால்நடைகளை பெற்றுக்கொடுக்காத பட்சத்தில், அந்தப் பண்ணையாளர் வேறுநபர்களுக்கு கால் நடைகளை விற்றுவிட்டால், பயனாளிகள் வேறு பண்ணையாளர்களைத் தேடியலையும் போதும் இதைப்போல பலமடங்கு செலவுகள் தான் உண்டு.)

**தீது- 05:**

பயனாளிகள், அரசாங்க கால்நடை வைத்தி யரை பண்ணைகளுக்கு கூட்டிச்செல்லும்போது, சில இடங்களில் அரசாங்க கால்நடை வைத்தியர் கள் தமக்குரிய பணியை (அரச சேவையை) செய்துகொடுப்பதற்கு, 'ஆயிரம் ரூபாய் முதல் இரண்டாயிரம் ரூபாய் வரை' இருதரப்பினரிடமும் (பயனாளிகள் மற்றும் பண்ணையாளர்களிடம்) லஞ்சம் கேட்கிறார்கள். லஞ்சப்பணம் அல்லது கையூட்டுப்பணம் கொடுத்தால் மாத்திரமே துரிதகதி யில் வேலை நடக்கிறது.

இல்லாவிட்டால், கால்நடைகளை பார்வையிட்டு காது இலக்கத்தகடு இட்டு, தங்கள் அமைச்சினால் வாழ்வாதார உதவித்திட்டத்துக்கென்றே பிரத்தி யேகமாக தயாரிக்கப்பட்டுள்ள படிவத்தை பூரணப் படுத்தி, கால்நடைகளை உரிமம் மாற்றம் செய்வ தற்கு, 'பீல்ட்டுக்கு (பண்ணைகளுக்கு) நாளைக்கு போகலாம். நாளை மறுநாள் போகலாம்' என்று நாளைக்கடத்துகிறார்கள். லஞ்சப்பணம் அல் லது கையூட்டுப்பணம் கொடுத்தால் மாத்திரமே, 'பீல்ட்'டுக்கு கிளம்பி வருகிறார்கள். (இந்த குற்றத் துக்கு என்னிடம் ஆதாரங்கள் நிறையவே உண்டு.)

**தீர்வு:**

பண்ணையாளர்களிடம் உள்ள கால்நடை உரிம அட்டையை பயனாளிகள் தமக்கு உரிமம் மாற்றம் செய்து, அவற்றை கச்சேரியில் கொண்டு வந்து ஒப் படைத்ததும், தங்கள் அமைச்சு ஒதுக்கப்பட்ட குறித்த நிதியை'அரசாங்கவேலைநாள்கள்14நாள்களுக்குள் (இரண்டு வாரங்களுக்குள்) விடுவித்து', பயனாளி களுக்கு கால்நடைகளை பெற்றுக் கொடுப்பதே இந்தப் பிரச்சினைகளுக்கு (கொடுவினைகளுக்கு) எல்லாம் சாலச்சிறந்த தீர்வாக அமையும்!

மெத்தக்கனிவுடனும், நிறைந்தளவு நம்பிக் கையுடனும் .... எனக் குறிப்பிட்டு கடிதத்தை நிறைவு செய்துள்ளார். (இ

## என் இந்தக்....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பஞ்சாங்கத்தில் பிழை என்ற பத்திரி கைக் கட்டு ரைகளுக்குப் பதில் எழுதாமல் விடுவதே இரகு நாதையரது பாணி. நீதி மன்றத்திற்கு அழைத்தால் தான் ஒன்றும் செய்ய வழியில்லாது பதிலளிப் பீர்கள்.. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிழையான பஞ்சாங்கத்தை மக்கள் பாவனைக்கு உகந்ததல்ல என்று தடை செய்யலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைச் செய்து சமயத் தைக் காப்பாற்ற வேண்டும்.

பிழையான பஞ்சாங்க கணிதருக்கு எதிராகக் கிரிமினல் குற்றம் சுமத்துவதற்கு சட்டம் எதுவும் இதுவரையில் இல்லை. ஒருவரைக் கொல்லுமாறு தாதாவுக்கு பணம் கொடுத்து ஏவி விடுபவர் மீது மரண தண்டனைக்குரிய கொலைக் குற்றம் சுமத்த முடியும். இதேபோன்று, பஞ்சாங்கத்தில் வித வைக் கோல,..யம தூதுவன் விவாக முகூர்த்தங் கள் குறிப்பிடுவதும் மரண தண்டனைக்குரிய கொலைக் குற்றம் என்று விசேட தீர்ப்பு வழங்கி நீதி தேவதை புதிய சட்டம் இயற்றினால்தான் பஞ்சாங்கங்களில் கொடிய தோஷ விவாக முகூர்த் தங்கள் ஒழியும்.

கடந்த பல தசாப்த வாக்கிய பஞ்சாங்கங்களில் இருந்த பிழைகள், 2018-19 விளம்பி வருடத்தி லும் தொடர வாய்ப்புண்டு. அவ்வாறு பிழைகள் இருப்பின் அவை அனைத்தையும்திருத்திப் பஞ் சாங்கத்தை மறுபிரசுரம் செய்ய வேண்டும். மறு பிரசுரமா? நீதி தேவதையின் புதிய தீர்ப்பா? இரகுநாதையரே தீர்மானியுங்கள்!

## பிறரை தீர்ப்பிடுவதை விடுத்து இரக்கத்தை கையிலெடுங்கள்

மற்றவர்களைத்தீர்ப்பிடும்பழக்கத்தைக்கைவிட்டு ஒவ்வொருவரையும் கருணையுடன் நடத்தும் பழக்கத்தை கையில் எடுத்துக்கொள்வோம். நாம் எதைக் கொடுக்கிறோமோ அதுவேநமக்கு நிறைவாக வழியவழியகொடுக்கப்படும், ஏனெனில் தந்தையாம் இறை வன் தன் தீர்ப்பையல்ல, தன் இரக்கத்தை நமக்கு அபரிமிதமாக வழங்குகிறார் என்றார் திருத் தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ஞ்பன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## இறைவனின் நீதி என்பது அவரின் இரக்கமே

இறைவனின் நீதி என்பது அவரின் இரக்கமே என்பதை அறிந்துள்ள நாம் நம் பாவங்களுக்காக வெட்கமடைந்து அவரின் நீதியை நோக்கிச் செல் லும்போது நமக்கு கிடைப்பது மன்னிப்பே என உரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பாவங்கள் குறித்து வெட்கமடைவதும் ஓர் அருளே எனவும் தெரிவித்தார்.

# தமிழ்த்தூது ஆய்வு மைய ஏற்பாட்டில் தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை





தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம் யாழ் நகரில் 125, யாழ். பிரதான வீதியில் அமைந் துள்ள குடும்ப மருத்துவ நிறுவகத் தில் மேல் மாடியில் 2017ஆம் ஆண்டு உதயமாகியது. இதன் முதல் நினைவுப் பேருரையை முனை வர் மனோன்மணி சண்முகதாஸ் அவர் கள் நிகழ்த்தி தனிநாயகம் அடிகளாரின் தொலைநோக்கு அவரை ஒரு தமிழ்மொழிக் காவல னாகவே அறிமுகம் செய்ய வைத்தது என தெரிவித்தார். தமிழ்த்தூது தனி நாயகம் அடிகள் ஆய்வு மையம் ஆதரவில் தனிநாயகம் அடிகள் இரண் டாவது நினைவுப்பேருரையை. தனிநாயகம் அடிகளின் தமிழர் ஆன்மீகம் என்னும் தலைப்பில் திருச்சி இந்தியா தமிழ் இலக்கிய கழக தலைவர் கலாநிதி அமுதன் அடிகள் வழங்கினார். 17 பெப் ரவரி 2018 அன்று யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள கத் தோலிக்க அச்சக பாதுகாவலன் மண் டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

## உண்மையின் எண்ணங்கள்

### தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை


தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம் ஆதரவில் தனிநாயகம் அடிகள் இரண் டாவது நினைவுப்பேருரையை தனிநாயகம் அடிகளின் தமிழர் ஆன்மீகம் என்னும் தலைப் பில் திருச்சி இந்தியா தமிழ் இலக்கிய கழக தலை வர் கலாநிதி அமுதன் அடிகள் வழங்கினார். 17 பெப்ரவரி 2018 அன்று யாழ்ப்பாணம் 360, பிர தானவீதியில் அமைந்துள்ள கத்தோலிக்க அச்சக பாதுகாவலன் மண்டபத்தில் இந்நிகழ்வு நடை பெற்றது. கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் திரு அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் தனி நாயகம்அடிகள்மேலும்தமிழின்மேலும்கொண்ட தீராத பற்றினால் தமது நீண்டகால திட்டமாக இம்முயற்சியை முன்னெடுத்துள்ளார். தனது நேரத்தையும் பணத்தையும் செலவு செய்து மற்றவர்களின் உதவியையும் பெற்று தூரநோக் குடன் ஆற்றும் இப்பணிக்கு கைகொடுக்க அனை வரும் முன்வர வேண்டும். தமிழ் மொழி - இலக் கியம் - பண்பாடு - ஆன்மிக வளங்களில் ஆய் வுப் புலமை அடைவதற்கு இம்மன்றம் வழிவகுக் கும் என்ற அழைப்பை சிறப்பாகப் பயன்படுத்த தகுதி வாய்ந்தவர்கள் முன்வரவேண்டும். அ.பி. ஜெயசேகரம் அடிகளாரை இயக்குனராகக் கொண்டு நடைபெறவுள்ள மேற்படி திட்டத்தில் இப்பணியை திட்ட மிட்டுத் தீர்மானித்து செயற் படுத்தும் அனைவரையும் காலைக்கதிர் கிறிஸ் தவ செய்தி இதழ் பாராட்டுகிறது. பணி சிறக்க வாழ்த்துகிறது.

# இளையோர் குறித்த கரிசனையை வெளிப்படுத்த முன்வருவோம்!

## தவக்கால சுற்றுமடலில் யாழ் ஆயர்

மனிதனே! நீ மண்ணாய் இருக் கின்றாய். மண்ணுக்கே திரும்பு வாய். அல்லது மனந்திரும்பி நற் செய்தியை நம்புங்கள் என்ற வசனங் களுக்கு செவிமடுத்து, எமது நெற்றி யிலே சாம்பலால் திருச்சிலுவை அடை யாளம் வரையப் பெற்று தவக் காலத்தை ஆரம்பித்திருக்கின்றோம். நமது இவ்வுலக வாழ்வு நிலையற் றது. இவ்வுலகில் நாம் வெறும் பயணி களே.

எனவே மனமாற்றம் பெற்று இயேசுவிடம் திரும்பி வர வேண்டும் என்கின்ற உண்மையை விபூதிப் புதன் திருச்சடங்கு வலியுறுத்தி நின் றது. புலனின்பம் துய்ப்பதில் அவசர மாக நகர்ந்து செல்லும் எமது வாழ்வை ஒரு நிதானத்துக்கு கொண்டு வந்து அதற்கு எதிரான தன்னல மறுப்பு, பிறர் நலவாழ்வுக்கு இத்தவக்காலம் எம்மை அழைத்து நிற்கிறது. தவக் காலம் முந்த முந்த ஒரு மனமாற்றத் தின் காலம். இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம் என்கின்ற மையப்பொருளிலே இவ் வாண்டை இளையோர் சிறப்பு ஆண்டாக அனு சரிக்குமாறு நாம் எமது மறைமாவட் டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தோம். இவ்வாண்டு ஒக்ரோபர் மாதத்தில் உரோமையில் நடைபெறவுள்ள இளையோர் பற்றிய சிறப்பு ஆயர் மன்ற அமர்வுக்கான மையப் பொருள் இதுவாகும். முழுத்திருச்சபையும் தனது கவனத்தை இளையோர் மேல் குவிக்கும் இவ்வாண்டில் நாமும் இளையோர் மட்டிலான எமது கரி சனையை வெளிப்படுத்த முன்வரு வோம்.



## சிரிய வன்முறைகளை நிறுத்துமாறு திருத்தந்தை செபத்துடன் அழைப்பு



சிரியா நாட்டில் தமாஸ்கு நகருக்கு அருகில் இடம் பெற்றுவரும் வன்முறை உடனடியாக நிறுத்தப்பட்டு மனிதாபிமான உதவிகள் தடையின்றி வழங்கப்படு வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உலகத் தலைவர் களைக் கேட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அந்நாட்டிற் காகச் செபிப்போம் என்று சொல்லி வளாகத்தில் கூடியிருந்த முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட திருப்பயணி களுடன் சேர்ந்து அன்னை மரியிடம் செபித்தார்.

சிரியாவில் குறிப்பாக கிழக்குப் பகுதியில் சண்டை தீவிரமடைந்துள்ளது. அந்நாட்டில் கடந்த ஏழு ஆண் டுகளாக நடக்கும் சண்டையில் இந்த பெப்ரவரி மாதம் மிகவும் வன்முறை நிறைந்ததாக உள்ளது. இச்சண்டையில் சிறார், பெண்கள், வயதானவர்கள் போன்ற நூற்றுக் கணக்கானவர்கள் பலியாகியுள் ளனர். மருத்துவமனைகள் தாக்கப்பட்டுள்ளன. உண்பதற்கு எதுவும் இல்லாமல் மக்கள் துன்புறுகின் றனர். இவையனைத்தும் மனிதாபிமானமற்றவை என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒரு தீமை இன்னொரு தீமைக்கு எதிராகப் போரிட முடி யாது. எனவே சிரியாவில் இடம்பெறும் சண்டை உடனடியாக நிறுத்தப்பட்டு உணவு மருந்துகள் உட்பட மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவும் நோயாளர் மற்றும் காயமுற்றோர் அவ்விடங்களை விட்டு அகற்றப்பட வழியமைக்கவும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து உருக்கமாக விண்ணப்பிக்கின் றேன். இவை தாமதமின்றி இடம்பெற கடவுளிடம் மன்றாடுவோம் என்றும் திருத்தந்தை கூறியுள் ளார்.

# முன்னேற முடியாதவர்களையும் கூட முன்னேற வைக்கும் இயேசுவின் வல்லமை

(இளவாலையில் இருந்து செய்தியாளர் எஸ்.எம். வுலோறன்ஸ்)

'இறை திட்டம் தேடும்' இளையோர் ஆண்டினை முன்னிட்டு இளவாலைப் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த புனித டொன்பொஸ்கோ இளையோர் மன்றத் தின் ஒழுங்கமைப்பில் தவக்கால இறைதியானத் திரு வழிபாடு அண்மையில் புனித யாகப்பர் ஆலய வளாகத் தில் இடம்பெற்றது. இத்தியான குணமாக்கல் வழிபாட்டினை இந்தியாவிலிருந்து வருகை தந்த எம்மாவுஸ் இறை தியான இயக்குநர் அகஸ்ரின் மொண்டக்கட் அடிகளாரும் ரபாயேல் அடிகளாரும் இணைந்து நடத்தினார்கள்.

இறுதிநாள் திருப்பலியை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றினார். அப்போதே இயேசுவின் வல்லமை முன்னேற முடியாத வர்களையும் முன்னால் அனுப்பிவைக்கும் - என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில்-

இயேசுவின் உத்தானத்தின் பின்பு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சீடர்களும் அவரது வல்லமையைத் தம் வாழ்வாலும் போதனையாலும் எடுத்தியம்பினர். நடக்க முடியாது சப்பாணியாக இருந்த முடவனை யும் பொன்னோ வெள்ளியினால் அல்ல இயேசுவின் வல் லமையுள்ள நாமத்தினால் நடக்கச்செய்து அவனுக்கிருந்த இழி நிலையைப் போக்கி அனைவருக்கும் முன்னால் முன்னோக்கிச் செல்ல வைத்தனர். அவ்வாறே இன்றும் எம்மத்தியில் ஆன்மீக சமூக வாழ்வில் சப்பாணிகளாகப் பலர் வாழ்கின்றனர். இந்நிலைகளிலிருந்து எம் வாழ்வை விடுதலையாக்க இறைதிட்டம் எம் மத்தியில் உணரப்பட அருட்தந்தையர்களின் வார்த்தை வல்லமையினால் குணம்பெற நம்பிக்கை யோடு ஒன்றிணைந்து செபிப் போம் என்றார். இத்தியான திரிதின வழிபாடுகள் யாவும் பங்குத்தந்தை ம.யேசுரட்ணம் அடிகளார் தலைமையில் இடம்பெற்றன.



மாசிப் பெய்த மாசிப்பனியின் தாக்கம் குறைந்ததால் சந்தியடியில் வழக்கமான நேரத்துக்கு முன்னதாகவே வாத்தியார், ஏரம்பர், ரூபன், ஜீவன், பேப்பர்தம்பி மற்றும் கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் ஊர்வம்பளக்கக் கூடியிருந்தனர்.


கைபேசியிலிருந்து தலையை நிமிர்த்திய ஜீவன், “கதை காவிறதிலை எங்கடை ஆக்களை அடிக்க உலகத்திலை ஒருத்தரும் இல்லை. பேஸ்புக்(FACEBOOK) என்ற முகப்புத்தகத்தில் வெளிநாட்டிலை இருக்கிற எங்கடை ஆளொருவர், தன்னுடைய நண்பரைக் கேலி செய்ய ‘கனேடியப் பிரதமர் சிரியாவுக்கு விமானம் அனுப்பி யுத்தத்தாலை பாதிக்கப்பட்ட சிரிய அகதிகளை மீட்க விரும்பினார். ஆனால் விமானத்தைச் செலுத்த எவரும் முன்வரவில்லை. அப்போது குறிப்பிட்ட ஈழத் தமிழர்தான் விமானத்தைச் செலுத்த முன்வந்து சிரிய அகதிகளை மீட்டு வந்தார்’ என்று ஒரு தகவலை நண்பரின் படத்துடன் பதிவேற்றியிருந்தார். அதனை வாசிக்கும்போதே பகடியென்று விளங்கியது. அதைவிட இப்படியொன்று நடந்திருந்தால் சர்வதேச ஊடகங்களில் சொல்லப்பட்டிருக்கும். அதைக்கூட சரிபார்க்காமல் அப்படியே எங்கடை ஆக்கள் தமது முகப்புத்தகப் பக்கங்களில் பகிர்ந்திருக்கிறார்கள். அதைவிடக் கொடுமை தமிழ் செய்தி இணையத் தளங்கள் சிலவும் கூடத் தகவலை உண்மையென்று நம்பிச் செய்தியாக்கி விட்டன” என்று சொன்னான்.

இதனைக் கேட்ட ரூபன், “இதிலை பெரும் கொடுமை என்னவென்றால் இதனைப் பகிர்ந்த அதிமேதாவிகள் பலரும் ‘நீங்கள் தமிழர்கள் என்றால் இதனைப் பகிருங்கள்’ என்று வேறு போட்டுதான். இதனைப் பார்த்த பலரும் தங்களைத் தமிழரென்று நிரூபிக்கவோ என்னவோ, பகிர்ந்து தள்ளியிருக்கினம். அதிலை எங்கடை சில அரசியல் தலைவர்களும், படித்த பிரமுகர்களும் அடக்கம் என்பதுதான் மிகப் பெரிய சோகம். சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் தகவல்களில் எவ்வளவு தவறுகளும் மோசடிகளும் இருக்கின்றன என்று சந்தியடியில் முன்னரே நாங்கள் ஊர்வம்பில் கதைத்திருக்கிறம். இனியாவது சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் தகவல்களை அப்படியே விழுங்கிச் சத்தியெடுக்காமல் நமது மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேணும்” என்றான்.

அப்போது கோவில்மணி அடித்தது. அது ஓயும்வரை காத்திருந்த வாத்தியார் “உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எல்லாக் கட்சிகளுக்கும் பரவலாக வெற்றியளித்திருப்பதால், சபைகளில் யார் ஆட்சி அமைப்பது என்று அரசியல்வாதிகள் பிடுங்குப்படுகினம். ஆனால் அவர்களை விட இன்னும் ஒரு குழுவினர்தான் தேர்தல் முடிவுகளால் பெரும் குழப்பத்தில் தலையைச் சொறிந்து கொண்டிருக்கிறாங்களாம்”என்று சிரித்தபடி சொன்னார்.

“தேர்தல் நடந்ததைச் சனமே மறக்கப் போகுது. அப்பிடியிருக்க அரசியல்வாதிகளை விட அதிகம் குழம்பிப் போய் இருக்கிறவை யார்?”என்று ஆவலாகக் கேட்டார் ஏரம்பர்.

சிரிப்புடன் விசயத்தை விளக்கத் தொடங்கினார் வாத்தியார்.



# யாருக்கு வால்பிடிப்பதென்று குழம்புகின்ற கூட்டமொன்று!

## ஊர்வம்பு

குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

“முன்னர் எங்கடை பக்கத்தில் இரண்டு தரப்புகள்தான் இருந்தன. புலி ஆதரவு ஒன்று; எதிர்ப்பு இன்னொன்று. அதேநேரம் எதனையும் இழக்காமல், கஸ்டங்கள் அனுபவிக்காமல் வசதிகேற்றபடி இந்த இரண்டு தரப்புகளில் ஏதாவது ஒன்றுடன் ஒட்டியடித்துத் தமது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்ட கூட்டம் ஒன்றும் எங்களுக்குள்ளை இருந்து கொண்டேதான் இருக்கிறது., விடுதலைப் புலிகள் இத்தகையவர்களைத் தேவைக்குப் பயன்படுத்தினார்களே தவிர நம்பவில்லை. ஆனால் புலி எதிர்ப்பாளர்களுக்கு ஆள் பற்றாக்குறை இருந்ததால் இந்த வால்பிடிக்கூட்டத்தின் தேவை இருந்தது. ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பிறகு இரண்டு தரப்புகளாக இருந்த அரசியல்களம், அரசுத்தரப்பாக மாறிவிட்டிருந்தது. புலி அச்சம் இல்லாததால் வால்பிடிகள் அரசுத் தரப்புடன் வெளிப்படையாகவே ஒட்டிக் கொண்டனர்.” என்று சொல்லி நிறுத்தி விட்டுத் தண்ணீர் குடித்தார் வாத்தியார்.

அந்த இடைவெளியில் கதைக்கத் தொடங்கிய ரூபன், ‘நல்லாட்சி அரசு வந்த பிறகு முன்னைய அரசுத் தரப்பு வலுவிழந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமானது. அதனால் இந்தத் தரப்பை தொழுதுண்டு பின்சென்றவர்கள் பயனடைந்தனர். இது ஊருக்குத் தெரிந்த கதைதானே. நீங்கள் விசயத்தை இழுக்காமல் சொல்லுங்கோ” என்று அவசரப்படுத்தினான்.

வாத்தியாரும் சொல்லத் தொடங்கினார்.

“புலிகளை ஒட்டியடித்தவைக்கு நல்லாட்சி அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தடவிக் கொடுக்க எந்தத் தயக்கமும் இருக்கவில்லை. முன்னர் புலி எதிர்ப்புக் கன்னையில் இருந்தவர்கள் தான் தயங்கினார்கள். அப்போதுதான் கூட்டமைப்புக்குள்ளும் புலிகளைக் கடுமையாக விமர்சிப்பவர்கள் பலம் பெறத் தொடங்கினார்கள். அதனால் புலி எதிர்ப்புக் கன்னையிலிருந்த பலரும், யாரையாவது பிடித்துக் கூட்டமைப்புடன், அதிலும் குறிப்பாக அதிலுள்ள புலி எதிர்ப்புத் தரப்புடன் ஒட்டி உறவாட முயற்சித்து வந்தார்களாம். அந்தநேரம் பார்த்து உள்ளூராட்சித் தேர்தல் வந்தது. தேர்தலுக்குப் பிறகும் கூட்டமைப்பும் அதன் புலி எதிர்ப்புத் தரப்பும் பலமாகவே இருக்கும் என்று நம்பி ஒட்டும் வேலையில் தீவிரமாக இருந்தவர்களுக்கு, தேர்தல் முடிவுகள் இடியாய் இறங்கியிருக்காம். பலகட்சிகளும் சமபலம் பெற்ற நிலையில், மத்தியிலும் நல்லாட்சிக்குக் காத்துப்போக இப்ப எந்தத் தரப்புக்குக் குழையடிப்பது – இப்ப இருக்கிற இடத்திலேயே மேலும் ஒட்டலாமா? – என்று தெரியாமல் குழம்பி நிக்கினமாம் வால்பிடி வாழ்க்கைக்காரர்” என்று சொல்லி முடித்தார் வாத்தியார்.

அப்போது செல்லாச்சி, “நீங்கள்தான் இதையெல்லாம் ஒரு விசயம் என்று கதைக்கிறியள். அவை பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டித் தங்கடை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளுவினம். விடுதலைப் புலிகளானால் என்ன; எதிர்த்தரப்பானால் என்ன. யுத்தகாலத்தில் எதிர்த் தரப்பு எப்ப சுட்டுத் தள்ளும் என்று உயிரைக்கையிலை பிடித்தபடி, இழப்புகளையும் சந்தித்துத், தாங்கள் சார்ந்த தரப்புகளுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்தவர்கள் நிர்க்கதியாக விடப்பட்டிருக்கினம். இப்படிப்பட்டவர்கள் தேர்தல்களில் நின்று அதிக விருப்பு வாக்குகள் பெற்றிருந்த சந்தர்ப்பங்களில் கூட ‘திடீர்’ அனுதாபிகளுக்குத்தானே சில கட்சிகள் பதவிகளை வழங்கி வந்தன. கூட்டிக்கழிச்சுப் பார்த்தால் இழப்புகளை ஏற்க என்றே ஒரு கூட்டமும், அந்த இழப்புகளால் கிடைக்கும் இலாபங்களைச் சுவைக்க என்று இன்னொரு கூட்டமும் இந்த மண்ணில் – எல்லாக் கட்சிகளிலும் – இருக்கிறதுதான் பெரும் கொடுமை. எப்போது இழப்புகளைச் சந்தித்தவர்களே அதனால் வரும் நன்மைகளையும் அடைகின்றார்களோ அப்போதுதான் இந்த மண் விடியும்”என்று சொல்லிவிட்டுக் கோவில் கோபுரத்தை வெறித்துப் பார்த்துக் கும்பிட்டாள்

. அப்போது பேப்பர்தம்பி, “நீங்கள் தனி மனிதர்கள் கன்னை மாறுவதைப் பற்றிக் கதைக்கிறீங்கள். நாடுகளே உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பிறகு மெதுவாகக் கன்னை மாறுவதாக ஊடகவியலாளர்கள் மத்தியில் கதை அடிபடுகுது” என்று புதுக்கதையை ஆரம்பித்தான்.

இதைக் கேட்ட ஏரம்பர், “இதென்ன தம்பி எங்கடை அடிமட்டத் தேர்தல் முடிவுகள் நாடுகளை அசைக்குமே? கேக்கிறவன் கேணையன் என்றால் எருமைமாடு ஆகாச விமானம் ஓட்டினதாகச் சொல்லுவாய் போல இருக்கு” என்று அதிர்ந்து போய்ச் சொன்னார்.

“அப்பிடி மறுக்கவும் முடியாது. காலைக்கதிரில் கூட ‘இது இனி இரகசியம் அல்ல’ என்ற பகுதியில் இந்தியத் துணைத் தூதரகத்தினரும் வடக்கு மாகாண முதலமைச்சரும் ஆளைஆள் வார்த்தைகளால் ஒத்தடம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டது தானே” என்றான் ரூபன்.

அதனைத் தலையாட்டி ஆமோதித்த வாத்தியார், “கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தால் விசயம் வெளிச்ச மாதிரித்தான் இருக்கு. கடந்த காலத்திலை முதலமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வெளி நிகழ்ச்சிகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத்தரப்பினர் பங்கேற்றிருக்கிறார்கள். இந்தியத் தூதரக யாழ். அலுவலகம் நடத்திய உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் முதலமைச்சரும் மற்றவர்கள் போன்றே அழைப்பாளராகக் கலந்து கொண்டிருக்கிறார். ஆனால், இந்தியத் தூதரகத்தின் நிகழ்வில் முதலமைச்சரைப் பிரதம விருந்தினராகக் கூப்பிட்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. உங்களில் எவருக்காவது ஞாபகம் இருக்கோ?” என்று கேட்டார்.

மற்றவர்கள் உதட்டைப் பிதுக்கினர்.

அப்போது ரூபன், “நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இந்தியத் தரப்பு நிகழ்வுகளில் முதலமைச்சர் கலந்து கொள்வதானால் கலந்து கொள்ளட்டும் என்றும், ஆனால் அவரை பிரதம விருந்தினராக அழைக்கும் தூதரக நிகழ்வுகளுக்குத் தங்களைக் கூப்பிட வேண்டாம் என்று முதலமைச்சருக்கு எதிரான தரப்பு இந்தியத்தரப்புக்கு கடும் அழுத்தம் கொடுத்தது என்றும் சந்தேகம் எழுகிறதே” என்றான்.

அதற்குப் பதிலளித்த பேப்பர்தம்பி “இதற்கு இந்தியத் தூதரகத்தினர்தான் விடை சொல்ல வேண்டும். அப்படி ஏதும் நடந்ததா என்றோ, நடக்கவேயில்லை என்றோ என்னால் சொல்ல முடியாது” என்று நமட்டுச் சிரிப்புடன் சொன்னான்.

இதைக் கேட்ட ஜீவன், “இந்தியாவில் பிரதமராகப் பதவியேற்கமுதல் நரேந்திர மோடி அமெரிக்காவுக்குச் செல்வதற்கு நுழைவிசைவு(VISA) பெற விண்ணப்பித்தார். அப்போது இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி. மோடி மீதிருந்த மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து ,மோடிக்கு அமெரிக்கா நுழைவிசைவுவழங்கமறுத்துவிட்டது. ஆனால் மோடி இந்தியப் பிரதமராகப் பதவியேற்றவுடன் சந்தித்த ஆசியாவுக்கான அமெரிக்க அதிகாரி மோடியை அமெரிக்கா வரும்படி அழைப்பு விடுத்து, பிறகு மோடியும் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பினார். இதிலிருந்தே வெளிநாடுகளின் அரசியல் எப்படி இருக்கும் என்று விளங்கும். இப்ப தமிழர் தரப்பில் யாருடைய கை ஓங்குகிறது என்றும் புரியும். ஆனால், வெளிநாடுகள் தேனொழுகக் கதைப்பதை எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதும் கேள்விக்குறிதான்”என்றான்.

அப்போது பேப்பர்தம்பி, “மூத்த ஊடகவியலாளர் ஒருவர் டென்மார்க்கில் தான் சந்தித்த பலஸ்தீனர் ஒருவர் பகிர்ந்த விசயத்தைச் சொன்னார். ஓசாமா பின்லேடனை அமெரிக்கா பல தடவைகள் அழைத்த போதும் ,அவர் அங்கு செல்லவில்லையாம். அமெரிக்கா பற்றித் தனக்குத் தெரிந்ததுபோல, அமெரிக்காவுக்குத் தன்னைப் பற்றித் தெரிந்து விடக் கூடாது என்பதில் ஒசாமா மிகக் கவனமாக இருந்தாராம். அவரது புகைப்படம் கூட அமெரிக்காவிடம் பல காலம் இல்லையாம். ஆப்கான் போரின் போது குதிரையில் பயணிக்கும் ஒசாமாவின் படம்தான் அமெரிக்காவிடம் நீண்ட காலம் இருந்ததாம். அதனால்தான் அமெரிக்காவை ஒசாமாவால் நடுங்க வைக்க முடிந்ததாம். அதுக்காக ஜனநாயக அரசியலில் ஒசாமா மாதிரி இருக்க முடியாதுதான். ஆனால் விழுந்தடிச்சு ஒட்டி உறவாடாமல் எச்சரிக்கையாகப் பழகுவது தமிழினத்துக்கு நல்லது தானே” என்றான்.

“இனியாவது வெறும் தலைமை மாறினதாக இல்லாமல், ஈழத்தமிழினத்தின் அடிமை வாழ்க்கையும் மாறினதாக இருந்தால் சந்தோசம். ஆனால் தமிழ் மக்கள் பேரவை என்ற உறைக்குள் புதுசு புதுசாகக் கத்திகள் செருகின்றன. அதிகரிக்கும் கத்திகள் எதிரிகளைச் சாய்க்கப் பயன்படப் போகின்றனவா? அல்லது தங்களுக்குள் மோதிச் சிதையப் போகின்றனவா? என்பதில்தான் எங்கள் எதிர்காலம் தங்கியிருக்கு”என்று சொல்லியபடியே எழுந்து நடந்தார் வாத்தியார்.

மற்றவர்களும் அவரைத் தொடரவே சந்தியடி அமைதியானது.

கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

காலைக்கதிர் Kalaikkathir



# செப்புகிறார்... சின்னப்பு!



வணக்கமுங்கோ!

இப்ப கொஞ்சநாளா உங்கினேக்கை 'ஒரு திருக்கூத்து' நடக்குது பார்க்கிறியள் தானே! அதென்னடாப்பா! சொல்லி வைச்ச மாதிரி சைவ விக்கிரகங்கள் மட்டும் உடைபடுது; களவாடப்படுகுது.

நான் இப்படிச் சொல்லுறதாலை வேற மதத்து விக்கிரகங்களையும் உடைக்க வேணும்.... எண்டு இந்தக் கிழடு சின்னப்பு ஏதோ சொல்லவாற மாதிரி நீங்கள் உங்கட மனசில தப்புக் கணக்குப் போட்டிடாதையுங்கோ!

நான் இப்ப இதில என்ன சொல்ல வாறன் எண்டால், எந்த மத வழிபாட்டுக்குரிய விக்கிரகங்கள் ஆயினும் சரி அவற்றைஅடிச்சுநொறுக்குறதாலையோஅல்லாட்டிகளவெடுத்து விக்கிறதாலையோ எந்தவொரு பிரச்சினைகளும் தீரப் போறதில்லை பாருங்கோ!

பிரச்சினைகளை மனம் விட்டு வாயாலை பேச வேணும். அப்ப தான் பிரச்சினை எங்கயிருக்குது? எந்தப் பக்கத்தாலை வருகுது? அது ஆராலை வருகுது.... எண்டது விளங்கும். அதை விட்டுட்டு அடிக்கிறதாலையோ அவற்றை நொறுக்குறதாலையோ எதுவும் தீரப்போறதில்லை எண்டதை உந்தச் சிலைகளை உடைக்கிறவை முதல்ல உணரத் தலைப்பட வேணும்.

அதோடை பாருங்கோ! உந்தச் சிலைகள் உடைக்கிற விவகாரத்தை தனியே 'மதம் சார்ந்த வெறித்தனம் எண்டு நோக்கலாம். அதுக்கும். அங்கால ஒவ்வொருத்தரும் உங்கட பார்வைகளை, சிந்தனைகளை அகலிக்க வேணுமெண்டு, நான் இதிலை நிண்டு உங்களைக் கேட்டுக் கொள்ளுறன்.

ஏனெண்டால் முந்தி இனம் சார்ந்த, மொழி சார்ந்த பிரச்சினையள் தான் பெரும்பாலும் நாட்டில நடந்தது. ஆனா – இப்ப நடக்கிறது மதம் சார்ந்த பிரச்சினை. இந்த மதம் சார்ந்த பிரச்சினைக்கு பின்புலத்தில யாரோ ஒருவர் வலுவாக இருக்கிறார் எண்டது மட்டும் உண்மை.

2009 மே 28 ஆம் திகதியோடை புலியளுடனான போரை முடிவுக்குக் கொண்டு வர முன்னம், புலியளோடை சண்டை பிடிக்கிறதுக்கு நிறைய ஆயுதங்கள் தேவைப்பட்டன கண்டியளே.

இந்த ஆயுதங்களை கொள்வனவு செய்யிறதுக்கு இடை நடுவில புறோக்கர்மாராக நிண்டவை கனபேர் பாருங்கோ. இந்தக் கன பேரும் போரைச் சாட்டி... புலியளைச் சாட்டி நிறைய ஆயுதங்கள் வாங்கிக் குவிக்க, அந்த ஆயுதங்களை எங்கட பொடியள் அடிபாட்டில அள்ளிக் கொண்டு போக பேந்தும் அந்த ஆயுதக் கிடங்கை நிரப்புறதுக்கு புறோக்கர்மார் ஆயுதங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பறக்க இப்படியே ஒரு சக்கர வட்டமாக ஓடிக் கொண்டிருந்தது முன்னைய கால அரசியல் விளையாட்டு.

இப்படியாக, போரைச் சாட்டி காசாப் புடுங்கித் திண்ட ஆள்களுக்கு இப்ப போர் ஓய்ஞ்சு, புலியளும் இல்லை எண்டாப் போல பெரிய அந்தரமாக் கிடக்குது போல. அதால திரும்பவும் ஏதாவது ஒரு அடிபாட்டுக் களத்தை திறக்க வேண்டிக் கிடக்குது. இந்த ஆயுதப் புறோக்கர் மாருக்கு. அப்பிடி ஏதாவது ஒண்டை 'நோண்டினால்' ஏற்கனவே 'சனல்–4' சிறிலங்காவை உலக நாடுகளுக்கு முன்னாலை அம்மணமாக்கிப் போட்டு விட்டிருக்கு. போதாக்குறைக்கு, இப்ப 'பொறுப்புக் கூறல்' சங்கதியும் வேறை புகைஞ்சு கொண்டிருக்குது.

இந்த லட்சணத்தில அடிப்பாட்டை அரசியல் ரீதியாக தொடங்கிறதை விட, மத ரீதியாக ஆளை ஆள் மோதவிட்டு அதில ஏதாவது ஒண்டைப் பிடிச்சுக் கொண்டு தலை நிமிருகிறதுக்கும், பணம் சம்பாதிக்கிறதுக்கும், 'குளிர்' காயுறதுக்கும் அலுவல்கள் மறைமுகமாக நடக்கிற மாதிரித் தெரியுது.

அதாவது, மதம் சார்ந்த பிரச்சினையளைக் கிளப்புறதன் மூலம் சனங்களுக்கு நடுவில ஒரு குழப்பத்தை உண்டு பண்ணி, ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிகளுக்கு கொண்டாட்டம் எண்ட மாதிரி, சைவக்காரன் வேதக்காரனுக்கு அடிக்க, வேதக்காரன் சைவச் சிலையளை உடைக்க, இதே மாதிரி முஸ்லிம் காரனோடையும் மோதுப்பட்டு ஓர் அமைதியின்மையை உண்டாக்க வேணும் எண்டு சில பேர் ஒற்றைக் காலிலை நிற்கினம் போலத் தெரியுது.


இதில, எங்கட சனங்கள் நல்ல தெளிவா இருக்க வேணும் கண்டியளே.

அதாவது, நான் என்ன சொல்லவாறன் எண்டால், சைவ விக்கிரகங்கள் ஆயினும் சரி, வேத சொரூபங்கள் ஆயினும் சரி, முஸ்லிம் பள்ளி வாசல்கள் ஆயினும்சரி உடைச்சுச் சேதமாக்கினால், ஊரின்ர நன்மைகருதி கொஞ்சம்பொறுமையைக் கடைப்பிடிக்கப் பாருங்கோ! அதுக்குப் பிறகு ஆக்கபூர்வமான வேலைகளை ஆரம்பிக்கலாம்.

ஏனெண்டால் சந்திரனைப் பார்த்து 'நாயள்' குரைக்கிறதாலையோ 'நரியள்' ஊளையிடுகிறதாலையோ சந்திரன் ஒரு நாளும் தன்ர சுயத்தை இழந்து போறதில்லை. அவரவர்க்கான மதமும் அதன் வழிபாடுகளும் எண்டைக்கும் நீடிச்சு நிலைக்கத்தான் செய்யும்.

# டில்லியின் கவனத்தை யாழ். நோக்கி ஈர்ப்பதில் நடராஜன் காட்டிய அக்கறை

கனகசபாபதி சரவணபவன்



**யாழ். இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதராகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்றுச் செல்லும் ஆ. நடராஜனுக்கு இன்று வடக்கு மாகாண சபையின் பேரவை அலுவலகத்தில் சபையினால் பிரியாவிடை நிகழ்வு இடம்பெறவுள்ளது. முதலமைச்சர், அவைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள பிரியாவிடை நிகழ்வையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது.**

சூழலைப் புரிந்துகொண்டு பொருத்தமான முடிவுகளை உரிய நேரத்தில் எடுத்தல் அல்லது கையாளுதல் தான் diplomatic behaviour என ஓர் ஆங்கில அகராதி விளக்கம் தருகின்றது. நேரம் என்பது சாணக்கியத்தில் அச்சாகச் சுழல வேண்டும் என்பது தான் அந்த அகராதியின் எதிர்பார்ப்பாக இருக்கவேண்டும். அதற்கு 'கொல்லன் தெருவில் ஊசி விற்கும் சாதுரியம் என்றொரு பொருளும் நடைமுறை வழக்கில் உண்டு. இந்த இராஜதந்திர சுழற்சியை சரியாக புரிந்து வைத்திருந்தவர் யாழ் இந்தியத் துணைத் தூதர் ஆறுமுகம் நடராஜன். எனது நினைவுகள் சரியாக இருந்தால் சில ஆண்டுகளுக்கு முன் கண்டியில் நடைபெற்ற ஓர் இந்திய குடியரசு தினம். பல நிறங்களைத் தங்கி நிற்கும் இலங்கைத் தலைவர்கள், இலங்கை– இந்திய வழி மக்கள் என அனைவரும் ஒன்று கூடியிருந்த நிகழ்வு.

எதிர்பார்க்கப்பட்ட இராஜதந்திர உரை பதினைந்து நிமிடங்களுக்குள் மிக நெகிழ்ச்சியாக இந்திய – இலங்கை உறவுகளின் அவசியத்தை அடிக் கோடிட்டு சொல்லியிருந்தது. அந்த உரையில் இந்திய – இலங்கை அயலுறவோடு, இந்திய – இலங்கை தமிழர்களின் உணர்வுகளும் கவனத்தோடு பேசப்பட்டது. ஒவ்வொரு வார்த்தைகளும் நிதானமாக உள்வாங்கிக் கொள்வது போன்று தென்னிலங்கைத் தலைவர்களின் முகங்கள் மாறிக்கொண்டிருந்தன..

கடந்த அறுபது ஆண்டுகளில் இந்திய – இலங்கை உறவுகள் பல ஏற்றத் தாழ்வுகளைக் கடந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடந்த குடியரசுதினத்தில்முதலமைச்சர்திருசி.வீ.விக்னேஸ்வரன் நிகழ்த்திய உரையில் ஒரு காலத்தில் இலங்கை – இந்திய இணைப்புக் குறித்து பேசிய இந்தியப் பெருந் தலைவர் வல்லபபாய் பட்டேல் பெயர் வந்து போன இடங்கள் அதிக கவனத்தை ஈர்த்திருந்தது.

ஒரு தூதரகம் நிகழ்ச்சிகளை நடத்துவது ஒன்றும் இலகுவான செயல் அல்ல. பல தடவைகள் அதன் நிதானம் விமர்சிக்கப்படும். அதற்கு கயிற்றின் மேல் நடக்கும் கழைக்கூத்தாடியின் நிதா னம் அடிப்படைத் தேவை. நெருடல்கள் நிறைந்த அரசியற் சூழ்நிலையில் உரசல் இல்லாத மொழி வளம், உள் அர்த்தம் கற்பிக்க முடியாத நடைமுறையென ஏகப்பட்ட வரைமுறைகள் இராஜதந்திரிகளுக்கு உண்டு. இராஜதந்தர உறவில் வெற்றியை நேர்கோட்டில் சந்திப்பது மிக அரிதான நிகழ்வு.

உச்சிவானத்தை தொடும் குண்டு வெடிப்புக்கள், கடத்தல் என அரசு வளைகுடாவை உலுக்கிப் போட்டுக்கொண்டிருக்கும் யேமனில் 1985இல் தொடங்கியது நடராஜனின் வெளிவிவகாரப் பணி. அங்கிருந்து அவருடைய இராஜதந்திரப் பணி கார்க் குண்டு வெடிப்புகளுடன் பாஸ்க் பிரிவினைப்போராட்டம் உச்சத்தில் இருந்த ஸ்பெயினுக்கு மாறுகின்றது. பின்னர் சீனா, இந்தோனேசியா, பாரிஸ், பூட்டான் என நடராஜனின் பயணங்கள் தொடர்ந்தாலும் இலங்கை ஒரு புதிய அனுபவத்தை அவருக்கு கொடுத்திருக்க வேண்டும். கடந்த காலங்களில் அவர் கடந்து வந்த சீனா, பூட்டான், யேமன் என்பன இந்தியாவைப் பொறுத்தமட்டில் இராஜதந்திர அயல் நண்பர்கள். ஆனால் இலங்கை– இந்திய உணர்வுகள் பண்பாட்டு ரீதியானது. இலங்கைத் தீவின் மீது பாண்டியரும், சோழர்களும் கொண்டிருந்த பார்வை வேறுபாடானது என்கின்றார் புகழ்வாய்ந்த வரலாற்று ஆசிரியர் நீலகண்டசாஸ்திரி.

தமிழகத்தில் நடந்த சில அசம்பாவிதங்கள் ஒருசில மணிநேரத்துக்குள் கண்டியில் ஆர்ப்பாட்டமாக உருமாற்றமடைந்த போது நடராஜனின் நம்பிக்கையான சில வார்த்தைகள் ஆர்ப்பாட்டக்காரர்களின் கசப்புணர்வை சில நொடிகளில் நீர்த் துப் போகச் செய்தன. நடராஜனின் உரை மறுநாள் தலைப்புச் செய்தியாக ஊடகங்களில் வெளியாகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக மாறுபட்ட எண்ணங்களைக் கொண்ட பல கோடி மக்களின் மையப் புள்ளிகளாக தூதரகங்கள் இயங்குவது எளிதானதல்ல எனத் தெரிகின்றது. குறிப்பாக இந்தியா போன்ற நிலப் பிரபுத்துவ சமூகத் தளங்களை அடிப்படையாகக் கொண்டுள்ள நாடுகளின் ஒழுக்க விதிகள் மிக இறுக்கமானவை. நெகிழ்ச்சித் தன்மை குறைவானவை.

அது அனைத்துவிடயங்களையும் அறிந்து வைத்திருப்பதை வற்புறுத்துவதற்கு மேலாக சில விடயங்களில் ஆழமான அறிவை எதிர்பார்க்கின்றது. மொழி அடிப்படையிலான மாநில அரசுகளுக்கு இடையிலான இணக்கம் என்பது இந்திய அரசமைப்பில் வற்புறுத்தப்பட்ட மையக் கருத்து. அதற்கு இயல்பாகப் பொருந்தக்கூடிய ஓர் அயலுறவுக் கொள்கையாக நேரு வகுத்திருந்தார். இது பல சந்தர்ப்பங்களில் போர் கடந்த இலங்கைக்கு அதிகம் பெருந்தமுடையதாக இந்தியா வெளிப்படையாகப் பேசியிருந்தது.

கண்டித் துதரகத்தில் நடராஜனின் பணி பல்லினச் சமூகங்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதாக தோன்றியது. புதிய டிக்கோயா மருத்துவமனை, குருநாகல், ஊவா மாகாணம், நுவரெலியா ஆசிரியர் பயிற்சி மையங்கள் என பல திட்டங்களை பல பில்லியன் ரூபாய்களில் 3 ஆண்டுகளில் வேகமாக நிறைவேற்றினார் நடராஜன். அவர் சிறிய நிகழ்வுகளையும் புறக்கணிக்கவில்லை இராஜதந்திரி என்பதற்கு மேலாக மக்களின் நம்பிக்கைகளை வென்றவராக மலையகம் அவரைப் பார்த்தது. அரசியற் தலைவர்களில் இருந்து சாதாரண குடிமக்கள் வரை எளிதல் சந்திக்கக்கூடியதாக அவரது நிகழ்ச்சித் திட்டங்களை தூதரக அதிகாரிகள் தயாரித்தார்கள்.

ஆனால் போருக்கு முன்னும் பின்னும் டில்லி உயர் மட்டத்தால். யாழ் மாவட்டம் நன்கு ஆராயப்பட்டிருக்கின்றது என்பதற்கு சில நியாயமான காரணங்கள் உண்டு. மூன்று ஆண்டுகள் நிறைவோடு கண்டியில் இருந்து தாயகம் திரும்ப வேண்டிய நடராஜனை, இராஜதந்திர நடைமுறைகளுக்கு மாறாக யாழ் மாவட்டத்திற்கு அனுப்ப டில்லி தீர்மானம் எடுக்கின்றது. இது இராஜதந்திர நகர்வுகளில் அடிக்கடி நிகழாதவை என பரவலாக உணரப்பட்டது.

கண்டியில் பெரும் திரளான மக்களை பெயர்களோடு நினைவில் வைத்திருக்கும் ஒரு மிக எளிமையான இராஜதந்திரி என நடராஜனை முன்னாள் கண்டி ஆளுநர் டிக்கிரி பண்டாரா அடிக்கடி மேடைகளில் சொல்லிக் கொள்வது துண்டு. அவர் மூன்று ஆண்டுகளில் மலையக மக்களை தன் பக்கம் திருப்பியதை வியப்புடன் பார்க்கின்றேன் என ஆளுநர் பகிரங்கமாக கூறினார். இது டில்லியின் கவனத்தை பெற்றதில் ஆச்சரியம் இருக்க முடியாது.

யாழ் மாகாணம் என்பது ரணங்களினதும், குருதிகளினதும் வாடை நீங்காத வன்னி உள்ளிட்ட வட புலத்து மண். வழக்கமான நம்பிக்கைகளை வளர்க்கும் இராஜதந்திர நகர்வுகளுக்கு மாறாக, நம்பிக்கைகளையும், உறவுகளையும் தழைக்கச் செய்யும் பணி சவால் நிறைந்து என்பதை டில்லி உணர்ந்திருக்க வேண்டும். கண்டியில் இருந்து மீளவும் யாழ்ப்பாணத்திற்கு நடராஜன் மாற்றப்பட்டார். அதிகம் பேசப்படாமல் இருந்த யாழ் துணைத் தூதரகத்தின் நாள்குறிப்பேட்டில் பொதுமக்கள் சார்ந்த சாதாரண நிகழ்வுகளுக்கும் உரிய முக்கியத்துவங்கள் வழங்கப்பட்டன.

யாழ் கலாசார மண்டபம் 2 ஆயிரம் கோடியை தொட்டிருக்கின்றது. துரையப்பா விளையாட்டு அரங்கம் 146 மில்லியன், வவுனியா மருத்துவமனை 400 மில்லியன், கிளிநொச்சி பல்கலைக்கழக பொறியியற் பீடம், வேளாண் துறை 600 மில்லியன், திருக்கேதீஸ்வரம் 346 மில்லியன். முல்லைத்தீவு மீனவர்களுக்கு 150 விசைப் படகுகள், யாழ்.குடாவில் 300 மில்லியன் செலவில் 3 ஆயிரம் நீர் தாங்கிகள் என டில்லியின் கவனத்தை யாழ் நோக்கி ஈர்ப்பதில் நடராஜனின் காட்டிய உழைப்பும், அக்கறையும் அதிகம். இன்னும் பல செய்திகளில் வெளிவராதவை.

முதல்வர் விக்னேஸ்வரனின் இந்தியக் குடியரசு தின உரை நடராஜனின் இடமாற்றத்தை மிக பெரிய வெற்றிமாக பகிரங்கமாக அழுத்திக் கூறியது. ஒரு வெற்றிகரமான இராஜதந்திரியின் நாள்குறிப்பேடுகள் அலுவலக எல்லைக்கு வெளியே பொதுமக்களுக்காகப் அதிகம் பதியப்பட்டிருக்கும் என்ற அமெரிக்க இராஜதந்திரி டானியல்பிரைட்டின் Daniel Fried கருத்துக்கள் நடராஜனின் நினைவோடு தங்குகின்றன.

## மறைந்தவர்களின் தொலைபேசி ....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு நிருபர்கள் செய்திவேட்டைக்குச் சென்று வீரகேசரி அலுவலகத்திற்கு வருவதற்கு முன்னரே, எனக்கிருந்த தொடர்புகளின் ஊடாக முடிந்தளவு செய்திகளை சேகரித்துக் கொண்டு, அவர்கள் இணைப்புக்கு வந்தபின்னர் தரும் செய்திகளையும் ஒப்பிட்டு செம்மைப்படுத்தி எழுதிக்கொடுக்கும் பணி காலை 8.30 இலிருந்து மதியம்வரையில் தொடரும். யாழ். நிருபர் அரசரட்ணம், யாழ். அலுவலக நிருபர் காசி. நவரத்தினம், வவுனியா நிருபர் மாணிக்க வாசகம், மட்டக்களப்பு நிருபர் நித்தியானந்தன் ஆகியோருடன் தினமும் பேசிக் கொண்டிருந்தேன். எரியும் பிரச்சினைக்கு மத்தியில் அவர்களின் அயராத உழைப்பு போற்றத்தக்கது.

இவர்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து சுடச்சுட செய்திகள் தந்த செல்லத்துரை, நான் ஆசிரியபீடத்தில் இணைந்த காலப்பகுதியில் நோயுற்று மறைந்துவிட்டார்.

மதியத்திற்கு மேல் அலுவலக நிருபர்கள் கனக. அரசரத்தினம், எஸ்.என். பிள்ளை, ஜோன் ரெஜீஸ், சனூன், பால விவேகானந்தா, ஏ.கே. முத்து, எம்.ஏ.எம். நிலாம், அன்டன் எட்வேர்ட் , வீ.ஆர். வரத ராஜா ஆகியோர் எழுதித்தரும் செய்திகளையும் செம்மைப்படுத்த நேரிடும்.

வடக்கிலிருந்து வரும் செய்திகள் குறித்து அலுவலகத்திலிருக்கும் இதர ஊழியர்களும் எப்பொழுதும் பதற்றத்துடன்தான் இருப்பர். சிலர் அடிக்கடி இன்டர்காமில் கேட்டுத்தெரிந்துகொள்வதற்கு அவர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் வடபகுதியில் இருந்ததும் முக்கிய காரணம். சில பெண் ஊழியர்கள் ஊருக்குச்செல்வதற்கு முன்னர் நிலைமையை கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். போக்குவரத்து நிலைமை சீராக இருக்கிறதா? என்பதையும் ஊர்ஜிதப்படுத்த வேண்டியிருக்கும்.

உங்களை நம்பித்தான் புறப்படுகின்றோம் எனச் சொல்லி விட்டு முதல்நாள் மாலையே அவர்கள் அலுவலகத்திலிருந்து விடைபெறும்போது நான் நெகிழ்ந்து போகும் சந்தர்ப்பங்களும் அதிகம்.

அதனால் எனக்குள்ளும் பதற்றம் அதிகரிக்கும். கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முதல், பொல்கஹாவெல, குருநாகல், அனுராதபுரம், மதவாச்சி, வவுனியா வரையும் இருக்கும் ரயில் நிலையங்களின் தொலைபேசி இலக்கங்களையும் பேணிவைக்க வேண்டியிருந்தது. வவுனியாவுக்கு அப்பால் ரயில் நகரவில்லை. தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் பங்கர்கள் அமைப்பதற்கு நகர்ந்துவிட்டன!

கோட்டையிலிருந்து ரயில் புறப்பட்டது முதல் அதன் பின்னர் வரும் முக்கிய ரயில் நிலையங்களுக்கு அவை சென்றடையும் நேரம் கணித்து தொடர்பு கொண்டு பாதுகாப்பு குறித்தும் அறிந்து வைத்திருக்கவேண்டிய பதற்றத்தில் அன்று வாழ்ந்திருக்கின்றோம்.

கொழும்பு செட்டியார் தெருவிலும் இதர பிரதேசங்களிலும் வர்த்தகம் தொடரும் பிரபல புள்ளிகளுக்காகவும் தொலைபேசி இலக்கங்களை பேண வேண்டியிருந்தது.

அவர்கள் பயணிப்பதற்கு முன்னர் நாட்டின் நிலையை கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். இந்தச் சேவைக்கும் அந்த டயறிதான் பெரிதும் உதவியது.

அதனால் தினமும் அந்த டயறியும் என்னுடன் பயணிக்கும்.

வடக்கிலும், கிழக்கிலும் இயக்கங்கள் கண்ணிவெடி தாக்குதலை நடத்தும். கொள்ளைகளிலும் ஈடுபடும். கோயில்களும் பாடசாலைகளும் இது விடயத்தில் தப்பவில்லை. அரச ஊழியரின் சம்பளப் பணமும் பறிபோகும். வங்கிகளிலும் நகை அடைவுக்கடைகளிலும் மக்களின் நகைகள் பறிக்கப்படும். எல்லாம் நடந்தது தமிழ் ஈழத்திற்காகத்தான் என்ற நியாயங்களும் செய்தவர்களினால் சொல்லப்படும். சில மின்கம்ப கொலைகளுக்கு துரோகிகளுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை என்ற பிரசுரமும் வெளியாகும்.



குமார் பொன்னம்பலம்

அரச தரப்பு, பயங்கரவாதிகளை ஒடுக்குகிறோம் என்று தனது லங்கா புவத் மூலம் செய்தி பரப்பும்.

இந்தச் செய்திகளை எழுதும்பொழுது ஊர்ஜிதப்படுத்துவதற்காக பிரதேச நிருபர்களை மாத்திரம் நம்பியிராமல், அச்சம்பவங்கள் நடந்த பிரதேசத்திலும் சிலர் உத்தியோகப்பற்றில்லாமல் இனப்பற்றோடு இயங்கினார்கள்.

அவர்கள் பாடசாலை அதிபர்கள், நீதிபதிகள், அரச ஊழியர்கள், மரண விசாரணை அதிகாரிகள், சட்டத்தரணிகள், குடும்பத் தலைவர், தலைவிகள். அவர்களின் பெயர் வெளியே தெரியாது. கொல்லப்பட்டவர்களின் பெயர், வயது, தொழில், குடும்பத்தினரின் எண்ணிக்கை ஆகியவற்றை துல்லியமாகத் தெரிந்தவர்களாகவும் அவர்கள் இருப்பார்கள்.

இயக்கம் கண்ணிவெடி வைத்து விட்டு மறைந்துவிடும், இராணுவமோ அதிரடிப்பொலிஸோ கொல்லப்படும். அவர்கள் வந்த ஜீப், ட்ரக் வாகனங்கள் கடும் சேதமடையும்.

அந்த இடத்தில் பெரிய பள்ளம் தோன்றும். கேள்விப்பட்டதும் அவ்விடத்திற்கு வரும் ஆயுதப்படை, யார்? எவர்? என்றும் பார்க்காமல் கண்மூடித்தனமாகச் சுட்டுத்தள்ளும். இலங்கையின் தகவல் திணைக்களத்தின் லங்கா புவத் வானொலியிலும் அரச தொலைக்காட்சியிலும் அவ்வாறு கொல்லப்பட்டவர்களுக்கு பயங்கரவாதிகள் (?) என்ற நற்பெயரைச் சூட்டும்.

என்னைப்போன்ற பத்திரிகையாளருக்கு பொறுப்புணர்வு சற்று அதிகமாக இருக்கின்றமையால் , தாக்குதல் சம்பவத்தின் பின்னணியை துப்புத் துலக்குவோம்.



விஜய குமாரண துங்க

கைத்தொலைபேசி இல்லாத அந்தக்காலத்தில் எமக்கு பெரிதும் உதவிய உற்ற நண்பர் இந்தத் தொலைபேசிதான். அதுவும் சில சமயங்களில் ஒழுங்காக இயங்காது.

ஆயுதப்படையினர் மீதான தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட அப்பாவிகளின் பெயர், வயது, தொழில், குடும்பத்தில் எத்தனைபேர் முதலான விவரங்களுடன் செய்தியை எழுதிவிட்டு, இறுதிப் பந்தியில், இதுஇவ்விதமிருக்க இத்தனை பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று தகவல் திணைக்களத்தின் செய்திப்பிரிவு (லங்காபுவத்) தெரிவித்துள்ளது என எழுதிவிடுவோம்.

**வாசகருக்கு செய்தி புரிந்துவிடும்!**

இவ்வாறு தினமும் எழுதி எழுதியே எனது வலது கையின் நடுவிரல் வீங்கி விட்டது.

நீடித்த அந்தப்போர் சாதித்தது என்ன? எழுதி எழுதி செய்தி வெளியிட்ட நாம் சாதித்தது என்ன? ஆயுதங்களை இரண்டு தரப்புக்கும் விநியோகித்த வெளிநாட்டு ஆயுத உற்பத்தியாளர்களும் ஆயுதத் தரகர்களும் ஈட்டிய சாதனைதான் என்ன? எங்கள் தேசத்தில் விதவைகளினதும் அநாதைகளினதும் எண்ணிக்கையை பெருக்கியது மாத்திரமே அவர்களின் சாதனை!

இன்று சிரியாவில் அவர்கள் ஆயுதம் விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். இன்றும் செய்தியாளர்கள் அங்கு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை எழுதிக்கொண்டிருக்கின்றனர். ஒளி பரப்பிக் கொண்டு இணையங்களில் பதிவேற்றுகிறார்கள்.

அன்று கோழிக் கள்வர்களுக்கும், சிறு சிறு திருட்டுச்சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கும், ஆயுதப்படையினருடன் பேசியவர்களுக்கும், சமாதானப் பேச்சுக்கு முன்வந்தவர்களுக்கும் துரோகிகள் என்ற நற் சான்றிதழ் வழங்கப்பட்டது. இன்றும் சிலருக்கு அந்தச் சான்றிதழ்களை சிலர் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நீடித்த போர் முடிவுற்று ஒன்பது ஆண்டுகள் முடிவுறுகின்றன. ஜெனீவாவில் மீண்டும் இந்த ஆண்டுக்கான உற்சவத்திற்கு கொடியேறியிருக்கிறது. பத்தாவது ஆண்டிலும் கொடியேறும். யாத்திரீகர்கள் பயணிப்பார்கள்!!

என்னிடம் இருக்கும் அந்தக்கறுப்பு டயறியில் குறித்து வைத்துக்கொள்ள தங்கள் தொலைபேசி இலக்கங்களைத் தந்தவர்கள் இனத்தின் பெயரால் கொல்லப்பட்டார்கள். அரசியல் பழிவாங்கலுக்காக அழிக்கப்பட்டவர்கள். செய்தி எழுதியமைக்காக கொல்லப்பட்டவர்கள். யாருக்காவது நீதி கிடைத்ததா?

இவ்வாறு அழிப்பு படலத்தில் ஈடுபட்டவர்களும் அழிந்தார்கள். அந்த டயறி மாத்திரம் இன்றும் அழியாமல் எனது மேசையில் அமர்ந்து துன்பியல் புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருப்பதாக உணருகின்றேன். ★

# உரும்பிராயில் யோகா இலவசப் பயிற்சி வகுப்பு

உரும்பிராய், மார்ச் 04

உரும்ராய் தெற்கு பலாலி வீதி திருமூலர் யோகா அறைச்சாலையில் நேற்று சனிக்கிழமை முதல் யோகா சனம், தியானம், சுவாசப் பயிறசி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. இந்த இலவச பயிற்சி நெறியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் அனைவரும் கலந்து கொள்ளமுடியும். நோயாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படும். இந்த பயிற்சி நெறியை மூத்த யோகா ஆசிரியர் யோகரத்னா வி.என். சிவனேஸ்வரராசா வழங்குவார்.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்புவோர் மேற்கண்ட முகவரியில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரை பதிவுகளைச் செய்யலாம். மேலதிகத் தொடர்புகளுக்கு 077 2765 413 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# காற்றோடு கத்திச் சண்டை..

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முறையற்ற மத்திய குழுவில் இதுவரை எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களும் செல்லுபடியற்றவையாக்க முடியும் - நீதிமன்றுக்குச் சென்றால். ஆகவே எல்லோரும் முட்டாள்கள் அல்லர் என்பதை நீங்கள் புரியவேண்டும்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கக் கூடாது என்பதை நான் பல கூட்டத்தில் வலியுறுத்தினேன். 17.10.2014 இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட கட்சி மாநாட்டிலும் 28.10.2014 திருகோணமலையில் நடைபெற்ற மத்திய செயற்குழுவிலும் வலியுறுத்தினேன்.

நிறைவாக 14.12.2014 வவுனியாவில் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் ஆதரவு வழங்கும் விடயம் தொடர்பாக நீண்ட நேரம் விவாதித்தேன். ஜனநாயகத்திற்கு செவிசாய்த்தீர்களா? சர்வதிகாரமாகவே நடந்துகொண்டீர்கள். பின்னர் கொழும்பில் கூட்டமைப்புக் கூட்டத்தில் நிபந்தனை அற்ற ஆதரவு வழங்குவதாக தீர்மானித்தீர்கள். இது தவறு என உங்களுக்கும் சம்பந்தன் அவர்களுக்கும் தொலைபேசிமூலம் கூறினேன். எம்மிடம் திட்டம் இருக்கிறது, நாம் சாதிப்போம் என சர்வதிகாரமாக பதில் சொன்னார் சம்பந்தன்.

என்னால் இதை ஏற்க முடியாது எனக் கூறி என் கருத்தை மனச்சாட்சிப்படி ஊடகங்களுக்கு தெரிவிப்பேன் என உங்கள் இருவருக்கும் தெரிவித்தேன் அதற்கமைவாக 03.01.2015 அன்று யாழில் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தினோம் நானும் திருமதி. அனந்தி சசிதரன், மறவன்புலவு சச்சிதானந்தன் அவர்களும் இந்த ஊடக சந்திப்பை தற்போதும் இணையங்களிலும் பார்க்கலாம் நீங்கள் கொழும்பிடம் நலனையும் பெற்றுக்கொண்டு நிபந்தனையற்ற ஆதரவு என விடுதலைக்கு போராடிய இனத்தை எந்த அடிப்படையும் இல்லாமல் கொழும்பிடம் விற்றுவிட்டீர்கள். பாவம் அப்பாவி தமிழ் மக்கள்.

நிபந்தனை அற்ற ஆதரவு தமிழ்த் தேசியத்தை வலுவிழக்கச் செய்யும் வடகிழக்கில் சிங்களக் கட்சிகளை காலூன்றச் செய்யும், தமிழ்த் தேசிய உணர்வு அற்றுப் போகும், ஐ.தே.க. எம்மை கூறு போடும், புலிகளையே பிரித்தவர்கள், இனப்படுகொலையாளர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியாது, சர்வதேச விசாரணை காணாமற் போகும் என்றெல்லாம் பல விடயங்களை அன்றே தீர்க்கதரிசனமாக கூறியிருந்தோம். இன்று வடக்கில் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்பட்டதா? நாம் சொன்னவை எல்லாம் தற்போது நடைபெறுகின்றன தானே இதில் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தவர்கள் நீங்களா? நாங்களா?

யார் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்? தமிழ் மக்களுக்கு எல்லாம் தெரியும். அதுதான் தேர்தலில் வெளிப்படுத்தினார்கள். ஆகவே சகல தவறுகளுக்கும் பொறுப்பாளிகள் நீங்களே. தொடர்ந்து உங்களுக்கு இறங்கு முகமே நீளும் வலி சுமக்காமல் வழிப்போக்கனாக வந்த சுமந்திரனுக்கு யாப்பை மீறி சர்வதிகாரம் கொடுத்தவர் யார்? சகல தவறுகளுக்கும் நீங்களே காரணர். தமிழின விடுதலைக்காக மரணித்த ஆன்மாக்கள் உங்களை மன்னிக்கா. வடக்கு, கிழக்கு இணைப்பு காணாமற் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, நில விடுவிப்பு, வாழ்வாதார முன்னேற்றம், மனித உரிமைகள் விவகாரம்..., இவற்றில் ஏதாவது ஒன்றையாவது சாதித்தீர்களா? உங்கள் நிபந்தனையற்ற ஆதரவால் கேவலம் சிங்கள அரசாங்க அதிபர்களைக் கூட மாற்ற முடியவில்லை. நீங்கள் மட்டும் பதவிகளும் சுபபோகங்களும் பெற்றுக் கொண்டீர்கள் இந்த ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு கிடைத்த விமோசனம் என்ன?

எனவே கட்சியின் யாப்புக்கு எதிராக இயங்கிய உங்கள் மேல்தான் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். உங்களில் யாருக்காவது முதுகெலும்பு இருந்தால் கொள்கைபற்றி மக்கள் மன்றத்தில் ஊடகங்களுக்கு முன் பகிரங்க விவாதம் நடத்துவோம் வாருங்கள். யார் அரசியல் ஆதாயச் சூதாடிகள் என்று நிரூபிப்போம். உங்களைக்கண்டெல்லாம் அச்சப்படுவதற்கு நாம் ஒன்றும் தொட்டால் சுருங்கி அல்லர். நாங்கள் பிரபாகரனைப்பார்த்து வளர்ந்தவர்கள். அறம் வெல்லும் விடுதலைக்காக சிந்திய ஏழையின் கண்ணீரும் செங்குருதியும் உங்கள் யாவரையும் அழிக்கும். ★

# அழகான கால்களுக்கு!



கால்களில் இருக்கும் அதிகப்படியான சதையை இறுக்கி, அழகான கால்களாக மாற்ற இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புக்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

அரிசி மாவு ஒரு தேக்கரண்டி எடுத்து அதில் ஒரு தேக்கரண்டி யோகார்ட், ஒரு சிட்டிகை மஞ்சள் கலந்து கால்களில் தடவுங்கள். அரை மணி நேரம் கழித்து கழுவவும். இதனால் கால்களில் இருக்கும் இறந்த செல்களை அகற்றலாம். விடாப்படியான தழும்புகளும் மறையும்.

கால்களில் இருக்கும் சருமம் மென்மையாக இருப்பதால் அதில் குளிர்காலத்தில் சதுர சதுரமாக வறண்டு போன கோடுகள் தெரியும். இதனை தவிர்க்க, ரோஸ் வோட்டரை ஒரு பஞ்சினால் நனைத்து கால் முழுக்க தடவுங்கள். இரவில் அவ்வாறு செய்து விட்டு படுக்கவும். இதனால் கால்களில் வறட்சி ஏற்படாமல் தடுக்கும்.

## சரும ஆரோக்கியத்தை பாதுகாக்கும் கடலைமா

பெண்கள் தங்கள் அழகைப் பேணிக்காப்பதற்கு அழகு நிலையத்தை நாடுகிறார்கள். இயற்கையிலேயே வீட்டில் உள்ள பொருள்களை கொண்டே முகத்தைப் பொலிவாக்கலாம்.

பெண்கள் பொதுவாக அழகாகவும், ஆரோக்கியமாகவும் தங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்றே விரும்புவார்கள். ஆனால், இன்றைய காலத்தில் மாசுபட்ட காற்றினால் முகத்தில் முகப்பரு, கருவளையம் எனப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இதிலிருந்து, தங்களது அழகைப் பேணிக்காப்பதற்கு பெரும்பாலான பெண்கள் அழகு நிலையத்தைத் தான் நாடுகிறார்கள். இயற்கையிலேயே வீட்டில் உள்ள பொருள்களைக் கொண்டே முகத்தைப் பொலிவாக்கலாம்.



ஆம், அழகைப் பேணிக்காப்பதில் முக்கிய பங்கு வகிப்பது கடலைமா. கடலைமா பொலிவிழந்த சருமத்தை இளமையூட்டும்.

இரண்டு தேக்கரண்டி கடலை மாவில் சிறிதளவு தண்ணீர் விட்டு நன்றாக பிசைந்து கொள்ளவும். பின்னர் முகத்தில் நன்றாக தடவி ஊறவிடவும். நன்றாக உலர்ந்த பின்னர் குளிர்ந்த நீரில் முகம் கழுவினால் பளிச்சென்று இருக்கும்.

அதேபோல் குளிக்கும் போது கடலைமாவு பூசி குளித்தால் சருமம் வழுவழுப்பாகும். சருமம் சுருக்கமின்றி இளமையோடு இருக்கும்.

# பருவம் அடையாத பெண்கள் கருத்தரிக்க முடியுமா?



ஒரு முறை கூட மாதவிடாய் ஆகாத பருவம் ஆகாத பெண்களும் கருமுட்டை தானம் பெற்று, கணவரின் விந்தணுவைச் சேர்த்து கருவாக்கி, கருப்பையில் செலுத்தி தாய்மை அடையச் செய்யலாம்.

முழு வளர்ச்சி அடையாத கர்ப்பப்பை, சினைப்பை இல்லாமல் இருப்பது, கர்ப்பப்பையின் உள் வரி மெல்லியதாக இருப்பது, கரு முட்டையின் தரம் குறைவாக இருப்பது, கர்ப்பப்பை கட்டிகள் போன்ற காரணங்களால் குழந்தையின்மை ஏற்படுகிறது. 20 வயதுக்கு மேல் உள்ள ஒரு சில பெண்களுக்கு கருப்பை வளராமல் இருக்கும்.

கரு முட்டை, கர்ப்பப்பை சிறியதாக இருக்கும் பெண்களுக்கு சில ஓமோன் ஊசிகள், மாத்திரை மூலம் கருத்தரிக்க வைக்கலாம். சினைப்பை வளர்ச்சி இல்லாத பெண்கள் கரு முட்டையை தானமாகப் பெற்று தாய்மை அடையலாம்.

ஒரு முறை கூட மாதவிடாய் ஆகாத பருவம் ஆகாத பெண்களும் கருமுட்டை தானம் பெற்று, கணவரின் விந்தணுவை சேர்த்து கருவாக்கி, கருப்பையில் செலுத்தி தாய்மை அடையச் செய்யலாம். கரு முட்டையின் தரம் குறைவாக இருக்கும் பெண்களுக்கும் சினை முட்டைகள், அவர்களின் இரத்த தட்டணுக்களை எடுத்து கருப்பைக்குள் செலுத்தி கருமுட்டையின் தரத்தைக் கூட்டலாம்.

25 - 30 வயது உள்ள பெண்களுக்கு புதிதாக வந்துள்ள மருந்தை 6 மாதங்கள் கொடுத்து நார் திசுக் கட்டிகளை கரைத்து குழந்தைப் பேறு அடையச் செய்யலாம். நார் திசுக்கட்டிகள் பெரியனவாக உள்ள பெண்களுக்கு மருந்து கொடுத்து கட்டியின் அளவை குறைக்கலாம். இதற்கு பின் மையோமெக்டமி (Myomectomy) என்ற அறுவை சிகிச்சையை செய்து மீதமுள்ள கட்டியை அகற்றி விடலாம்.

# சிசேரியன் பிரசவத்தில் தாய்ப்பால் பற்றாக்குறை ஏற்படுமா?



சிசேரியன் மூலம் பிரசவித்த தாய்மார்களுக்கு பால் போதிய அளவு இருக்காது என்ற கருத்து நிலவுகிறது. இது தொடர்பாக விரிவாக அறிந்து கொள்ளலாம்.

கர்ப்ப காலத்தில் பெண்கள் சத்தான உணவுகளை உண்டு ஆரோக்கியமாக இருக்கவேண்டியது அவசியம். ஆனால் குழந்தை பிறந்த பிறகும் கூட தாய்ப்பால் கொடுப்பதற்காக பெண்கள் உடல் நலத்தில் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். பிரசவம் பொதுவாக சுகப்பிரசவம் மற்றும் சிசேரியன் மூலம் நடக்கிறது. சிசேரியன் மூலம் பிரசவித்த தாய் மார்களுக்குப் பால் போதிய அளவு இருக்காது என்ற கருத்து நிலவுகிறது.

இது முற்றிலும் தவறான கருத்து. இப்படி ஒரு தவறான கருத்து இருப்பதற்குக் காரணம் சிசேரியன் முடிந்ததும் குறைந்தபட்சம் ஆறு மணி நேரம் மயக்க நிலையிலேயே இருப்பார்கள். அப்படி மயக்கத்தில் இருப்பதால் குழந்தைக்கு பால் கொடுப்பதில்லை. இது தான் பால் பஞ்சத்தின் துவக்கம்.

சீம்பால் எனப்படும் முதல் பாலைகண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். குழந்தை பிறந்ததும் கொடுக்கப்படும் முதல் பால் வாழ்நாள் முழுக்க குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தியை தருகிறது. தாய் மயக்கத்தில் இருந்தாலும், கூட எப்படியாவது குழந்தையை பால் குடிக்க வைக்க வேண்டியது அவசியம். இதனால் பால் பற்றாக்குறை இல்லாமல் போகிறது.

தாய்ப்பால் கொடுக்க தெரியவில்லை என்றால் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்து பழக்க வேண்டியது அவசியம். பால் கொடுக்க கொடுக்க தான் தாய்ப்பால் பெருகும்.

குழந்தைக்கு தேவையான சத்துக்கள் அனைத்தும் தாய்பாலிலேயே கிடைப்பதால், ஆறு மாதங்கள்வரை தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டியது அவசியம். ஏழாவது மாதத்தில் இருந்து எளிதில் செரிக்கக்கூடிய உணவுகளைக் கொடுக்கலாம். தாய்ப்பால் கொடுப்பவர்களுக்கு பொதுவாக எடை அதிகரிக்கும் அல்லது கூடும். இவை தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தியதும் சரியாகிவிடும்.



# உடற்பயிற்சி பற்றிய தவறான கருத்துக்கள்

உடற்பயிற்சி பற்றி சிலருக்கு தவறான கருத்துக்களும், அதற்கான தீர்வுகளை பற்றியும் விரிவாக அறிந்து கொள்ளலாம்.

உடற்பயிற்சிகளைச் செய்வதால் உடல் வளர்ச்சி நின்றுவிடும் அல்லது உயரம் குறைந்துவிடும் என ஒரு மாயை இருக்கிறது. அது முற்றிலும் தவறானது. முறையற்ற பயிற்சிகளால் எலும்புகளில் உட்காயம் ஏற்படலாம். முறையாக செய்யும் பயிற்சிகள் உயரத்தை எந்தவகையிலும் பாதிக்காது. உயரத்தை நிர்ணயிப்பது உங்கள் மரபணுக்கள்தான்.

பெண்கள், அனைத்து வகையான பயிற்சிகளையும் செய்தால் ஆண்களைப் போல தசை வளர்ச்சி பெறுவார்கள் என்பது தவறு. இன்னும் சொல்லப்போனால், முறையான பயிற்சியாளர் இருந்தால் பெண்கள் கருவுற்ற நிலையிலும் உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

எந்த சிறப்பு உணவைப் பயன்படுத்துவதற்கு முன்பும் அது உங்கள் உடலுக்கு ஏற்றதா, இலக்கை அடைய சரியான தேர்வா என்பதை உறுதிப்படுத்துவது அவசியம். உடற்பயிற்சிகள் செய்தால் முடி உதிரும் என்பதும் தவறான கருத்து.

பயிற்சிகள் செய்யும் போது தண்ணீர் குடிக்கக் கூடாது என சிலர் நினைப்பார்கள். அது தவறு. பயிற்சிகள் செய்யும்போது நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏனெனில் உடற்பயிற்சிகள் செய்யும்போது உடலில் உஷ்ணம் அதிகரிக்கும். அதைச் சமன்படுத்த போதுமான அளவில் தண்ணீர் குடித்தே ஆகவேண்டும். குளிர்ந்த நீர் மட்டும் குடிக்கக் கூடாது. இது உடல் உஷ்ணத்தை அதிகரிக்கும்.

பயிற்சிகள் அனைத்தும் முடிந்ததும் அப்படியே ஓய்வெடுக்கக்கூடாது. உடலைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்வு நிலைக்குக் கொண்டுவந்த பிறகே ஓய்வெடுக்க வேண்டும். அப்படி இல்லாமல், உடனடியாகவே பிற வேலைகளைச் செய்யத் தொடங்குவது தவறு.

# தலைக்கு எத்தனை முறை ஷம்பு பயன்படுத்தலாம்?



தலையில் அழுக்கு அதிகம் உள்ளது என்று அதிக முறை ஷம்புவை பயன்படுத்துவது கூந்தலின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.

உண்மையில் தினமும் தலைக்கு குளிப்பது என்பது நல்லதல்ல. அப்படி தினமும் குளித்தால், முடிவேரில் உள்ள இயற்கையான எண்ணெய் பசை நீங்கி, முடி உதிர்வது, பொடுகுத் தொல்லை போன்ற பிரச்சினைகள் ஏற்படும். மேலும் வாரத்திற்கு 2-3 முறை தலைக்கு குளிப்பது தான் சிறந்ததும் கூட.

ஷம்புவை முடிவேரில் மட்டும் தான் பயன்படுத்த வேண்டும். முடியின் முனை வரை பயன்படுத்தினால், ஷம்புவில் உள்ள கெமிக்கல்கள் முடியில் உள்ள இயற்கை எண்ணெய்ப் பசையை நீக்கி, முடியின் முனைகளில் வெடிப்புக்களை ஏற்படுத்தி விடும். அதுவே முடிவேரில் மட்டும் போட்டு அலசினால், முடிவேரில் உள்ள அழுக்குகள் நீங்குவதோடு, உள்ள எண்ணெய் சுரப்பிகள் வறட்சி அடையாமல் இருக்கும்.

தலையில் அழுக்கு அதிகம் உள்ளது என்று இரண்டு முறை ஷம்பு போட வேண்டாம். அப்படி ஷம்பு போட்டால், அவை தலையில் உள்ள எண்ணெய் பசை அனைத்தையும் முற்றிலும் வெளியேற்றி, முடியின் ஆரோக்கியத்தைப் பாதித்துவிடும். எனவே ஒருமுறை ஷம்பு போடுவதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

ஷம்பு போட்டுக் குளித்த பின்னர், முடியின் முனைகளில் மட்டும் மீண்டும் கண்டிஷனர் தடவி அலச வேண்டும்.

எப்படி துணியைத் துவைக்கும் முன், நீரில் ஒருமுறை அலச வேண்டுமோ, அதேபோல் தலைக்கு ஷம்பு போடும் முன் முடியை நீரில் நன்கு அலச வேண்டும். அதிலும் வெதுவெதுப்பான நீரில் முடியை அலசினால், ஸ்கால்ப்பில் உள்ள மயிர் துளைகள் திறக்கப்பட்டு அதில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேற உதவியாக இருக்கும்.

# இலங்கையில் 48 ஆயிரம் இயற்கைக் கருக் கலைவு

இலங்கையில் ஒரு வருடத்துக்கு 48 ஆயிரம் இயற்கையான கருக்கலைவு இடம்பெறுகின்றது என விசேட வைத்திய நிபுணர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

இந்தக் கருக் கலைவுக்குப் பிரதான காரணம் அங்கவீனமான குழந்தைக் கருத்தரிப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இருப்பினும், நாட்டில் தாய் சேய் மரண வீதம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது என வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக பிறவி அங்கவீன தினம் குறித்து சுகாதார கல்விப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கபில ஜயரத்ன இதனைக் கூறியுள்ளார். (ஐ)

# அம்பாறை இனவன்முறையை ஏற்றுக்கொள்ளவே முடியாது!

## சட்ட நடவடிக்கையை உடன் எடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 04

அம்பாறை நகரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை எந்தவிதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களைக் காலதாமதமின்றிச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை வழங்குவது அரசின் கடமை எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்கு மான அலுவலகத்தின் தலைவர் என்ற வகையில் இந்தச் சம்பவம் தொடர்பில் வெளியிட்டு அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பல்லினம் மற்றும் பல் கலாசாரம் கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையர்கள் தேசிய ஒற்றுமையுடன் ஒவ்வொருவரினதும் வேறுபட்ட தன்மையை மதித்து, பாராட்டி நாட்டுக்கும் உலகத்துக்கும் வழங்கிவரும் முன்மாதிரியை எந்தவிதத்திலும் சேதப்படுத்தாமல் இருப்பதற்கு அனைத்துச் சமூகங்களும் உறுதிகொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# வெல்லாவெளியில் ஒருவர் படுகொலை

மட்டக்களப்பு, மார்ச் 04

வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வாபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தகராறில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

செல்வாபுரம் – இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த மயில்வாகனம் கமலேஸ்வரன் என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது சடலம், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் அதே கிராமத்தைச் சேர்ந்த 24 வயதுடைய கேதீஸ்வரன் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)









## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்பு வெபர் விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் காரணமாகப் பிற்போடப்பட்டிருந்த நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் இரண்டு மாத காலப் பகுதியில் நடத்தப்பட்டு, நாட்டிலுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்கும் தொழில்களைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை அடுத்த ஆறு மாத காலப் பகுதியில் நடைமுறைப் படுத்தப்படும்.

புதிய கல்விக்கொள்கைகள் மற்றும் திட்டங்களின்படி கல்வி முறைமையில் சில மாற்றங்களைச் செய்வதற்கு அரசு கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டின் கல்விமுறைமையில் உள்ள குறைபாடுகளின் காரணமாக நாட்டின் வளமான பட்டதாரிகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் தொழில் உட்பட ஏனைய அரச நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

நீண்டகாலமாக வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போரின் காரணமாகப் பின்னடைந்திருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க வகையில் முன்னெடுப்பதற்கு இரண்டு விசேட ஜனாதிபதி செயலணிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி மக்கள் பிரதிநிதிகளின் உதவியை எதிர்பார்க்கிறேன்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திட்டங்களைத் துரிதப்படுத்துவது குறித்தும் ஆராயவுள்ளேன். – என்றார்.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்களுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3 பாடசாலைகளுக்கான உபகரணங்களை ஜனாதிபதி வழங்கினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகம, இராஜாங்க அமைச்சர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, சிறியாணி விஜேவிக்கிரம, பிரதி அமைச்சர் அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா, கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் சந்திரதாசகலப்பதி, பிரதம செயலாளர் சரத் அபே குணவர்தன, பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி, அம்பிட்டிய சுமணரத்ன தேரரைச் சந்தித்து அவரது சுகதுக்கங்களைக் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்புஸ்ரீமாமாங்கஈஸ்வரர் கோயிலுக்குச் சென்ற ஜனாதிபதி, அங்கு இடம்பெற்ற சமயக் கிரியைகளில் பங்குபற்றி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

கோயிலுக்கு அருகாமையிலுள்ள மாமாங்கக் குளத்தை பார்வையிட்ட ஜனாதிபதி, அதன் புனர்நிர்மாணப் பணிகளை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஆளுநரிடம் தெரிவித்தார்.

அதன் பின்னர் ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி அவ் வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் நாட்டினார். (ஐ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

அவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டதாகவும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்தார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சிப்பாயின் சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையில் பிரதே பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.(ஐ)

## அம்பாறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கை எடுக்கத் தான் ஒரு போதும் பின்நிற்கப் போவதில்லை என்று நேற்று மீண்டும் முஸ்லிம் அமைச்சர்களிடம் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

அம்பாறைச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்கென ஏற்படுத்தப்பட்ட விசேட பொலிஸ் குழு, தமது அறிக்கையைத் தன்னிடம் கையளித்திருப்பதாகத் தெரிவித்த பிரதமர், பிணையில் விடுதலை செய்யப்பட்ட சந்தேகநபர்களை மீளக் கைது செய்து, உரிய விசாரணைகளை மேற்கொண்டு சட்டத்தின் முன் நிறுத்துவதாகவும் தெரிவித்தார் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறி யுள்ளார்.

நேற்று மாலை 3.00 மணியளவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், கபீர் ஹாசிம் உட்பட முஜிபுர் ரஹ்மான் எம்.பி, சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, அம்பாறைப் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்காவிட்டால் சட்டமும், ஒழுங்கும் கேலிக்கூத்தாகி விடும் என்றும், உடனடியாக இது தொடர்பில் விசாரணை செய்து, சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் சகல அரசியல்தலைவர்களும்பிரதமரிடம் வலியுறுத்தினார் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரி வித்தார்.

அம்பாறைச் சம்பவம் முஸ்லிம் களை வேதனையடையச் செய்துள்ளது. சட்டத்தை நிலை நாட்ட வேண்டிய பொலிஸார் குற்றவாளிகளைத் தப்பிக்க வைத்திருப்பதால் சிறுபான்மை மக்கள் இப்போது பொலிஸார் மீதுநம்பிக்கை இழந்துள்ளனர்.

மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸார் இவ்வாறு நாடகம் நடத்தியிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறான பொலிஸார் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காவிட்டால், சிறுபான்மைச் சமூகம் தமக்குத்தாமே பாதுகாப்பைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்தையும், சூழலையும் அரசு ஏற்படுத்தி விடு வதாய் அமையும் என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இந்த சந்திப்பின் போது, பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக் கருத்து வெளியிட்ட அவர்,

நீண்டதாமதத்துக்குப்பின்னர் காணாமற்போனோர் பணியகத்துக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதை வரவேற்கின்றோம். ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே இந்த நியமனங்கள் இடம் பெற்றிருக்கவேண்டும்.

நீண்ட இழுபறியால் மக்களுக்கு இதன் மீதான நம்பிக்கை தகர்ந்து விட்டது. மக்கள் நம்பிக்கை இழந்த பின்னர் இந்தப் பணியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர், உறுப்பினர்கள் சுதந்திரமானவர்கள். அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். அவர்கள் அரசின் அங்கம் அல்லர். ஆணையாளர்கள் துரிதமாகப் பணியகத்தைச் செயற்படுத்த வேண்டும்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பணியகத்தை ஆரம்பிக்க வேண்டும். விசாரணைக்குத் தேவையான வெளிநாட்டு தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். – என்றார். (ஐ)

## ஜனாதிபதிக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஹாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கறுப்புக் கொடி ஏந்திப் போராட்டம் நடத்தினார்.

மட்டக்களப்புக்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரி, அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

எனினும், அவர் பௌத்த விஹாரை, கிறிஸ்தவ தேவாலயம், பள்ளிவாசல் ஆகியவற்றுக்கும் செல்லவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தே சுமணரத்ன தேரர் கறுப்புக்கொடி போராட்டம் நடத்தியுள்ளார்.

மங்களராம விகாரை வாசல் கோபுரத்தில் ஏறி, நேற்று முன்தினம் மாலை அவர் இந்தப் போராட்டத்தை நடத்தினார்.

எனினும், ஏற்கனவே திட்டமிட்டதற்கு அமைவாக ஜனாதிபதி மைத்திரி நேற்றுக் காலை அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டு, அங்கிருந்து கொழும்பு திரும்பினார்.

இதேவேளை, கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரி மட்டக்களப்புக்குப் பயணம் செய்திருந்தவேளை மங்களராமய விகாரைக்கும் பயணம் செய்யவேண்டுமென அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கோரியிருந்தார். எனினும், ஜனாதிபதி அங்கு செல்லாததால் ஆத்திரமடைந்த அவர், ஜனாதிபதியின் பெயரில் அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல்லை உடைத்து சேதப்படுத்திச் சர்ச்சைக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## 25 வீதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

25 சதவீதப் பெண் பிரதிநிதித்துவத்தை

உறுதிப்படுத்த அரசு கட்டுப்பட்டுள்ளது. 15 உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவது தொடர்பான நெருக்கடிகள் காணப்படுகின்றன.

ஊழல் நிறைந்த விருப்பு வாக்கு முறைமையை ஒழித்து கிராமத்திற்குப் பொறுப்புக் கூறும் மக்கள் பிரதிநிதியை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. – என்றார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம் நடந்தது.

புகையிலை மற்றும் மது பானச்சாலைகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாகவே இந்த விவாதம் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாவை சேனாதிராசா ஆகியோர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், குடாநாட்டில் காணப்படும் மதுபானச்சாலைகளின் அதிகரிப்பு தொடர்பாகவும், அவற்றைக் குறைக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது, அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மதுபானச்சாலைகளுக்கான அனுமதிக்காகப் பருத்தித்துறை பிரதேச செயலகம் அனுமதி கோரியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

இதற்குப் பருத்தித்துறை பிரதேச செயலர், நான்கு மது பானச்சாலைகளைப் புதிதாகத் திறப்பதற்கு அனுமதி கோரவில்லை. ஏற்கனவே இயங்கி வரும் மதுபானச்சாலையின் வருடாந்த அனுமதி நீடிப்புக்கே அனுமதி கோரப்பட்டுள்ளது. அதற்கு அனுமதி கொடுக்கலாம் என ஏற்கனவே பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும் வடக்கு மாகாண அவைத் தலைவர் சிவஞானம், அந்த அனுமதியை வழங்குவதைத் தாம் நிராகரிப்பதாகக் கூறினார். இதனை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வழிமொழிவதாகக் குறிப்பிட்டார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் எதிர்ப்பு தெரிவித்தார். அதாவது அந்த மதுபானச்சாலைக்கு அனுமதி வழங்குவதற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம் எடுத்துள்ளநிலையில் தற்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நிராகரித்தால் இனிமேல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தேவையில்லயா? என அவர் வினாவினார்.

ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த இந்த மதுபானச்சாலைக்கு எதிராக எந்த வொரு கருத்துக்களும் முன்வைக்கப்படாத நிலையிலேயே அதற்கான அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதனை அடுத்து அந்த மது பானச்சாலைகளுக்கு அனுமதி வழங்குவதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று புகையிலை விற்பனையாளர்களிடம் இருந்து பொதுசுகாதாரப் பரிசோதகர் புகையிலையைப் பறித்து சென்று வழக்குத் தாக்கல் செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் குறிப்பிட்டார். அத்துடன் புகையிலை உற்பத்தி செய்வதைத் தடுக்காமல் ஏன் அதனை விற்பவர்களைத்தடுக்கவேண்டும்எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு உதவி மதுவரி ஆணையாளர், தற்போது புகையிலையை விடுத்து மாற்றுப் பயிர்ச் செய்கைக்குச் செல்வதற்காக 2020ஆம் ஆண்டு வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் புகையல்லா புகையிலையை விற்கத்தடைஎனவும் குறிப்பிட்டார். அதாவது புகையிலையை மெல்வதற்கு விற்கத் தடை எனவும் கூறினார்.

இதனையடுத்துச் சபையில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

வடக்கு மாகாணத்தில் புகையிலை மெல்லுவதால் ஏற்படும் பாதிப்பானது அதிகமாகவுள்ளதாலேயே தாம் வடக்கில் இதனை கடுமையாக அமுல்படுத்துவதாக வடமாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இறுதியில் மதுபானம், புகையிலை பாதிப்புக்கள் தொடர்பான எந்தவிதமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படமாலேயே கூட்டம் முடிந்தது. (ஐ-7)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும், இவ்விடயத்தில் ஐ.நா. தலையிட்டு உடனடித் தீர்வு வழங்கவேண்டுமெனக் கோரியும், கடந்த 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் விசாரணை நடத்த வேண்டுமென வலியுறுத்தியும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, 'கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மனிதப் படுகொலையை ஐ.நா. கண்டு கொள்ளாததைப் போன்று, தற்போது சிரியாவில் இடம்பெறும் மனிதப் படுகொலையையும் கண்டுகொள்ளவில்லை', '2009 இல் முள்ளிவாய்க்கால், 2018 இல் சிரியாவா?', 'பாலகன் பாலச்சந்திரன் படுகொலைக்கு நீதி வழங்கு', ஈழ மக்களின் இன அழிப்புக்கு நீதி எப்போது?', 'இன்னுமொரு முள்ளிவாய்க்கால் வேண்டாம்' உள்ளிட்ட பல வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளையும்,

சிரியாவில் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்ட காட்சிகள், அவர்களின் துன்ப துயரங்களை எடுத்துக் காட்டும் காட்சிகள் அடங்கிய புகைப்படங்களையும் போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

அதன்பின்னர், முல்லைத்தீவு தபால் அலுவலகத்தில் இருந்து ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு மனு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், புவனேஸ்வரன் மற்றும் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் பிரதேச சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர். (ஐ-7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பணியகத்தின் கிளைச் செயலகங்கள் வடக்கு, கிழக்கில் அமைக்கப்படவேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகளும், தமிழ் அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலர் சிவஞானசோதி, தேவைகளின் அடிப்படையில் பிராந்திய ரீதியான செயலகங்களை அமைப்பதற்குக் காணாமற்போனோர் பணியகச்சட்டம் இடமளிக்கிறது.

இந்தச்சட்டத்தின்படி, கொழும்பில் தலைமைப் பணியகம் இருக்கும். பிராந்தியச் செயலகங்களைப் பொருத்தமான இடங்களில் அமைப்பது குறித்து சுதந்திர ஆணைக்குழுவே தீர்மானிக்க முடியும்.

பிராந்திய ரீதியாக அமைக்கப்படும் செயலகங்கள் எப்போதும் நிரந்தரமானதாக இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு இடத்தில் உள்ள செயலகத்தை இன்னொரு இடத்துக்கு மாற்ற முடியும். – என்றார். (ஐ)

காலைக்கதிர்
Kalaikkathir





# வில்லியம்சன் சதம் வீண்

## 4 ஓட்டங்களில் இங்கிலாந்து திரில் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் கேன் வில்லியம்சன் கடைசி வரை நின்றும், நியூஸிலாந்து பரிதாபமாக தோல்வியைச் சந்தித்தது.

நியூஸிலாந்து - இங்கிலாந்து இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் 3ஆவது போட்டி வெலிங்டனில் நேற்று நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து, களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து மோர்கன் (48 ஓட்டங்கள்), பென் ஸ்டோக்ஸ் (39 ஓட்டங்கள்), பட்லர் (29 ஓட்டங்கள்), மொயீன் அலி (23 ஓட்டங்கள்) ஆகியோரின் ஆட்டத்தால் 50 ஓவரில் 234 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

பின்னர் 235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூஸிலாந்து துடுப்பாடத் தொடங்கியது. மார்ட்டின் கப்தில், கெலின் முன்றோ ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். மார்ட்டின் கப்தில் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து முன்றோ உடன் கப்டன் கேன் வில்லிம்சன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. கொலின் முன்றோ 62 பந்தில் 49 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 2ஆவது ஜோடியாக இருவரும் இணைந்து 80 ஓட்டங்கள் எடுத்தனர்.

அதன்பின் வந்த சாப்மேன் (8 ஓட்டங்கள்), ரொம் லாதம் ( ஓட்டமில்லை), நிக் கோல்ஸ் (ஓட்டமில்லை), கிராண்ட்ஹோம் (3 ஓட்டங்கள்) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் நியூஸிலாந்துக்கு நெருக்கடி ஏற்பட்டது. 7ஆவது விக்கெட்டுக்கு கேன் வில்லியம்சன் உடன் சான்ட்னெர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதே வேளையில் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் நேர்த்தியாக பந்து வீசி அதிரடி ஆட்டத்திற்கு தடைபோட்டனர். சான்ட்னெர் 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் விளையாடிய கேன் வில்லியம்சன் 133 பந்துகளை சந்தித்து சதம் அடித்தார். சான்ட்னெர் ஆட்டமிழக்கும் போது நியூஸிலாந்து 45.2 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 199 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

கடைசி 28 பந்தில் 36 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கேன் வில்லியம்சன் களத்தில் இருந்தார். டாம் குர்ரான் மற்றும் வோக்ஸ் ஆகியோரின் நேர்த்தியான பந்து வீச்சால் நியூஸிலாந்து அணியால் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 230 ஓட்டங்கள் மட்டுமே எடுக்கமுடிந்தது. இதனால் பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்து 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



கேன் வில்லியம்சன் 143 பந்தில் 112 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். முன்னணி வீரர் சதம் அடித்தும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த நிலையிலும் தோல்வியடைந்தமை நியூஸிலாந்துக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

# டோனியிடம் நுணுக்கங்களை கற்றுக்கொள்ள விரும்புகிறேன்



மார்க் வுட் கருத்து

டோனி, பிராவோவிடம் இருந்து நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன் என்று இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க்வுட் கருத்து தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஆட உள்ள இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் 28 வயதான மார்க்வுட் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாட இருப்பதை மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். சிறந்த போட்டியான ஐ.பி.எல் லில் ஆடுவது மட்டுமின்றி அதில் சிறந்த அணியில் விளையாடும் வாய்ப்பை நான் பெற்று இருக்கிறேன்.

சிறந்த அணியில் இடம் பிடித்து விளையாடுவதை யார் விரும்பாமல் இருப்பார்கள்? அந்த வகையில் நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. அதுபோல் எனது அணியின் வெற்றியில் நான் முக்கிய பங்கு வகிப்பேன் என்று நம்புகிறேன்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் டோனி கிரிக்கெட் அறிவு மிக்கவர். நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிகரமாக சமாளிப்பது எப்படி? என்பதில் கைதேர்ந்தவர். அவரிடம் இருந்து நெருக்கடியை சமாளித்து வெற்றிகரமான வீரராகச் செயற்படுவது எப்படி என்பதை அனுபவபூர்வமாக கற்றுக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு இந்தப் போட்டித் தொடர் உதவிகரமாக இருக்கும். அதே போல் சென்னை அணியில் முன்னணி வீரராக வெய்ன் பிராவோ உள்ளார். அவரிடம் இருந்து பந்து வீச்சுக் கலையை நேர்த்தியாக கற்றுக்கொள்ள ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# டி வில்லியர்ஸ் ஓய்வு?

தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ், ஆஸ்திரேலிய தொடருடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்னாபிரிக்க வீரர் டி வில்லியர்ஸ், கடந்த 2004 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். டெஸ்ட், ஒருநாள், ரி-20 என அனைத்து விதமான கிரிக்கெட்டிலும் சிறப்பாக விளையாடி தனி முத்திரை பதித்தார்.

டி வில்லியர்ஸின் தலைமையில் 2015 உலக கோப்பையை தென்னாபிரிக்கா தான் வெல்லும் என சர்வதேச அளவில் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், எதிர்பாராத விதமாக அரையிறுதிப் போட்டியில் நியூஸிலாந்திடம் தோற்று தென்னாபிரிக்கா வெளியேறியது. அப்போது கப்டன் டி வில்லியர்ஸ் மைதானத்திலே கண்ணீர் விட்டு அழுதார்.

இவ்வாறு சர்வதேச அளவில் சிறந்த வீரராக திகழும் டி வில்லியர்ஸ், ஆஸ்திரேலிய தொடருடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால்



இதுதொடர்பாக டி வில்லியர்ஸ் இன்னும் அதிகார பூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும், டி வில்லியர்ஸ் துடுப்பாடிக் கொண்டிருக்கும் போது , கடைசித் தொடரில் அவர் ஆடிக்கொண்டிருக்கிறார் என வர்ணனையாளர் தெரிவித்தார்.

இதன்மூலமே டி வில்லியர்ஸ் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப் போகும் தகவல் வெளியானது. இதுதொடர்பாக விரைவில் டி வில்லியர்ஸ் அதிகாரபூர்வமாக அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பம்

மேற்கிந்தியத்தீவு உட்பட 10 அணிகள் பங்கேற்கும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்று ஸிம்பாப்வேயில் இன்று ஆரம்பமாகின்றது.

12ஆவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2019) மே 30 ஆம் திகதி முதல் ஜூலை 14ஆம் திகதி வரை இங்கிலாந்தில் இடம்பெறவுள்ளது. சிறிய அணிகளின் வருகையால் போட்டியில் சுவாரஸ்யம் குறைந்து விடுகிறது என்று விமர்சனங்கள் எழுந்தமையால் அணிகளின் எண்ணிக்கை 14 இல் இருந்து 10 ஆகக் குறைக்கப்பட்டு விட்டது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 30 ஆம் திகதி நிலைவரப்படி ஒரு நாள் போட்டி அணிகளின் தரவரிசையில் முதல் 8



இடங்களை வகித்த தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, இந்தியா, ஆஸ்திரேலியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் போட்டியை நடத்தும் இங்கிலாந்து ஆகிய 8 அணிகள் நேரடியாக 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றன. தரவரிசையில் 9ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டதால் முன்னாள் சம்பியனான மேற்கிந்தியத்தீவால் நேரடியாகத் தகுதி பெற முடியவில்லை.

எஞ்சிய இரு அணிகள் தகுதிச் சுற்று மூலம் தேர்வு செய்யப்படுகின்றன. இதன்படி உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான தகுதிச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பித்து 25ஆம் திகதிவரை ஸிம்பாப்வேயில் அரங்கேறுகிறது. தகுதிச் சுற்றில் களம் காணும் 10 அணிகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ பிரிவில் அயர்லாந்து, நெதர்லாந்து, பப்புவா நியூகினியா, ஐக்கிய அரபு அமீரகம், மேற்கிந்தியத்தீவு ஆகிய அணிகளும், பி பிரிவில் ஆப்கானிஸ்தான், ஹொங்கொங், நேபாளம், ஸ்கொட்லாந்து, ஸிம்பாப்வே ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் 3 இடங்களைப் பிடிக்கும் அணிகள் சூப்பர் சிக்ஸ் சுற்றுக்குள் நுழையும்.

சூப்பர் சிக்ஸ் சுற்றில், ஒவ்வொரு அணியும் லீக் சுற்றில் சந்திக்காத மற்ற மூன்று அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். அதே சமயம் லீக்கில் தங்களால் வீழ்த்தப்பட்ட அணி சூப்பர் சிக்ஸ் சுற்றுக்கு வந்தால் அதற்குரிய புள்ளியையும் எடுத்து வர முடியும். சூப்பர் சிக்ஸ் முடிவில் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறுவதுடன், உலக கோப்பைப் போட்டிக்கும் தகுதி பெறும்.

# Anchor
Since 1886

Daily for Life




அங்கரின் புதிய அறிமுகமான அங்கர் றிங்கிங் யோக்கட் (Drinking Yoghurt) தற்போது மங்கோபெசன் (75 ரூபா) மற்றும் வனிலா (70 ரூபா) சுவைகளில் அறிமுகமாகியுள்ளது. உங்களின் விசேட நிகழ்வுகள் மற்றும் மங்கல நிகழ்வுகளுக்குத் தேவைப்படும் போது மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




**தொடர்பு கொள்ளவேண்டிய எமது தொலைபேசி இலக்கம்**

**077 735 0490**
**021 222 2991**

**அங்கர் உற்பத்திகளின் யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்**

S.V.முருகேசு
இல.154, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.